LONGMANS' VERNACULAR SERIES FOR MADRAS.

LONGMANS' TAMIL READING BOOK

FOR THE

THIRD STANDARD

(CLASS IV)

BY

W. DURAISWAMI AIYANGAR

AND

T. CHELVAKESAVAROYA MUDALIAR, M.A.,

Pachaiyappa's College, Madras

NEW IMPRESSION

லாங்மன்ஸ் தமிழ் வாசக புஸ்தகம்

மூன்றாம் வகுப்பு

LONGMANS, GREEN & CO.

167, MOUNT ROAD, MADRAS

BOMBAY AND CALCUTTA

லாங்மன்ஸ் க்ரீன், அண்ட் கம்பனி

167, மௌன்ட்ரோட், மதராஸ்

பொம்பாய், கல்கத்தா

1920

T.12664

All Rights Reserved. [விலை, 4 அணா.

(Approved by the Director of Public Instruction, Madras, for Schools under Public Management and for all Recognized Schools.)

T.R. III. தவளை : కప్పలు

LONGMANS' VERNACULAR SERIES FOR MADRAS.

LONGMANS' TAMIL READING BOOK

FOR THE

THIRD STANDARD

(CLASS IV)

BY

N. DURAISWAMI AIYANGAR

AND

T. CHELVAKESAVAROYA MUDALIAR, M.A.,

Pachiyappa's College, Madras

NEW IMPRESSION

லாங்மன்ஸ் தமிழ் வாசக புஸ்தகம்

மூன்றும் வகுப்பு

LONGMANS, GREEN & CO.

167, MOUNT ROAD, MADRAS

BOMBAY AND CALCUTTA

லாங்மன்ஸ் க்ரீன், அண்ட் கம்பனி

167, மௌண்ட்ரோட், மதராஸ்

பொம்பாய், கல்கத்தா

1920

Price, As. 4] *All Rights Reserved.* [விலை, 4 அணு.

(Approved by the Director of Public Instruction, Madras, for Schools under Public Management and for all Recognized Schools.)

PREFACE

This series of Readers is designed to meet the requirements of Elementary and Secondary Schools as laid down in the Instructions recently issued by the Madras Educational Department.

The subject matter of the Prose lessons is varied and so presented as to arouse the interest of the child. The principle adopted in the choice of material for each reading lesson is that of proceeding from the known to the unknown. The transition from things near and well known, to things remote and strange is gradual and natural. Abstract ideas have been generally avoided. Care has been taken to cultivate the power of observation and imagination of children. Every facility has been afforded to the teacher for correlating object lessons, composition and kindergarten occupations with reading lessons.

These Readers have been written in simple 'modern idiomatic' style. The more complex notions of language are built up by successive steps from elementary ideas. Most of the Sanskrit and foreign words have been transliterated.

Specimen questions bearing on the text have been added at the end. These will be of help to the teacher in drilling children in oral and written composition and drawing.

In the First Standard Reader, wherever possible, *Sandhis* have been avoided, and their introduction in this series of Readers is gradual and progressive.

A novel and striking feature of the early Readers is the introduction of nursery rhymes and ballads set to music which can be easily sung with the help of the notations given therein.

We take this opportunity of acknowledging our indebtedness to Mr. P. T. Srinivasa Aiyangar, M.A., Principal, Mrs. A. V. N. College, Vizagapatam, for having offered us very valuable suggestions when the book was in course of revision, and to Mr. M. V. Ramanuja Chariar, Tamil Pandit, Government College, Kumbakonam, for having kindly read through the proofs.

W. D.
T. C. M.

முகவுரை

லாங்மன்ஸ் தமிழ் வாசக புஸ்தகங்கள், எலிமென்டரி ஸெகெண்டரி பாடசாலைகளின் பொருட்டாகச் சென்னை வித்யாவிசாரணை அதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கிற விதிகளை யொட்டி எழுதியிருக்கின்றன.

வசன பாடங்களில் விளக்கியிருக்கிற விஷயங்கள் பலவிதமாக இருப்பதோடு, பாலர்களுக்கு உத்ஸாஹம் உண்டாக்கும் விதமாகவும் இருக்கும். தெரிந்த ஸங்கதிகளைக்கொண்டு தெரியாத ஸங்கதிகளை விளக்குவது கல்வி கற்பிக்கும் முறையாகையால், ஒவ்வொரு பாடத்திலும் கற்பிக்கவேண்டிய ஸங்கதிகள் ஏற்றபடி தோரணையாக அமைத்து எழுதியிருக்கும். சிறுவர்களால் அறியமுடியாத நுட்பமான விஷயங்களை நீக்கியிருப்பதன்றி, அவர்கள் சில விஷயங்களைத் தாங்களே கவனித்தறியும் சக்தியை அபிவ்ருத்தி செய்வதற்குரிய வழிகளும் அடங்கியிருக்கும். வாசக பாடங்களின் ஸம்பந்தமாகவே பொருட்பாடமும் வாக்யரசனையும் கிண்டர்கார்ட்டன் வேலையும் சேர்த்துக் கற்பித்தலான ஸாதனங்களும் அமைந்திருக்கும்.

இந்த வாசக புஸ்தகங்கள் தற்கால உலக வழக்கை யொட்டித் தெளிவான நடையில் எழுதியிருக்கின்றன. வாசகப் பாங்கு அந்தந்த வகுப்புக்குரிய புஸ்தகத்தில் அந்தந்தப் பாடத்தின் தரத்துக்கேற்றபடி அமைந்திருக்கும். ஸம்ஸ்க்ருத வார்த்தைகளும், வேறு பாஷைகளிலிருந்து வந்து வழங்குகிற வார்த்தைகளும், பெரும்பான்மையாய் அததற்குரிய உச்சாரணம் விளங்கும்படி அமைந்திருக்கும்.

பிள்ளைகளைக் கேள்வி கேட்கிற மாதிரி விளங்குமாறு கடைசியில் சில கேள்விகள் சேர்த்திருக்கின்றன. தாங்களே வாக்யங்களை அமைத்து வாயால் சொல்லவும் எழுதிக்காட்டவும் ட்ராயிங் எழுதவும் பிள்ளைகளைப் பயிற்சி செய்விப்பதில் இக்கேள்விகள் உதவியாகும்.

முதலிரண்டு வாசக புஸ்தகங்களில் புதுமையான ஒரு விசேஷ அம்சமாவது, குழந்தைப் பாட்டுக்களைச் செய்யுட்பாடத்தில் சேர்த்திருப்பதே. இந்தப் பாட்டுக்களை ஸ்வரப்படுத்தி எழுதியிருப்பதால் இவைகளை ஸுலபமாய்ப் பாடலாம்.

இந்தப் புஸ்தகத்தை இரண்டாம் பதிப்பின் பொருட்டுப் பரிசோதிக்கையில், விசாகபட்டணம் ஏ. வி. என். காலேஜ் ப்ரின்ஸிபல், ஸ்ரீ பி. டி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள், எம். ஏ., பல அரிய விஷயங்களை எடுத்துக்காட்டினர். கும்பகோணம் கவர்ன்மென்ட் காலேஜ் தமிழாசிரியர் ஸ்ரீமான் எம். வி. ராமாநுஜாசார்யரவர்கள் அச்சுப்பிழைகளைப் பரிசோதித் துதவினர். இவர்கள் செய்த நன்றியை வந்தனபூர்வமாகப் பாராட்டுகிறோம்.

W. D.
T. C. M.

CONTENTS

பொருள் அட்டவணை

Prose—வசனம்

பாடம்.		பக்கம்
1.	The Frog—தவளை	1
2.	The Cocoanut Tree—தென்னை	2
3.	Uses of the Cocoanut Tree—தென்னையின் உபயோகங்கள்	5
4.	A Friendly Joke—ஒரு தமாஷ்	6
5.	Air—வாயு	8
6.	Riches is not All—பணமே பெரிதன்று ...	10
7.	The Earth, the Sun, and the Moon—பூமி: ஸூர்யன்: சந்த்ரன்	12
8.	Water—ஜலம்...	14
9.	River and its Uses—நதியும் அதன் உபயோகங்களும்	15
10.	The Fish—மீன்	18
11.	Grammar Lesson 1—Language—பாஷை ...	20
12.	Some Useful Grains—உபயோகமுள்ள சில தான்யங்கள்	23
13.	Rama and the Ring—ராமனும் மோதிரமும் ...	25
14.	Some Useful Trees—உபயோகமான சில மரங்கள்	27
15.	A Shrewd Judge—தந்த்ரமுள்ள ந்யாயாதிபதி ...	30
16.	Health and Disease—ஆரோக்யமும் வ்யாதியும்..	32
17.	The Story of a Letter (Part I.)—ஒரு கடிதத்தின் வரலாறு (முதல் பாகம்)	34
18.	The Story of a Letter (Part II.)—ஒரு கடிதத்தின் வரலாறு (இரண்டாம் பாகம்)	36
19.	The Spider—சிலந்தி	38

பாடம். பக்கம்.

20. Milk—பால் 40
21. Grammar Lesson II.–The Noun-பெயர்ச்சொல் 43
22. Observation—கவனித்துப் பார்த்தல்... ... 45
23. Covetousness (Part I.)—பிறர் பொருளில் இச்சை (முதல் பாகம்).. 48
24. Covetousness (Part II.)—பிறர்பொருளில் இச்சை (இரண்டாம் பாகம்) 50
25. The Roots of Plants—மரவேர் 51
26. Universal Brotherhood—ஸகலரையும் ஸஹோதரராக பாவித்தல் 54
27. Stems of Plants—மரவரை 55
28. The Fortitude of a Woman—ஒரு பெண்பிள்ளையின் தைர்யம் 57
29. The Leaves of Plants—மரங்களின் இலைகள்... 59
30. Grammar Lesson III.–The Verb—வினைச்சொல் 61
31. Flowers—புஷ்பங்கள் 62
32. A Faithful Dog (Part I.)—நன்றியறிவுள்ள நாய் (முதல் பாகம்).. 65
33. A Faithful Dog (Part II.)—நன்றியறிவுள்ள நாய் (இரண்டாம் பாகம்) 67
34. Agriculture—க்ருஷி 70
35 Duties of Students–மாணுக்கருக்கு உரிய கடமைகள் 74
36. The Boy without a Genius (Part I.)—ஊகம் இல்லாத சிறுவன் (முதல் பாகம்) 76
37. The Boy without a Genius (Part II.)--ஊகம் இல்லாத சிறுவன் (இரண்டாம் பாகம்). ... 79
38. District Officers (Part I.)—ஜில்லா உத்யோகஸ்தர்கள் (முதல் பாகம்) 81
39. District Officers (Part II.)—ஜில்லா உத்யோகஸ்தர்கள் (இரண்டாம் பாகம்).. 85

Poetry —செய்யுள்

பாடம். பக்கம்.

1. The Greatness of Learning—கல்வியின் பெருமை (வெற்றி வேற்கை) 87
2. The Pride of Learning—வித்யா கர்வம் (ஔவையார்) ,,
3. The Good—நல்லார் (மூதுரை) ... ... ,,
4. Truth and Falsehood—மெய் : பொய் ... ,,
5. Fools and the like—மூடன் முதலியோர் ... ,,
6. Sandals—செருப்பு (தனிப்பாடல்) 88
7. Umbrella—குடை ,, ... ,,
8. Farming—உழவு ,, ... ,,
9. Ploughing—ஏர் நடத்தலின் சிறப்பு (ஏரெழுபது)... ,,
10. Growth of Crops—பயிர் வளர்தலின் சிறப்பு ... ,,
11. A Verse of Padikkasar's—படிக்காசரின் ஒரு பாடல் 89
12. The Excellence of Padikkasar's Poems—படிக்காசுப் புலவர் பாடலின் சிறப்பு ... ... ,,
13. Tirukkural—திருக்குறள் (திருவள்ளுவமாலை) ... ,,
14. Tit for Tat (a Narrative Piece) பதிலுக்குப் பதில் (பஞ்சதந்த்ரம்)... ... ... ,,
15. A Covetous Brahman—பொற்காப்புக்கு ஆசைப்பட்ட ப்ராம்மணன் 90
16. Dushtabuddhi's Self-destruction (a Narrative Piece) துஷ்டபுத்தி கெட்ட கதை 91

Model Questions and Exercises—மாதிரிக் கேள்விகளும் அப்யாஸங்களும் 94

வசனம்

1. தவளை

பட்சிபோல் முட்டையிடும், பட்சி அன்று; நாற்கால் ஜீவனைப்போல் தரையில் நடக்கும், நாற்கால் ஜீவனும் அன்று; மீன்போல் ஜலத்தில் நீஞ்சும், மீனும் அன்று. அது எது? அதுதான் தவளை. அதன் பிறப்பும் வளர்ச்சியும் அதிசயமானவை: ஆதியோடு அந்தமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

தவளைகள் இடுகிற முட்டைகள் கறுப்பாய் முதலில் கடுகு அவ்வளவு இருக்கும். ஒவ்வொரு முட்டையும் வெண்மையான வெல்லப் பாகுபோன்ற ஜவ்வின் மத்தியில் இருக்கும். இந்த ஜவ்வு மூடியிராவிட்டால், அவைகளைப் பட்சிகள் பொறுக்கியெடுத்துக்கொள்ளும்; அல்லது மீன்கள் பிடித்துத் தின்றுவிடும்.

தவளையின முட்டைகள்.

தவளை தான் இடுகிற முட்டைகளை கவனிப்பதேயில்லை. வெய்யில் எவ்வளவு நன்றாக உறைக்கிறதோ; அவ்வளவு விரைவில் அவை பொரிந்துவிடும். முட்டைபொரிந்ததும், பெரிய தலையும் தட்டை வாலும் மிகச் சிறிய உடலுமாக ஒரு சிறிய ஜந்து தோன்றும். இதுதான் தவளைக் குஞ்சு.

தவளைக்குஞ்சு.

தவளைக்குஞ்சுக்குத் தலையும் வாலும் தவிர வேறொன்றும் இராது. கால் இல்லாமையால் மீன்போல் ஜலத்தில்

செல்லும். வளர வளர, உள்ளும் புறமும் உருமாறிக்கொண்டே வரும்: வால் குறுகிவரும்: உடலிலிருந்து நாலு கால்கள் முளைத்துக்கொண்டுவரும்.

அப்படி வரும்போதே, காற்றில் மூச்சு விடவும் சட்டாந்தரையில் நடக்கவும் தவளைக்கு சக்தி உண்டாகும். ஆயினும் தவளை உள்ளபடியே நடக்காது: தத்தித் தத்திக் குதிக்கும். தவளைக்கு, முன்னங்கால்களைவிடப் பின்னங்கால்கள் நீளம். பின்னங் காலிலுள்ள தோலடி நீஞ்சுவதற்கு அநுகூலமானது.



தவளைக்குஞ்சு.

தவளையின் தலை தட்டையாக இருக்கும்: கண்ணும் வாயும் பெரியவை. நன்றாக வளர்ந்த தவளையின் நீளம் ஏறக்குறைய மூன்றங்குலம் இருக்கும்.

தவளை ஈக்களையும் பூச்சிகளையும் நத்தைகளையும் பிடித்துத் தின்னும். அவைகளின் பின்னால் அது தத்திப்போகாது. அவை அருகில் வருகிற வரையில் காத்திருந்து, பிறகு பிசுபிசுப்புள்ள தன் நாக்கை நீட்டி அவைகளைப் பிடித்து வாய்க்குள் இழுத்துக்கொள்ளும்.



தவளையின் நாக்கு.

2. தென்னை

தென்னையின் அடிமரம் தூண்போல் இருக்கும்: முப்பது அடிமுதல் அறுபது அடிவரையில் உயரமாக வளரும். அதன் உச்சியில் பதினைந்து இருபது மட்டைகள் இருக்கும். ஓலைகள் ஒழுங்காய் அடியகன்று நுனி

குறுகியிருக்கும். அவை, ஸாதாரணமாய், பதினாலடி நீளமும் மூன்றடி அகலமும் இருக்கும். அவற்றின் இடையில் தேங்காய் குலைகுலையாகத் தொங்கும்.

ஒவ்வொரு குலையிலும் ஐந்து முதல் பதினைந்து காய் வரையில் இருக்கும். வளமான இடங்களில் ஒவ்வொரு மரமும் வருஷவாரியில் எட்டுமுதல் பன்னிரண்டு குலைவரையில் தள்ளுவது உண்டு.

தென்னம்பூ நுனி கூர்மையான பாளையிலிருந்து புறப்படும். மழைகாலங்களில் தென்னை முப்பது நாற்பது நாளைக்கு ஒருதரம் பாளை வாங்கும். அதனால், மரத்தில், ஒரேகாலத்தில் பாளையும் பூவும் பிஞ்சும் காயும் பழமும் இருக்கும்.

ஒவ்வொரு மட்டையிலும் அடிமட்டையின் அடியில் பன்னாடை பற்றிக்கொண்டிருக்கும். பன்னாடை என்பது முரட்டுத்துணி போன்றது. ஓலை வளர்ந்து பழுப்பதற்குள் பன்னாடை அற்றுப்போய்விடும்.

தேங்காயின்மேல் கனதியான மட்டை இருக்கும். மட்டையின் புறணி மழமழப்பாகவும், அகணி நார் அடர்ந்தும் இருக்கும். மட்டையின் கீழே தேங்காய் ஓடு இருக்கும்.

தேங்காய் ஓட்டின் அடியில் மூன்று துளைகள் உண்டு. அவைகளுக்குக் கண்கள் என்று பெயர். மூன்று கண்களிலும் ஒன்றுதான் முளை எளிதில் ஊடுருவக்கூடியது. மற்ற இரண்டும், ஓட்டின் மற்ற பாகங்களைப்போலவே கெட்டியாக இருக்கும்.

இந்த ஓட்டின் உள்ளே பால்போல் வெண்மையான தேங்காய்ச்சில் ஏறக்குறைய அரையங்குலம் கனம் இருக்கும். அதனுள் இளநீர் இருக்கும். இந்த ஜலத்தைக் குடித்தால் குளிர்ச்சியாக இருக்கும்.

தென்னமரம் உஷ்ண தேசங்களில் கடற்கரையில் செழிப்பாய் வளரும்.

பழமொழிகள்.—1. ஆவும் தென்னையும் ஐந்து வருஷத்தில் பலன் கொடுக்கும்.

2. அண்ணன்பிள்ளையை நம்புகிறதைவிடத் தென்னம்பிள்ளையை நம்பலாம்.

3. தென்னையின் உபயோகங்கள்

தென்னை நமக்கு எத்தனையோ விதத்தில் உபயோக முள்ளது.

அது ஹிந்துக்களுக்கு உண்ணவும் உடுக்கவும் குடியிருக்கக் குடிசை கட்டிக்கொள்ளவும் உபயோகமாகிறது. தேங்காய், மதுரமும் புஷ்டியுமான உணவு. தேங்காய் ஓட்டினல் கிண்ணங்களும் அகப்பைகளும் மற்றும் அநேக வீட்டு ஸாமான்களும் செய்யலாம். மேலே சித்ரவேலை செய்து, ஓரத்துக்கு வெள்ளிகட்டி, தேங்காய் ஓட்டைப் பானபாத்ரமாக உபயோகிப்பது உண்டு. சிலர் இதை அடுப்பெரிக்க உபயோகிக்கிறார்கள்.



தென்னையின் சில பாகங்கள்.

தென்னையின் பலன்களில் முக்யமானது தேங்கா யெண்ணெய். அந்த எண்ணெயைத் தேங்காய்ச்சில்லிலிருந்து இறக்குவார்கள். அது, மெழுகுவர்த்தி செய்யவும் விளக்கு எரிக்கவும் கறி சமைக்கவும் உபயோகமாகிறது.

தேங்காய் நாரை ஜலத்தில் ஊறவைத்து மெத்தெனச் செய்து கித்தான் நெய்வார்கள்: புரிவிட்டுக் கயிறு திரிப்பார்கள். இந்தக் கயிறு உரமானது: நெடுநாள் தாங்கும்: கடல் நீரில் ஊறினாலும் அழுகிப்போகாது. இந்த நாரானது, மெத்தை திண்டு தலையணை முதலானவைகள் தைக்க உதவும்.

ஓலையால் கூடை முடையலாம்; துடைப்பம் கட்டலாம்; பாய் பின்னலாம்; பை செய்யலாம். ஓலையை முடைந்து குடி-

சைகளுக்குக் கூரை போடுவார்கள். புதிதாக நட்ட செடிகள் வெய்யிலில் தீய்ந்துபோகாதபடி அவைகளுக்கு ஆதாரவாகத் தென்னையோலையைக் கட்டுவார்கள். ஓலையின் நடுமட்டையைப் படவு தள்ளுவதற்குத் துடுப்பாக உபயோகிக்கலாம்.

தென்னம்பாளை செவ்வையாய் மலர்வதற்குமுன், அதன் நுனியைக் கத்தியால் சீவிப் பதமாகத் தட்டிவந்தால், அறுத்த இடத்திலிருந்து வெண்மையான கள் சொட்டும். மட்கலங்-களைக் கட்டிவைத்துக் கள்ளைச் சேகரித்து எடுத்துக்கொள்-வார்கள். காற்றுப் பட்டு, வெய்யிலின் வெப்பம் ஏறினால், இது பொங்கிப் புளித்து லஹரி ஆகிறது. இதைக் குடித்தால் மயக்கம் உண்டாகும்.

4. ஒரு தமாஷ்

ஒரு நாள் ஆறுபேர் நண்பர்கள் ஒரு திருவிழாவுக்குப் போகப்புறப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் மிகவும் பருத்த-வர். மற்றவர்களோடு பரபரப்பாக நடக்கமுடியாமல், அவர் கொஞ்சநேரம் பிற்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார். அவர் பெருமூச்சு வாங்கிக் களைத்து வருவதற்குள், மற்றவர்-கள் டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு வண்டியேறிவிட்டனர். அதைப் பார்த்து, பருமனுனவர் விரைவாகப்போய் வண்டியில் ஏறி, இருவர் உட்காரத்தகுந்த இடத்தில் கை கால்களைப் பரப்பிக்கொண்டு உட்கார்ந்தார். உடனே வண்டி புறப்பட்டது.

"நம்முடைய டிக்கெட்டுகள் எல்லாம் யாரிடத்தில் இருக்கின்றன?" என்று பருத்தவர் கேட்டார். ஒருவர், "என்னிடத்தில் ஐந்து இருக்கின்றன உங்களை இங்கே காணுமையால், நீங்களே உங்களுக்கு டிக்கெட் வாங்கிக்கொண்-டிருக்கலாம் என்று நினைத்தேன்" என்றார். இதைக் கேட்டுப் பருமனுனவர் பயந்து நடுங்கினர். மற்றவர்கள், "ஐயோ, அப்புறம் அகப்பட்டுக்கொண்டால், பொலீஸ்வசம் ஒப்பித்து

அபராதம் போடுவார்களே! என்ன செய்கிறது?" என்று சொன்னார்கள்.

அதன்மேல் அவர்களில் ஒருவர், "டிக்கெட் எக்ஸா-மினருக்குத் தெரியாமல் ஒளித்துக்கொண்டாலோ?" என்று கேட்டார். மற்றவர்கள், "அதுவும் ஒரு நல்ல உபாயம் தான். ஜனங்கள் உட்காருகிற பலகையின் கீழே புகுந்து



படுத்துக்கொள்ளும்" என்றார்கள். அப்படியே எல்லோரு-மாகக் கூடி, அவரை அந்த இடுக்கிலே துறுத்துத் தள்ளிப் படுக்கவைத்தார்கள்.

இவ்விதமாக ஒருமணி நேரம் கழிந்தது. கூடவந்தவர்-களுடைய காலில் இடிபட்டு, செம்மையாக அசையவும் மூச்சு-விடவும் முடியாமல், பருமனானவர், "ஐயோ, ஸுகமாக வீட்-

டில் இராமல் இப்படி வந்து கஷ்டப்படுவது எனக்குப் போதாத காலந்தானே?" என்று நினைத்து வருந்தினர்.

அவருடைய நண்பர்கள் அடிக்கடி, "டிக்கெட் எக்ஸாமினர் அதோ வருகிறான். தலையைத் தாழ்த்தும்; காலை உள்ளே மடக்கிக்கொள்ளும்; யாராகிலும் பார்க்கப்போகிறார்கள்; பேசாமல் இரும். என்ன ஐயா, என்ஜினைப்பார்க்கிலும் கெட்டியாகக் குறட்டை விடுகிறீர்?" என்று பலவிதமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

பருமனனவர், "அப்பா, என்னல் பொறுக்கமுடியவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் இப்படியே இருந்தால் உயிர் போய்விடும்" என்று கூவினர். அப்போது டிக்கட் எக்ஸாமினர் "டிக்கெட்! டிக்கெட்! ஐயா, டிக்கெட் எடுங்கள்" என்று கூவிக்கொண்டே வந்தான். கொஞ்ச நேரம் எல்லோரும் பேசாமல் இருந்தார்கள். டிக்கெட் எக்ஸாமினர் டிக்கெட்டுகளை எண்ணுவதைப் பருமனனவர் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தார்.

டிக்கெட் எக்ஸாமினர் நறுக்குநறுக்கென்று ஆறு டிக்கெட்களைக் கத்தரித்து, "ஆறு டிக்கெட் இருக்கின்றன. ஒரு நபர் எங்கே?" என்று கேட்டான். ஒரு நண்பர், "ஐயா, அவருக்கு உடம்பு கொஞ்சம் அசௌக்யம். அதோ படுத்திருக்கிறார்" என்று சொன்னர். அதைக் கேட்டு எல்லோரும் நெடுநேரம் கக்கட கக்கடவென்று நகைத்தார்கள்.

5. வாயு

ஜலம் நிரம்பிய ஒரு குடத்தை எடுத்துச் சாய்த்தால், அதிலுள்ள ஜலமெல்லாம் கொட்டுண்டுபோய்விடும். கொட்டிப் போன பிறகு, குடத்தில் ஒன்றுமில்லை என்கிறோம். ஆயினும் குடத்துக்குள் வேறொரு வஸ்து நிரம்பியிருக்கும். இப்படி நிரம்பியிருக்கிற வஸ்து வாயு. அதை நாம் பார்க்கமுடியாது.

ஆயினும், ஒரு கல்லை எப்படி வஸ்து என்கிறோமோ, அப்படியே வாயுவும் ஒரு வஸ்துதான்.

ஒரு கண்ணாடிக் குப்பி (புட்டி) யை எடுத்து, அதை ஒரு தண்ணீர்த்தொட்டியில் தலை கீழாக அமிழ்த்திப் பார்ப்போம். தொட்டியிலுள்ள ஜலம், குப்பியின் உள்ளே முழுவதும் ஏறுது. இதற்குக் காரணம் என்ன? ஜலத்தைக் குப்பியினுள்ளே முழுவதும் ஏறவொட்டாமல் ஏதோ ஒன்று தடுக்கிறது. அப்படித்தடுப்பது குப்பியிலுள்ள வாயுவே. அந்த வாயு ஜலத்தின்மேல் தாக்குகிறது : ஜலம் அந்த வாயுவின்மேல் தாக்குகிறது.



ஜலத்துக்கும் வாயுவுக்கும் தங்கியிருக்க இடம் வேண்டும். ஜலத்திலிருந்து குப்பியை வெளியில் எடாமல், குப்பியைக் கொஞ்சம் சாய்த்துப் பிடியுங்கள். அப்போது, ஜலத்திலிருந்து குமிழிகள் புறப்படும் : குப்பியினுள்ளே ஜலம் புகும்.

குப்பியைச் சாய்க்கும்போது, குப்பியிலிருந்த காற்று முன்போல் ஜலத்தின்மேல் நெருக்கித்தாக்காது. அதனால், ஜலம், குப்பியின் உள்ளே பாய்ந்து, அங்குள்ளவாயுவைவெளியில் தள்ளும். ஜலத்தைவிட வாயு லேசானது. ஆகையால், வாயு குமிழ்த்தெழுப்பி மேலே வரும்.



வாயுவுக்கு நிறமும் ருசியும் மணமும் இல்லை. அதற்கு அளவு உண்டு.

6. பணமே பெரிதன்று

ஓர் ஊரில் ஒரு தனவான் இருந்தான். அவன் மாளிகைக்கு அருகில் ஒரு நாணல்காடு இருந்தது. அது கூடை முடைந்து விற்கிற ஓர் ஏழைக்கு உரியது. அதை விலைக்கு வாங்கவேண்டும் என்று தனவான் எண்ணங்கொண்டான். அந்தக் காட்டைத் தவிர, அந்த ஏழைக்கு ஜீவனத்துக்கு வேறே வழி இல்லாமையால், அவனுக்கு அதை விற்க இஷ்டமில்லை. அதன்மேல், கோபம் உண்டாகி, தனவான், நாணல்களை நெருப்பிட்டு நாசமாக்கி, அந்த ஏழையையும் அடித்துத் தொந்தரவு செய்தான்.

இந்தக்கொடுமையை எளியவன் அரசனிடத்தில் முறையிட்டுக்கொண்டான். அரசன் தனவானை அழைத்து விசாரணைசெய்தான். தனவான் அரசனைப் பார்த்து, "அந்த அற்பப் பயல் என்னுடைய கௌரவத்தைச் சிறிதும் மதியாமையால், அவனை நான் அடித்தேன்" என்றான்.

அரசன் தனவானைப்பார்த்து, "உன்னுடைய முப்பாட்டன் விறகு வெட்டி ஜீவனம் செய்துவந்தான். பின்பு அவன் படைவீரனாகித் தனது வீரத்தைக் காட்டினபடியால், என்னுடைய பாட்டனார் ஸந்தோஷம் அடைந்து, அவனை மேன்மைப்படுத்தி தனவான் ஆக்கினார். உன்னுடைய முப்பாட்டன், ஆதியில் விறகுதலையனா யிருந்தபோதிலும், பிறகு தன்னுடைய திறமையினால் மேன்மை அடைந்தான். நீ அவன் தேடின ஆஸ்தியை வைத்துக்கொண்டு, ஒருவித யோக்யதையும் இல்லாமல் காலம் கழிக்கிறாயே. உனக்கு என்ன கௌரவம் உண்டு?" என்று சொன்னான்.

அப்புறம் அரசன், ஒரு மாலுமியை அழைத்து, "இவர்கள் இருவரையும் ஒரு கப்பலில் ஏற்றிக்கொண்டுபோய், ஒரு தீவில் நிர்வாணமாக விட்டுவிடு. இவர்களில் எவன்

திறமையுள்ளவன் என்பதை அறிவோம்" என்று உத்தரவு செய்தான். மாலுமி அப்படியே செய்தான்.

தனவான் அந்தத் தீவில் கட்டிக்கொள்ளத் துணி இல்லாமல் பனியிலும் குளிரிலும் பட்ட கஷ்டம் கொஞ்சம் அன்று. ஏழைக்கு ஒரு கஷ்டமும் தோன்றவில்லே. அவன் சில செடிகளேப் பிடுங்கி, அவைகளின் நாரை உரித்து நூல்திரித்து, தனக்கும் தனவானுக்கும் துணி செய்துகொண்டான்.

அந்தத் தீவில் வஸிப்பவர் நாகரிகம் இல்லாத காட்டு ஜனங்கள். அவர்களுக்கு அந்த எளியவன் கூடை முதலானவைகளே முடைந்துகொடுத்தான். அதனால் அவர்கள் ஸந்தோஷம் அடைந்து, அவனுக்கு ஆஹாரம் கொடுத்துவந்தார்கள். அவன் தானும் உண்டு தனவானுக்கும் கொடுத்து அவனேக் காப்பாற்றிக்கொண்டுவந்தான்.

தனவான் ஒரு வேலேயும் செய்யாமல் சும்மா இருப்பதைப் பார்த்து, அந்த நாகரிகமற்றவர்கள் அவனேக் கொல்லப்பார்த்தார்கள். அப்போது எளியவன், அவர்களிடத்தில் பரிந்து பேசி, தனவானேக் காப்பாற்றினன். அப்போது தனவானுக்கு அறிவு உண்டாயிற்று. எளியவன் அவ்வளவு செய்யாவிட்டால், அந்தத் தீவில் தான் மரித்திருகக வேண்டுமென்பது தனவானுக்குத் தெளிவாயிற்று.

இப்படிச் சிலகாலம் கழிந்த பிறகு, இருவரையும் அழைத்துவரும்படி அரசன் உத்தரவுசெய்தான். அவர்கள் வந்தவுடனே, தனவான், அரசன் முன்னிலேயில் தன்னுடைய அறியாமையையும் எளியவன் தனக்குச் செய்த உபகாரங்களேயும் ஒப்புக்கொண்டு, தன்னுடைய ஆஸ்தியில் பாதியை அந்த ஏழைக்குப் பங்கிட்டுக்கொடுத்தான்.

ஏழைகள் உழைப்பதால் தனவான்களுக்குப் பலவிதத்தில் நன்மை உண்டாகிறபடியால், தனவான்கள் ஏழைகளேத் தங்களுக்கு உபகாரிகளாக நினேக்கவேண்டும்.

7. பூமி: ஸூர்யன்: சந்த்ரன்

நாம் பூமியில் வஸிக்கிறோம். தினந்தோறும் பகலில் ஸூர்யனையும், பலதினங்களில் இரவில் சந்த்ரனையும் பார்க்கிறோம்.

மேலே காட்டியிருக்கும் படத்தைப் பாருங்கள். அங்கு மிகவும் பெரிதாயிருப்பது பூமி. பூமியைக்காட்டிலும் சிறியவனும் மற்றவைகளைக்காட்டிலும் பெரியவனும் இருப்பவன் சந்த்ரன்.

நமக்கு உஷ்ணமும் வெளிச்சமும் ஸூர்யனிடத்தில் கிடைக்கின்றன. ஸூர்யன் பகலில் வெளிச்சம் தருகிறான். சந்த்ரன் இரவில் வெளிச்சம் தருகிறான்.

பூமியும் ஸூர்யனும் சந்த்ரனும் பெரிய கோளங்கள். பூமியைவிட ஸூர்யன் அநேக மடங்கு பெரியவன். பூமியை விடச் சந்த்ரன் சிறியவன்.

ஸூர்யன் மிகப்பெரிய கோளம். அந்தக் கோளம் இவ்வளவு பெரிதென்று நிதானிக்க முடியாது: பூமியைப்போல் பத்து லட்சம் கோளங்கள் ஒன்ருய்க் கூடினல் எவ்வளவு



இருக்குமோ அவ்வளவு பெரியது. பூமியின் உருவத்துக்கும் ஸூர்யனுடைய உருவத்துக்கும் உள்ள வித்யாஸத்தை மேலே காட்டியிருக்கும் படத்தில் பாருங்கள்.

ஸூர்யன் ஒரு நெருப்புக்கோளம்: ஸ்வயம் ப்ரகாசத்தால் ஒளியைத் தருகிருன். நம்மெதிரில் தோன்றிலுைம் தோன்ரு-

விட்டாலும், ஸூர்யன், இரவும் பகலும், வருஷம் முழுவதும் ப்ரகாசித்துக்கொண்டே இருப்பான்.

பூமி ஸூர்யனைச் சுற்றி வருகிறது : சந்த்ரன் பூமியைச் சுற்றிவருகிறான்.

8. ஜலம்

உலகத்தில் நமக்கு அவச்யமாய் வேண்டிய பொருள்கள் சில உண்டு. அவைகளில் வாயுவும் ஜலமும் முக்யமானவை. வாயுவை சுவாஸிக்கிறோம் : ஜலத்தை பானம் பண்ணுகிறோம். இவையிரண்டும் இல்லாமல் ஒருவித ஜீவஜந்துவும் பிழைத்திருக்கமுடியாது.

வாயு உலகில் எங்கும் பரவியிருக்கிறது. ஜலம் சில இடத்தில் கிடைக்கும் : சில இடத்தில் கிடைக்காது. ஜலம் கிடைக்காத இடத்தில் யாதொரு செடியும் வளராது ; ஜீவஜந்துக்களும் மனிதரும் வஸிக்கமுடியாது.

மனிதன் உடம்பிலும் மற்ற ஜீவஜந்துவின் உடம்பிலும் செடிகளிலும் சில தாதுக்கள் சேர்ந்திருக்கும். அவைகளில் பெரும்பாகம் ஜலம். நம்முடைய உடம்பில் ஜலம் இல்லாத இடம் கிடையாது. நாம் மூச்சுவிடும்போது கொஞ்சம் ஜலம் வெளியாகிறது. ஸ்லேட்டின்மேல் மூச்சுவிட்டுப் பாருங்கள். அதில் படிகிற ஈரம் ஜலம்தானே. உடம்பு வேர்க்கும் போதும் நம்முடைய தேஹத்திலிருந்து ஜலம் வெளிப்படுவதைக் காண்கிறோம்.

செடிகளிலும் ஜலம் அதிகமாகவே இருக்கும். கொடிமுந்திரிப்பழத்தையும் கிச்சிலிப்பழத்தையும் பார்த்தால் இது நன்றாய் விளங்கும். வெங்காயம் முள்ளங்கி முதலிய ஸ்தூல பதார்த்தங்களிலும், ஜலம் முக்கால் பங்குக்கு அதிகமாகவே இருக்கும்.

ஜலம் ஒரு த்ரவ பதார்த்தம் : அதாவது ஓடுகிற வஸ்து.

ஜலம், பால், எண்ணெய் போன்ற நெகிழ்ச்சியுள்ள பொருள்களெல்லாம் த்ரவ பதார்த்தங்கள்.

ஜலத்துக்கும் வாயுவுக்கும் முக்யமான ஒரு பேதம் உண்டு. ஜலம் மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடும். வாயு அவ்வாறன்றிப் பக்க வாட்டமாய்ப் பரவும்; மேலே கிளம்பும்; கீழே இறங்கும். காற்றடிக்கும்போது ஒரு சிறிய இறகை-யாவது மெல்லிய கடுதாசித் துண்டையாவது காற்றில் எறிந்து என்ன நடக்கிறதென்று கவனித்துப் பார்த்தால் இந்த விஷ-யம் தெளிவாய் விளங்கும்.

ஜலம் பல இடங்களில் விசேஷமாய்க் கிடைத்தாலும், மிகவும் சுத்தமான ஜலம் கிடைப்பது அருமை. ஆகாசத்தி-லிருந்து பெய்கிற மழை ஜலம்தான் மிகவும் சுத்தமானது. அதில்கூட வாயுவில் உள்ள தும்பு தூசு புகை முதலிய கல்மஷங்கள் கலந்திருக்கும்.

பூமியில் பெய்கிற மழைஜலம், தரையின் மேல் ஓடி, அருவிகளிலும் ஆறுகளிலும் குளங்களிலும் ஏரிகளிலும் போய்ச் சேரும். தரைமேல் ஓடும்போது, ஜலமானது, மணல் புழுதி கல் முதலானவைகளை அடித்துக்கொண்டு போகும்.

9. நதியும் அதன் உபயோகங்களும்

உங்களில் அநேகர் நீரருவியைப் பார்த்திருக்கலாம். உங்-கள் ஊரில் நீரருவி இல்லையாயின், மழை பெய்த உடனே வீட்டை விட்டு வெளியில் போனால், அநேக சிறிய அருவி-களைப் பார்க்கலாம்.

நதி என்பது பெரிய நீரருவி. அதற்கு ஜலம் எங்கிருந்து கிடைக்கிறது தெரியுமா? நதி எங்கிருந்து வருகிறதோ அந்த முகமாகவே நதியோரமாகச் சென்றால், போகப்போக அது



பிறப்பிடம்முதல் கடல் வரையில் ஒரு நதி ஓடும் விதத்தைக் காண்பிக்கும் படம்.

சிறுத்துக்கொண்டே போவது தெரியவரும். கடைசியாக அது பிறக்கும் இடத்துக்குப் போய்ச் சேரலாம்.

ஸாதாரணமாய் நதிகள் மலையின் பக்கத்திலுள்ள ஒரு நீரூற்றில் பிறக்கும். நிலத்திலிருந்து குமிழியிட்டுப் புறப்படுகிற ஜலத்தை ஊற்றுநீர் என்கிறோம்.

மழை பெய்யும்போது மழை ஜலம் நிலத்தில் இறங்கிவிடுகிறது. அதற்கு ஏதாவது தடை நேர்கிற வரையில், மழை நீர் நிலத்தில் இறங்கிக்கொண்டே போகும்.

இவ்விதமாய் நிலத்திற்குள் ஓரிடத்தில் எவ்வளவு அடங்கக்கூடுமோ அவ்வளவு நீர சேர்கிறது. அதற்கு மேற்பட்டால், மேற்பட்ட நீர் ஊற்றாய்ப் புறப்படும்.

இவ்விதமாய்ப் புறப்படுகிற ஊற்றுநீரே நதி மூலம். இவ்வாறு புறப்படுகிற நீர், புறப்படும் இடத்திலேயே தங்கியிராமல் அப்பால் ஓடும். ஏனென்றால், நீர், கல்லைப்போலவும் மண்ணைப்போலவும், ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராது.

மேட்டிலிருந்து பள்ளத்துக்கு ஓடுவது நீரின் இயற்கை. ஸமபூமியாக இருக்கிற தேசத்தில்கூட, நதி பாய்கிற மார்க்கத்தினால், எந்தப் பக்கம் நிலம் சரிவாக இருக்கிறது என்பதை எளிதில் சொல்லலாம்.

நதி பாயும்போது தரையைக் கரைத்துக்கொண்டே போகும். உண்டாகிற இடத்திலிருந்து, போகப்போக, அகன்றுகொண்டே போகும். அதற்குக் காரணம் என்னவென்றால், சில நதிகள் இதில் வந்து பாயும்; இது மற்றொரு நதியில் கலக்கும். சில சிறிய நதிகள் சேர்ந்து ஒரு பெரிய நதி ஆகும். இவ்விதமாய்ப் போகப் போக, அகலமும் ஆழமும் அதிகரித்துக் கடைசியாய்க் கடலில் கலக்கும்.

நதி நமக்கு அநேக விதத்தில் உபயோகமுள்ளது. ஓரிடத்தில் மழை பெய்தால், அங்கேயுள்ள அதிகப்படி நீரை நதி வடித்துக்கொண்டு போகும். இதுதான் நதியினால் உண்டாகும்

முக்யமான உபயோகம். இவ்வாறு வடித்துக்கொண்டு போகா-விட்டால், நீர் பெருகி ஊர் முழுவதும் வெள்ளப்பெருக்கு ஆகிவிடும். அன்றியும், ஜலம் குறைவாக இருக்கிற சில ஊர்களில் நதிகள்தாம் ஜலாதாரம். இதுவும் அன்றி, ஸமுத்-ரத்திலிருந்து உள்நாட்டுக்கும் உள்நாட்டிலிருந்து ஸமுத்ரத்-துக்கும் தோணிகளிலும் கப்பல்களிலும் ஸாமான்களைக் கொண்டுபோகலாம்.



10. மீன்.

சில ஜீவ ஜந்துக்களுக்குக் கால்கள் இல்லாமையால், அவை நம்மைப்போல் நடக்கமாட்டா: இறகு இல்லாமையால், அவை பட்சிகளைப்போல் பறக்கமாட்டா. அவை பாம்புகளைப்-போல் தரைமேல் ஊர்ந்துபோகமாட்டா. அவைகளுக்கு உட-லில் மயிர் முளைத்திராது. அவை, நிலத்திலும் ஸஞ்சரிப்ப தில்லை; ஆகாயத்திலும் ஸஞ்சரிப்பதில்லை: ஜலத்தில் ஸஞ்சரிக்-கும். ஜலத்திலிருந்து வெளியில் எடுத்தால் அவை விரைவில் செத்துப்போகும். அவைகளுக்கு மீன்கள் என்று பெயர்.

மீனின் உடல் மத்தியில் அகன்றிருக்கும். தலையும் வாலும் குறுகியிருக்கும். அப்படி இருப்பதனுல்தான், மீன் ஜலத்தை எளிதில் ஊடுருவிச் செல்கிறது. இதைப் பார்த்துத்தான், படவுகளையும் கப்பல்களையும் நடுவில் அகல-மாகவும் நுனியில் குறுகலாகவும் செய்கிறுர்கள்.

கால்களாவது இறகுகளாவது இல்லாவிட்டாலும், மீனுக்குச் சிறகுகள் உண்டு. படவுக்குத் துடுப்புகள் உதவுவதுபோல, மீனுக்கு இந்தச் சிறகுகள் உதவும். நெடுகப் போவதற்கும் வளைந்து திரும்புவதற்கும் வால் உதவும்.



மீனின் சிறகு.

மீனின் உடல் பார்ப்பதற்குப் பளபளவென்றிருக்கும். தோல்முழுவதும், கெட்டியாய்த் தட்டையான செதிள்கள் வரிசை வரிசையாக இருக்கும். வீட்டுக் கூரையின்மேல் உள்ள ஓடுகள் போலே, இந்தச் செதிள்கள் ஒன்றின்மேல் ஒன்றாய்ப் படிந்து கவிந்திருக்கும்.



மீனின் செதிள்கள்.

நல்ல காற்று இல்லாவிட்டால் நாம் உயிரோடிருக்கமாட்டோம் அல்லவா ? அவ்வாறே மீனுக்கும் நல்ல காற்று வேண்டும். மீன் எவ்வாறு மூச்சு விடுகிறது தெரியுமா ? அது ஜலத்தை உட்கொள்ளும்: ஜலத்தில் காற்றுக் கலந்திருக்கிறது : இந்தக் காற்றுத்தான் மீனுக்கு ஆதாரம். மீனுக்கு மூச்சு விடுவதற்கென்று ஓர் உறுப்பு உண்டு. மீன், தான் உட்கொள்ளும் ஜலத்தை இதன் வழியாகத்தான் பாய்ச்சும். அந்த உறுப்பு, ஜலத்திலுள்ள வாயுவைமட்டும் இழுத்துக்கொண்டு, ஜலத்தை மறுபடியும் வெளிப்படுத்திவிடும்.

மீனின் உதிரம் உஷ்ணமாய் இராமல் சில்லென்றிருக்கும். ஆகையால், ஜலத்திலிருந்து பிடித்த உடனே

கையில் எடுத்தால், மீன் சில்லென்றிருக்கும். அதனால்-தான் மீன் குளிர்ந்த ஜலத்தில் ஸஞ்சரிப்-பதற்கு ஏற்றதாகின்-றது.



மீனின் சுவாஸக் கருவி.

பழமொழிகள்.—1. சிறு மீன் எல்லாம் பெரு மீனுக்கு இரை. 2 தூண்டிலில் அகப்பட்ட மீன் துள்ளினதினால் விடுவார்களா? 3. மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்கவேண்டுமா?

11. பாஷை.

உபாத்தியாயர். நீ எப்போதாவது ஊமையைப் பார்த்திருக்கிறாயா?

பிள்ளை. எங்கள் தெருவில் ஓர் ஊமை இருக்கிறான். அவனை அடிக்கடி பார்ப்பது உண்டு.

உபா. அவனோடு பேசியிருக்கிறாயா?

பிள்ளை. அவனுக்குப் பேசத் தெரியாதே.

உபா. உன்னை ஏதாகிலும் கேட்கவேண்டுமானால் அவன் என்ன செய்கிறான்.

பிள்ளை. கையினாலும் விரல்களாலும் ஜாடைகள் காட்டுகிறான். அடிக்கடி அவனிடம் போய் விளையாடுவது உண்டு. அதனால் அவன் காட்டுகிற ஜாடைகளை யெல்லாம் நான் வழக்கத்தால் தெரிந்துகொள்ளுகிறேன்.

உபா. அவன், தோலை உரித்து உள்ளே இருப்பதை

எடுத்து வாயில் போட்டுக்கொண்டு விழுங்குவதாக ஜாடை காட்டினால் என்னவென்று தெரிந்துகொள்வாய்?

பிள்ளை. வாழைப்பழம்.

உபா. அவன் தன்னுடைய வலக்கை விரல்களை மூடிக்கொண்டு கட்டை விரலை மாத்ரம் நீட்டிக்கொண்டு வாயினிடத்தில் கையை வைத்துக் காட்டினால் அவனுக்கு என்னவேண்டும் என்று தெரிந்துகொள்வாய்?

பிள்ளை. தாகத்துக்குத் தண்ணீர்.

உபா. உன் கையில் வாழைப்பழச் சீப்பு இருக்கிறதைப் பார்த்துக் கட்டைவிரலை மடக்கிக்கொண்டு மற்றவிரல்களைக் காட்டிக் கேட்டால் நீ என்னவென்று தெரிந்துகொள்வாய்?

பிள்ளை. அவனுக்கு நாலு பழம் வேண்டும் என்று.

உபா. அவனுக்கு நீ எதாகிலும் தெரிவிக்க வேண்டுமானால் என்ன செய்வாய்?

பிள்ளை. அவன் காட்டுகிறதுபோலவே நானும் சில ஜாடைகளைக் கையாலும் விரலாலும் காட்டுவேன்.

உபா. சாப்பிடுகிறது, தூங்குகிறது, ஓடுகிறது, சண்டை போடுகிறது முதலியவைகளை எப்படித் தெரிவிக்கிறான்?

பிள்ளை. கையாலும் காலாலும் அந்தந்த வேலையைச் செய்வதுபோல் செய்துகாட்டுகிறான்.

உபா. நாம் மற்றவர்களிடத்தில் எதையாகிலும் தெரிவிக்கவேண்டுமானால் என்ன செய்கிறோம்?

பிள்ளை. நாம் தெரிவிக்க வேண்டுகிறதை யெல்லாம் சொற்களால் தெரிவிக்கிறோம்.

உபா. ஸரி. ஊமைக்கும் நமக்கும் பேதம் என்ன?

பிள்ளை. அவன் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு கைக்குறிப்புச் செய்துகாட்டுகிறான். அவைகளை நாம் சொற்குறிப்புகளால் தெரிவிக்கிறோம்.

உபா. நாம் பாராத பொருளை ஊமை அதற்கேற்ற குறிப்பினால் காட்டும்போது இன்னதென்று தெரிகிறதா?

பிள்ளை. இல்லை. ஊமை பாராத பொருளை நாம் அதற்குரிய குறிப்பினால் காட்டும்போது, அது இன்னதென்று அவனுக்கும் தெரியாது.

உபா. ஒருவன் பார்க்காத பொருளை அதற்குரிய சொல்லால் சொல்லும்போது அது இன்னதென்று அவனுக்குத் தெரிகிறதா?

பிள்ளை. இல்லை. நாம் பாராத பொருளை ஒருவன் அதற்குரிய சொல்லால் சொல்லும்போது அது இன்னதென்று நமக்குத் தெரிகிறதில்லை.

உபா. ஊமை கையாலும் காலாலும் செய்கிற குறிப்புகளால் என்ன தெரிந்துகொள்கிறோம்.

பிள்ளை. அவன் நினைத்திருக்கிற பொருளையும் வேலையையும் இன்னதென்று தெரிந்துகொள்கிறோம்.

உபா. நாம் பேசுகிற சொற்கள் என்னசெய்கின்றன?

பிள்ளை. நாம் நினைத்திருக்கிற பொருள் அல்லது வேலை இன்னதென்று தெரிவிக்கின்றன. அன்றியும், பொருளின் தன்மையையும் வேலையின் தன்மையையும் தெரிவிக்கும்.

உபா. ஸரி. இப்பொழுது சொல் என்பது என்ன?

பிள்ளை. சொல் என்பது ஒருவர் நினைத்திருக்கிற பொருளையாவது வேலையையாவது மற்றொருவருக்கு இன்னதென்று தெரிவிக்க மனிதர் ஏற்படுத்தியிருக்கிற ஒருவகைக் குறிப்பேயாகும்.

உபா. எந்தப் பொருளுக்கு முன்னோர்கள் எந்தச் சொல்லை வழங்கி வந்தார்களோ, அப்படியே நாமும் வழங்குவது வழக்கம். இப்படி, பொருள்களுக்கும் வேலைகளுக்கும் இவைகளுடைய விசேஷணங்களுக்கும் ஒரு ஜாதியாரில் ஏற்-

பட்டிருக்கிற சொற்கள் எவ்வளவு உண்டோ, அவ்வளவுக்கும் மொத்தமாய் பாஷை என்று பெயர். இங்க்லிஷ்காரர் பேசுவது இங்க்லிஷ் பாஷை. முகம்மதியர் பேசுவது அரபி பாஷை. நாம் பேசுவது தமிழ் பாஷை.

12. உபயோகமுள்ள சில தான்யங்கள்

கோதுமை. பலவிதமான தான்யங்களிலும் கோதுமை மிகவும் மேலானது. ஏனென்றால், இது அதிக ஸத்து உள்ளது. கோதுமை பயிராகும் இடங்களில் கோதுமைதான் முக்ய உணவு. கோதுமை மாவினால் ரொட்டி செய்கிறார்கள். கோதுமை ரொட்டி மிகவும் புஷ்டியான உணவு.

கோதுமை மூன்று மாதத்துப் பயிர்: இரண்டு மூன்றடி உயரம் வளரும். பார்வைக்கு நெற்பயிர்போலவே இருந்தாலும், சிறிது வேற்றுமை உண்டு.

கோதுமைக் கதிரில் தான்ய மணிகள் அதிக அடர்த்தியாய் இருக்கும். அதிக உஷ்ணமும் அதிக குளிர்ச்சியும் இல்லாத தேசங்களில் கோதுமை நன்றாய் விளையும்.

சென்னை ராஜ்யத்தில் மேடான பாகங்களில் கோதுமை நன்றாய்ப் பயிராகும். ஆயினும் இந்தப் பயிரை ஒருவரும் இங்கே கவனிப்பதில்லை. சென்னையில் இறக்குமதியாகிற கோதுமை, முக்யமாய், கல்கத்தாவிலிருந்து வருகிறது.

சோளம். உணவுக்காக விளைவிக்கிற பயிர் வகைகளில் சோளம் மிகவும் பெரிதாயும் அழகாயும் இருக்கும். சோளச் செடி ஐந்து ஆறடி உயரம் வளரும்: நாணல்

போல் கணுக்கள் உள்ள தட்டும் பெரிய இலைகளும் உள்ளது. பல வர்ணமுள்ள புஷ்பக்கொத்து அதன் உச்சியில் குஞ்சம்போல் புஷ்பிக்கும்.



சோளக்கதிர்.

சோளச்செடி.

ஒவ்வொரு செடியிலும் இரண்டொரு கதிர் புறப்படும்: மூன்றுக்கு மேல் புறப்படாது. சோளக்கதிர் திரண்டிருக்கும். கதிர் முழுவதும், தான்ய மணிகள் நேர்வரிசையாய் நெருக்க-

மாய் ஓட்டியிருக்கும். ஒவ்வொரு வரிசையிலும் ஏறக்குறைய முப்பது மணிகள் முதல் ஐம்பது வரையில் இருக்கும்.

சோளம் பல நிறம் உள்ளது. பெரும்பான்மையாய் மஞ்சளும் வெளுப்பும் கலந்த நிறமாக இருக்கும். சோளத்தில் பல வகைகள் உண்டு. சோளப் பயிருக்கு நிலம் செழிப்பாக இருக்கவேண்டும். சோளத்தட்டு மாடுகளுக்குத் தீனியாகிறது.

கம்பு: கேழ்வரகு. இவை, மலிவான தான்யங்க ளாகையால், ஏழைகளுக்கு முக்யமான உணவு. அரிசியைப் போலவே, கம்பை முழுசாய்ச் சமைக்கலாம். கேழ்வரகை மாவாக அரைத்துக் களி கிளறுவார்கள்: கூழ் காய்ச்சுவார்கள்: அடை முதலிய பணியாரங்கள் செய்வார்கள். கம்பைவிடக் கேழ்வரகுக்கு ஜலம் அதிகம் வேண்டும். ஆனாலும் கேழ்வரகைவிடக் கம்பு உயரமாக வளரும். மாடுகளுக்கு வைக்கோலைவிடக் கேழ்வரகின் தட்டு புஷ்டியான தீனி.

13. ராமனும் மோதிரமும்

ராமன் என்பவன் ஒருநாள் ஸாயங்காலம் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். வருகிற வழியில் கடினமான ஒரு பொருள் காலில் தட்டுப்பட்டது. என்னவென்று குனிந்து பார்த்தான். கல்லிழைத்த மோதிரம் ஒன்று கிடந்தது. அதைக் கண்டு அதிசயித்தான்.

ராமனுடைய வகுப்பில் வாசிக்கும் கோபாலன் என்பவன், இதையெல்லாம் தூரத்திலிருந்து பார்த்து, ராமனிடம் ஓடிவந்து, அது என்னவென்று கேட்டான்.

ராமன். இது ஒரு மோதிரம். யாரோ அஜாக்ரதையாக வழியில் போட்டிருக்கவேண்டும்.

கோபாலன். எங்கே, பார்ப்போம்.

ராமன். இதை என்ன செய்யலாம்?

கோபாலன். செய்கிறது என்ன? எவ்வளவு நன்றாக இருக்கிறது! யார் வந்து 'இது என்னுடையது' என்று கேட்கப்போகிறார்கள்? நீயே வைத்துக்கொள்.

ராமன். அதாவது, திருடிக்கொள் என்கிறாயோ? அப்படிச் செய்யலாமா? நான் இதை எப்படி வைத்துக்கொள்ளலாம்?

கோபாலன். நீ வைத்துக்கொள்ளாவிட்டால், பின்னை யாரிடம் கொடுக்கப் போகிறாய்?

ராமன். ஏன், நாம் வீட்டுக்குப்போகிற வழியில் ஒரு பொலீஸ் சாவடி இருக்கிறது. அங்கே கொண்டுபோய்க் கொடுத்துவிடுகிறேன்.

கோபாலன். மோதிரத்துக்கும் பொலீஸாருக்கும் என்ன ஸம்பந்தம்?

ராமன். ஜனங்களையும் அவர்கள் ஸொத்தையும் காப்பது பொலீஸார் கடமை என்பது உனக்குத் தெரியாதா? பொலீஸார் நமது தெருக்களில் இரவில் கூவிக்கொண்டு ரோந்து வருகிறார்களே, பார்த்தது இல்லையா? கன்னக்கோல் திருடர் களவு செய்யாமல் இருக்கும்படி, அவர்கள் இரவில் ரோந்து வருகிறார்கள். நான் இதை அவர்களிடம் கொடுத்து இன்ன இடத்தில் இன்ன ஸமயத்தில் இன்ன ஸந்தர்ப்பத்தில் கண்டெடுத்தேன் என்று சொல்லிவிடுகிறேன். அதன்மேல் பொலீஸார் ஸொத்தின் ஸொந்தக்காரரைக் கண்டுபிடித்து, அதை அவர்களிடம் ஒப்பித்துவிடுவார்கள்.

கோபாலன். ஸரி. நீ ஏன் இவ்வளவு கஷ்டப்படவேண்டும்? அதனால் உனக்கு என்ன லாபம்?



ராமன். லாபம் கிடைக்காமல் போனால் போகிறது. இதைப் பொலீஸாரிடம் சேர்ப்பது என் கடமை. நான் என்கடமையைச் செய்துவிட்டால் என் மனஸுக்கு அமைதி உண்டாகும்.

இது நேரிட்டுச் சில நாள் ஆனபிறகு, உபாத்யாயர் ஒரு நாள் ராமனுக்குப் பத்து ரூபா நோட் ஒன்று கொடுத்தார். அப்போது அவர் மோதிரத்தைப்பற்றிய வரலாற்றை வகுப்பில் உள்ள பிள்ளைகளுக்குத் தெரியும்படி சொன்னார். அந்த நோட், மோதிரத்துக்கு ஸொந்தக்காரன் பொலீஸார் மூலமாக ராமனுக்கு அனுப்பிய வெகுமானம்.

14. உபயோகமான சில மரங்கள்

ஆலமரம். நம்முடைய தேசத்தில் மிகவும் அழகான மரங்களில் ஆலமரம் ஒன்று. அநேக மரங்களில் இல்லாத



ஒரு விசேஷம் இதனிடத்தில் உண்டு: கிளைகளிலிருந்து விழுதுகள் இறங்கும். இவை கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழ்நோக்கிச் சென்று, பூமியில் ஊன்றி வேர்விட்டு, மரக்கிளைகளுக்கு ஆதார-

மாகும். வருஷத்துக்கு வருஷம் இவை மேலும்மேலும் மிகுந்து, வரிசையாய்த் தூண்கள் நிறுத்தினது போல், மரத்தைச்சுற்றி வெகுதூரம் வரையில் பரவிக்கொண்டுவரும்.

ஆலமரத்தில் வயிரம் பிடிக்காது. அதனால் அது கட்டுவேலைகளுக்கு உபயோகமாகாது. ஆலமரத்துப் பட்டையிலிருந்து வடிகிற பிசின் போன்ற வெண்மையான பால் பல் வலிக்கும் கால் வெடிப்புக்கும் மருந்தாக உதவும்.

பழமொழிகள்.—1. ஆலும் வேலும் பல்லுக் குறுதி.
2. ஆலம் விழுது தாங்குகிறாற் போல.

புளியமரம். இது, கிளைகள் வளர்ந்து பரவி, இலைகள் அழகாகத் தழைக்கின்ற உயரமான மரம். இதன் புஷ்பம் சிவப்புக் கலந்த மஞ்சள் நிறம். புளியம்பழம், மூன்றங்குலம் முதல் ஐந்தங்குலம் வரையில் நீண்டு, கொஞ்சம் உருட்சியாய், வெளி ஓடு வேறு உள்ளே பழம் வேறாக இருக்கும். வெளி ஓடு எளிதில் நொறுங்கிவிடும். ஒவ்வொரு பழத்திலும் சில விதைகள் இருக்கும். பழம் கறிகளுக்கு இட்டுச் சமைக்க உதவும்: சில மருந்துகளுக்கும் உபயோகமாகும்.

மரம் உறுதியாகவும் பளுவாகவும் இருக்கும்: நெடுங்காலம் அழியாமல் இருக்கும் கட்டுவேலைகளுக்குப் புளிய மரத்தை உபயோகிக்கலாம். புளியங்கிளைகளைச் செங்கற்சூளை எரிக்கவும் அடிமரத்தைச் செக்குகள் செய்யவும் நமது தேசத்தில் உபயோகிக்கிறார்கள்.

பழமொழி.—புளியம் பழமும் ஓடும் போல.

மாமரம். மிகவும் மதுரமான பழங்களைத் தருகின்ற மரங்களில் மாமரம் ஒன்று. அது மிகவும் பெரிதாக வளரும். அடிமரம், ஸாதாரணமாய், கோணலின்றி நேராயிருக்கும். புஷ்பங்கள் சிறியவை. வெள்ளையும் மஞ்சளும் கலந்த நிறமாய் இருக்கும்.



மாங்காய்.

மாமரத்தில் பல வகைகள் உண்டு. தானாய் வளரும் மரத்தில் பழம் நன்றாக இராது. அதன் காய்கள் ஊறுகாய்போட உதவும். ஒட்டு மரத்தின் பழமானது, நார் இல்லாமல், ரஸம் நிரம்பி, மிகவும் மணமாயும் மதுரமாயும் இருக்கும்.

மாம்பலகை, பெட்டி கதவு முதலிய ஸாமான்கள் செய்ய உதவும்: அநேக கட்டுவேலைகளுக்கும் உதவும். ஈரம் தங்காமல் வைத்திருந்தால் இது நெடுநாள் வரையில் கெடாது. இது மங்கலான சாம்பல்நிறமா யிருக்கும்.

பழமொழி.—மா பழுத்தால் கிளிக்காம், வேம்பு பழுத்தால் காக்கைக்காம்.



பலாக்காய்.

பலாமரம். இது விரைவில் வளரும்: நிழல் கொடுக்கும். இதன் பழம் நல்ல ருசிஉள்ளது: புஷ்டி தருவது. பலாக்காய் கறி சமைக்க உதவும். பலாவில் அநேக வகைகள் உண்டு. தேன்பலாவின் பழம் மிகவும் இனிப்பானது: மற்ற ஜாதிப் பழங்களைவிட மேலானது. இந்த ராஜ்யத்தில், பலாமரம் மிகுதியாய் உள்ள பாகங்களில், இதன் காயை க்ஷாம காலத்தில் எளியவர்கள் தின்பார்கள்.

வாத்யங்களும் நாற்காலி முதலிய ஸாமான்களும் செய்ய உபயோகிக்கும் அழகிய மரங்களில் பலாமரமும் ஒன்று.

15. தந்த்ரமுள்ள ந்யாயாதிபதி

முன் ஒரு காலத்தில் ஒரு ரத்நவ்யாபாரி இருந்தான். அவன் பலதேசங்களில் பயணம் பண்ணி ரத்நவ்யாபாரம் செய்வது வழக்கம். ஒருமுறை, மிகவும் அருமையான ரத்நங்-

களையும் பூஷணங்களையும் எடுத்துக்கொண்டு, தன் குமாரனை-யும் வேலையாளையும் கூடவே அழைத்துக்கொண்டு போனான். சில காலம் அவன் தேசந்தேசமாய்ப் போய் வர்த்தகம் செய்த-தில் அவனுக்கு அதிக லாபம் கிடைத்தது. ஊருக்குத் திரும்பி வருகிற வழியில், அவன் விஷபேதி கண்டு இறந்துபோனான்.

உடனே வேலையாள், தான்தான் வர்த்தகனுடைய மகன் என்று சொல்லி, ஸொத்துக்களை யெல்லாம் கைப்பற்றிக்-கொண்டான். வர்த்தகனுடைய பிள்ளை பார்வைக்கு கம்பீர மில்லாதவன் ; கூச்சம் மாறாதவன். வேலையாளோ, பார்ப்-பதற்கு அழகாய் இருப்பவன் ; பாங்கு பரிசனை நன்றாய் அறிந்தவன். அதனால், ஸொத்து அவனதென்று நம்பி, அநேகர் அவனுக்கே அனுகூலமாக இருந்தார்கள். ஆயினும், இருவருக்கும் தக்க ஆதாரம் ஒன்றும் இல்லாமையால், அவர்-கள் ந்யாயாதிபதியிடத்தில் தங்கள் வழக்கை முறையிட்டுக்-கொண்டனர்.

ந்யாயாதிபதி இந்த முறைப்பாட்டைக் கேட்டு, உண்-மையை அறிய உபாயம் ஒன்றும் தோன்றாமல் கொஞ்ச நேரம் மயங்கியிருந்தார். அதன்மேல் ஓர் உபாயம் அவருக்குத்தோன்-றியது. அவர்களை ஒரு திரையின் பின்னால் நிற்கவைத்து, திரையில் இரண்டு துளைகள் செய்து அந்தத் துளைகளில் தலை-யைவிட்டு எட்டிப்பார்த்துக்கொண் டிருக்கும்படி செய்து, ஒரு ஸேவகனைக் கத்தியை உருவிக் கையில் பிடித்துக்கொண்டு எதிரில் நிற்கும்படி உத்தரவு கொடுத்தார்.

அப்புறம், “உங்கள் வாக்கு மூலங்களைக் கேட்டபின், ஸொத்துக்கு உரிமை இல்லாதவன் எவனென்று எனக்குத் தோன்றுகிறதோ, அவனுடைய தலையை வெட்டிவிடும்படி தண்டனை விதிக்கப்போகிறேன்” என்று சொல்லி, அவர் வழக்கை விசாரணைசெய்யத் தொடங்கினார். கொஞ்ச நேரம் வழக்கை வாதித்துப் பேசியிருந்து, “போதும். அந்தக் குற்ற-

வாளியின்தலையை வெட்டிவிடு" என்றுகூவினர். உடனே ஸேவகன் கட்சிக்காரர்கள் இருந்த பக்கமாய்க் கத்தியை வீசினன்.

கத்தி வீச்சுக்கு வேலையாள் பயந்து சிவுக்கென்று தலையை உள்ளே இழுத்துக்கொண்டான். வர்த்தகனுடையகுமாரன் அசையாமல் இருந்தான். இதுவே போதுமான ருஜு என்று நினைத்து ந்யாயாதிபதி வேலையாளைச் சிறைப்படுத்தினர்.

16. ஆரோக்யமும் வ்யாதியும்

ஓர் ஊரில் ஒரு வர்த்தகன் இருக்கிறன். அவனுக்கு ராமன் கோவிந்தன் என்று இரண்டு குமாரர்கள்உண்டு. அடுத்த படத்தில் திண்ணையின் மீது உட்கார்ந்துகொண் டிருப்பவன் மூத்தவனுகிய ராமன். திண்ணையின் கீழே தெருவில் பந்து அடித்துக்கொண்டிருப்பவன் இளையவனுகிய கோவிந்தன்.



ராமனுக்கு எட்டுவயது வரையில் தேஹத்தில் வலிமை இருந்தது. ஒரு நாள் தொழுவத்தில் விளையாடும்போது ஒரு முரட்டுக் காளை அவனை முட்டித் தள்ளிவிட்டது. முதுகில் காயம் பட்டு அதனல் அவன் பலமெல்லாம் போய்விட்டது. ஒவ்வொரு வேளை அதிகநோக்காடு உண்டாவதனல் அவன் பாயும் படுக்கையுமாக இருப்பான்.

கோவிந்தன் ஆரோக்யமாக இருக்கிறன்: நன்ருய் விளையாடுகிறன்: பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது பசியோடு வருகிறன். ராமன் உட்கார்ந்து கையில் புத்தகம் பிடித்துப்

படிக்க முடியாவிட்டால், கோவிந்தன் அவன் பக்கத்தில் உட்-கார்ந்து படிப்பது வழக்கம். அதுவும் அன்றி, பள்ளிக்கூடத்-திலும் விளையாட்டிலும் நேரிட்ட விசேஷங்களை அவனுக்கு அன்றன்று சொல்லிவருவான்.

ஆரோக்யம் என்பது என்ன? நோய் என்பது என்ன? கோவிந்தன் தன் தோழர்களோடு விளையாடுவதையும், சாப்-பாட்டு வேளைக்குப் பசியோடு வந்து சாப்பிடுவதையும், இர-வில் மெய்ம்மறந்து உறங்குவதையும் பார்த்தால், ஆரோக்யம் இன்னதென்று விளங்கும். ராமன் பலஹீனமாக இருப்பதை-யும், தொந்தரவு படுவதையும், பசியெடாமல் இருப்பதையும் பார்த்தால், நோய் இன்னதென்று விளங்கும்.

தற்செயலாக நேரிட்ட ஓர் ஆபத்தினலே ராமனுக்கு ஆரோக்யம் கெட்டது. ஒருவரிடத்திலிருந்து மற்றொருவரி-டம் தொத்திக்கொள்ளுகிற நோய்களால் அநேகருக்கு ஆரோக்-யம் கெடுவது உண்டு. அநேகருக்கு உண்ண உணவும், உடுக்-கத் துணியும், இருக்க இடமும் இல்லாமல், நோய் உண்டாகும். சிலர் ஸுகாதார விதிகளை அனுஸரிக்கிறதில்லை: அதனல் அவர்களுக்கு நோய் வந்துவிடுகிறது.

பள்ளிக்கூடத்தில் அனுஸரிக்கவேண்டிய விதிகளை மீறி நடந்தால், அதற்காக உங்களுக்கு தண்டனை கிடைக்கவில்-லையா? அதுபோலவே ஸுகாதார விதிகளை மீறி நடப்பவர்கள் நோயாகிய தண்டனையைப் பெறுகிறார்கள்.

சிலர் அறியாமையால் ஸுகாதார விதிகளை மீறி நடக்-கிறார்கள்: சிலர் அவைகளை மறந்துவிடுகிறார்கள்: சிலர் அந்த விஷயத்தில் அஜாக்ரதையாயிருக்கிறார்கள். எவ்வித காரணத்-தாலாயினும் ஸரி, ஸுகாதார விதிகளை கவனியாமலிருந்தால், அதனல்வரும் கெடுதியைப் பட்டே தீரவேண்டும். ஆகையால், இளமையிலேயே நீங்கள் அவ்விதிகளை அறிந்து அனுஸரிக்க-வேண்டும்.

அளவுக்கு அதிகமாக அன்னபானங்களை உட்கொள்வது, அவஸரமாக உண்பது, அசுசி, ஸிகெரெட் பிடிப்பது, இவை மிகவும் கெட்ட வழக்கங்கள். இவைகளால் தேஹத்துக்குக் கெடுதி உண்டாகும்.

பழமொழி.—1. நோயற்ற வாழ்வே வாழ்வு.
2. நோய்க் கிடங்கொடேல்.

17. ஒரு கடிதத்தின் வரலாறு

முதல் பாகம்

மாதவன் கோவிந்தன் என்னும் பிள்ளைகள் ஒரு க்ராமத்தில் ஒரே பாடசாலையில் ஒரேவகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். சிறு வயதிலிருந்து அவர்கள் இருவருக்கும்நட்பு உண்டு.

வேனிற்கால விடுமுறையில் மாதவன் தன் ஸஹோதரியின் கல்யாணத்துக்காகக் காஞ்சீபுரம் போனான். மாதவன் போய் இருபது நாள் ஆனபிறகு, தபால்காரன் கோவிந்தன் வீட்டுக்குவந்து, "தபால்! கோவிந்தசாமி முதலியார்" என்று கூவினான்.

தபால்காரன்.

அந்தக் கடிதம் மாதவனிடத்திலிருந்து வந்தது. அவன் ஸஹோதரியின் கல்யாண ஸங்கதி அதில் எழுதியிருந்தது. மாதவன் க்ஷேமமாயும் ஸௌக்யமாயும் இருப்பது தெரிந்து கோவிந்தனுக்கு அதிக ஸந்தோஷம் உண்டாயிற்று.

உடனே கோவிந்தன் மாதவனுக்கு பதில் எழுதினான். அவனை விட்டுப் பிரிந்திருப்பது தனக்கு அதிக கஷ்டமாக இருக்கிறதென்று அதில் எழுதினான். கடிதத்தை ஓர் உறையிலே போட்டு, உறையின்மேல்,

ம-ா-ா-ஸ்ரீ

கா. மாதவ முதலியார் அவர்கள்,

30, ராஜவீதி,

காஞ்சீபுரம்.

என்று மேல்விலாஸம் எழுதி, வலப்பக்கத்துத் தலைப்பில் அரையணு ஸ்டாம்பு ஒட்டினான். அந்த ஸ்டாம்பில் நமது சக்ரவர்த்தியின் தலைபோல் அச்சடித்திருக்கும்.

அப்புறம் கோவிந்தன் அதைத் தன் தகப்பனாரிடம் கொடுத்து, தபால் பெட்டியில் போடும்படி கேட்டுக்கொண்டான். அவர் அதைக்கொண்டுபோய், அடுத்த தெருவில் சிவப்புத் தூண்போல் நாட்டியிருக்கும் தபால் பெட்டியில் போட்டார். வேண்டுமானால் கடிதத்தைக் கொண்டுபோய், போஸ்ட் ஆபிஸில் போட்டிருக்கலாம். அடுத்த தெருவில் இருந்த பெட்டி அவர்கள் வீட்டுக்கு அருகில் இருந்ததனால், அவர் அக்கடிதத்தை அதில் போட்டார்.

தபால் பெட்டி.

கொஞ்ச நேரம் பொறுத்து, ஒரு தபால் சேவகன், சாவி போட்டு அந்தத் தபால் பெட்டியைத் திறந்து, அதில் இருந்த கடிதங்களெல்லாவற்றையும் ஒரு மூட்டையில் போட்டுப் போஸ்ட் ஆபிஸுக்குக் கொண்டுபோனான்.

ஒரு போஸ்ட் ஆபிஸிலிருந்து அனுப்புகிற கடிதங்கள் ஒவ்வொன்றின்மேலும், அந்தப் போஸ்ட் ஆபிஸ் இருக்கும் ஊரின் பெயரும் போட்ட தேதியும் முத்ரிப்பது வழக்கம். அப்படி முத்ரித்த பிறகு, போஸ்ட் ஆபிஸ் உத்யோகஸ்தர், அவைகளை ஒரு மூட்டையில் போட்டுக் கயிற்றால் கட்டி,

கயிற்று முடியின்மேல் ஸீல் போட்டு, அப்புறம் தபால் எடுத்-

அஞ்சல் சேவகன்.

துக்கொண்டு ஓடுகிறவன் கையில் மூட்-டையைக் கொடுத்தார்.

அவன் அந்த மூட்டையை அடுத்த பட்டணத்திலுள்ள பெரிய போஸ்ட் ஆபி-ஸில் கொண்டுபோய்ச் சேர்த்தான். அப்-படியே சுற்றுப்பக்கத்திலுள்ள க்ராமங்க-ளிலிருந்து அனுப்பிய மூட்டைகளும் அங்கே போய்ச்சேர்ந்தன.

18. ஒரு கடிதத்தின் வரலாறு

இரண்டாம் பாகம்

பட்டணத்தில் பெரிய போஸ்ட் ஆபிஸிலுள்ள உத்யோ-கஸ்தர்கள், ஒவ்வொரு மூட்டையிலும் உள்ள கடிதங்கள் எல்-லாவற்றையும் அவிழ்த்தெடுத்தார்கள். அப்புறம் அவைகள் எந்தெந்த ஊர்களுக்குப் போய்ச் சேரவேண்டுமோ, அந்தந்த ஊர்வாரியாக அவைகளை வேறுவேருகப் பிரித்தார்கள்.

ஒவ்வோர் ஊருக்கும் போகவேண்டிய கடிதங்களைத்

தபால் வண்டி.

தனித்தனியாக ஒவ்வொரு மூட்டையில் போட்டுக்கட்டி, ஸீல்போட்டு ஆள்களிடத்-தில் கொடுத்தனுப்பிவிட்டார்கள். மதரா-ஸைப்போன்ற பெரிய பட்டணங்களில் இந்த மூட்டைகளைத் தபால் வண்டியில் ஏற்றியனுப்புவார்கள். ஒரு தபால் சேவ-கன் கூடவே போய், ரெயில்வே ஸ்டேஷ-னில் அந்த மூட்டைகளை இறக்கி, ரெயில் வண்டியில் தபால் உத்யோகஸ்தரிடம் சேர்த்துவிட்டான்.

சில ரெயில்வண்டித்தொடர்களில் தபாலுக்கென்று தனி-யாய் ஒரு வண்டி இருக்கும். அதில் தபால் உத்யோகஸ்தர்-

கள் இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வந்து சேருகிற மூட்டைகளை எந்தெந்த ஸ்டேஷனில் சேர்க்க-வேண்டுமோ அங்கங்கே சேர்த்துவிட்டு, அங்கங்கே கொடுக்-கும் மூட்டைகளை வாங்கிக்கொள்வார்கள்.

ரெயில்வண்டித்தொடர் காஞ்சீபுரத்தில் நின்றவுடனே, கோவிந்தன் எழுதிய கடிதம் வைத்திருந்த மூட்டையை வண்-டியிலிருந்து கீழே இறக்கினார்கள். காஞ்சீபுரத்துப் போஸ்ட் ஆபிஸிலிருந்து வந்த தபால்சேவகன் அவைகளைத் தபால்வண்-டியில் ஏற்றிக்கொண்டு போய்ப் போஸ்ட் ஆபிஸில் சேர்த்தான்.



கடிதங்களைப் பிரித்தெடுக்கும் இடம்.

போஸ்ட் ஆபிஸில் உள்ளவர்கள், அந்த மூ-ட்டையை அவிழ்த்தெ-டுத்து, கடிதங்களின் மேல், அவை வந்ததேதி-யுடனே காஞ்சீபுரத்துத் தபால் முத்ரை இட்டு, அவைகளைப் பேட்டை-வாரியாகவும் தெருவா-ரியாகவும் பிரித்தெடுத்-துத் தபால்காரரிடம் கொடுத்தனுப்பினர்.

ராஜவீதிப் பக்கம் போகிற தபால்காரன் மாதவனுடைய கடிதத்-தைக் கொண்டுபோய்க் கொடுத்தான். கடிதம் போட்ட ஊரின் தபால் முத்ரையைப் பார்த்ததும், அது கோவிந்தன் எழுதிய கடித-மென்று மாதவன் தெரிந்துகொண்டான்.

ஒவ்வொருவனும் தன்தன் கடிதத்துக்கு ஆளைத் தேடி அனுப்புவதானால், அதிக பணமும் அதிக காலமும் ஆகும் அல்லவா? அரையணச் செலவிலே ஒரு கடிதம் அவ்வளவு விரைவில் அவ்வளவு தூரம் போய்ச்சேர்வது எப்படி முடியும் என்பது தெரிகிறதா?

கவர்ன்மென்டார் தபால் போக்குவரத்துக்களையெல்லாம் ஒழுங்காக நடத்தும்படி தபால் டிபார்ட்மென்ட் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். பல இடங்களுக்குப் பலபேர் அனுப்பும் கடிதங்களை அந்தந்த ஊரிலே ஒன்றாகச் சேர்த்து, அவைகளை, ஒரு மனிதன், ஒரு தபால் வண்டி, ஒரு ரெயில்வண்டித்தொடர், ஒரே காலத்தில் கொண்டுபோய், அங்கங்கே அவைகளைப் பிரித்தெடுத்து அவரவர்களுக்குச் சேர்க்கும்படி, சிப்பந்திகளை ஏற்படுத்தி ஒழுங்காக நடத்திவருகின்றனர். ஆதலால், கடிதங்கள், அவ்வளவு சொற்பச் செலவிலே, அதிக சீக்ரத்தில், அங்கங்கே போய்ச் சேர்கின்றன. முற்காலத்தில் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் இல்லாமையால் கடிதம் அனுப்புவது வெகு கஷ்டமாக இருந்தது.

19. சிலந்தி

தோட்டங்களில் கட்டியிருக்கும் சிலந்தி வலையை நீங்கள் எல்லாரும் பார்த்திருப்பீர்கள். அந்த வலையில் ஈ அகப்பட்டுக்கொள்வதையும் அதைச் சிலந்தி கொல்வதையும் ஒருகால் பார்த்திருக்கலாம்.

சிலந்தி, வலையைப் பின்னுவதற்கு, நீளமான சில நூல்களை நூற்று, அவைகளைக் கயிறுபோல் திரித்துக்கொள்ளும். அப்புறம் அவற்றின் நுனிகளை இலைகளிலாவது சிறு கிளைகளிலாவது ஊன்றவைத்து, அவைகளை வண்டிச் சக்ரத்தின் ஆரக்கால்(இலை)கள்போல அமைக்கும்.

பிறகு ஒரு நூலை எடுத்துக்கொண்டு பல முறை வட்டமாய்ச் சுற்றிவரும். வரும்போது அந்த நூலை மற்ற நூல்களோடு அங்கங்கே ஒட்டவைக்கும். இவ்விதமாகப் பின்னிய வலையின் மத்தியில், தான் இருப்பதற்கு ஓர் அறையைக் கட்டிக்கொள்ளும்.

சிலந்தி இந்த நூல்களைத் தனது பின்னங்கால்களால் ஒட்டவைக்கும். அதனால், அது தான் செய்கிற வேலையைத் தன் கண்களால் பார்க்கமுடியாது. பகல்வெளிச்சத்தில் போலவே இருட்டிலும் இந்த வேலையைச் செய்யத்தக்க தாகையால், அது தன்கண்களால் பார்த்துக்கொண்டே வேலை செய்யவேண்டும் என்கிற அவச்யம் இல்லை.



வலை காற்றில் அலைந்து அருதபடி சிலந்தியானது ஒரு சிறிய மரத்துண்டையாவது கல்லையாவது வலையில் தொத்த வைத்துத் தொங்கவிடும்.

நூல் ரப்பர்போல் நீளும். அந்த நூலுக்கு ஒருவிதமான பிசுபிசுப்பு உண்டு. ஆகையால், சிலந்தி வலையில் ஓர் ஈ சிக்கிக்கொண்டால் அது வலையை அறுத்துக்கொண்டு போக முடியாது. மேலும், அப்படியிப்படி அசைய முடியாதபடி கொஞ்ச நேரத்தில் அநேக நூல்கள் அதன் உடலில் சிக்கிக்கொள்ளும்.

ஈ அகப்பட்டுக்கொண்ட பிறகு, சிலந்தி, தன் அறையிலிருந்து புறப்பட்டுப் பாய்ந்துபோய், ஈயைத் தன் கொடுக்கால் கொட்டும். அப்படிக் கொட்டும்போது, அதன் கொடுக்கிலிருந்து ஒரு சிறிய விஷத்துளி கொட்டின காயத்தில் பாயும். அந்த விஷம் விரைவில் ஈயைக் கொன்றுவிடும். அப்பால்

சிலந்தி, ஈயை இழுத்துக்கொண்டு போய் அறையில் வைத்துக்-



கொண்டு, இஷ்டமானபோது தின்னும்.

சில வேளைகளில் தேனீ பறந்து போகையில் இந்த வலையில் சிக்கிக்கொள்வது உண்டு. வலை உரமாக இருப்பதால், தேனீ வலையிலிருந்து தப்பித்துக்கொண்டு போக முடியாது. தேனீ கொட்டிவிடப்போகிற தென்று பயந்து, சிலந்தி அதன் அருகில் உடனே போகாது. தேனீ கால்களை உதறிக்கொண்டு தடுமாறித் தத்தளித்து ஓய்ந்து போகிறவரையில், சிலந்தி தன் அறையை விட்டு வெளியே வராது. அப்புறம் அதன் அருகில் போய், முன்னங்கால்களால் அதைப் புரட்டிப் புரட்டி அசையாதபடி நூல்களால் இறுக்கி, இவ்விதமாக அதைக் கொஞ்ச நேரத்தில் கொன்றுவிடும்.

20. பால்

யானை, வௌவால், சுண்டெலி இவைகள்போன்ற சில ஜந்துக்களின் குட்டிகள் தாய்ப்பால் குடித்து வளரும். ஜலத்தில் வஸிக்கும் ஜந்துக்களில் திமிங்கிலம் ஒன்றுதான் குட்டிக்குப் பால் கொடுத்து வளர்ப்பது. ஜலத்தில் வஸிப்பதாலும் மீனைப்போல் இருப்பதாலும் திமிங்கிலத்தை மீனென்று சொல்வதுண்டு. ஆயினும் அது மீனினத்தைச் சேர்ந்ததன்று.

சில ஜந்துக்களின் பால் மற்றவைகளின் பாலைவிட

புஷ்டியானது. அதற்குக் காரணம் என்னவென்றால், அவைகளின் குட்டிகளுக்கு புஷ்டியான பால் வேண்டும். பசுவின் பால் மனிதருக்கு மிகவும் ஏற்றது. பசுவின் பால் ருசியாயிருக்கும்; எளிதில் ஜீர்ணம் ஆகும். எருமைப்பாலையும் வெள்ளாட்டுப் பாலையுங்கூட மனிதர் உபயோகிக்கிறார்கள். சில தேசங்களில் ஒட்டகத்தின் பாலையும் கழுதையின் பாலையும் குடிக்கிறார்கள்.



ஜீவஜந்துக்களின் குட்டிகளுடைய சரீரம் வளர்வதற்கும் சரீரத்தில் சதை பிடிப்பதற்கும் அவசியமான அம்சங்களெல்லாம் பாலில் அடங்கியிருக்கின்றன. ஆகையால், அவைகளுக்குப் பாலே உத்தமமான உணவு. வேறே உணவு இல்லாமல் பால் மட்டுமே செம்மையாய் உண்கிற குழந்தைகளும் கன்றுகளும் நன்றாய் வளர்ந்து உரமாக இருப்பதே இதற்கு ஸாக்ஷி.

பாலில், ஜலமும் கொழுப்பும் சதைவளர்ச்சிக்குரிய ஒருவித ஸத்தும் சர்க்கரையும் நிரஸவஸ்துக்களும் அடங்கியிருக்கின்றன.

நல்ல பசு ஒரு நாளைக்கு ஏறக்குறைய நாலு படி பால் கறக்கும். பசுவின் பால், ஸாதாரணமாய், படி நாலணாவுக்குக் கிடைக்கும். சில இடங்களில் இதைவிட எருமைப்பால் கொஞ்சம் மலிவாகக் கிடைக்கும்.

பாலை சுத்தமான காற்று உள்ள இடத்திலே வைக்கவேண்டும். காய்ச்சின பால் குடித்தால் நெடுநேரம் பசியெடாது. காய்ச்சாத பால் எளிதில் ஜீர்ணமாகும். ஆகையால், காய்ச்சின பாலே குழந்தைகளுக்கு நல்லது.

பால் பாண்டத்தை நெருப்பு படும்படி வைத்துப் பாலைக் காய்ச்சக் கூடாது. ஒரு பாத்ரத்தில் ஜலம்விட்டு, அதனுள் பால் உள்ள பாண்டத்தை வைத்துக் காய்ச்சுவது நலம். இப்படிச் செய்வதால் பால் தீய்ந்துபோகாது. பிரையிட்டுப் பாலைத் தயிராகவும் மோராகவும் செய்துகொள்ளலாம்.

பாலை ஆழமில்லாத பாண்டத்தில் விட்டுவைத்தால், மேலே பாலேடு செம்மையாய்ப் படியும். பாலேட்டில் கொழுப்பு நுட்பமான அணுக்கூட்டங்களாக இருக்கும். அவ்வணுக்கள், பாலில் உள்ள மற்ற அம்சங்களைப்பார்க்கிலும் லேசாக இருப்பதால், மேலே கிளம்பி மிதக்கும் பாலேட்டை மேலோடு வழித்து எடுத்துக்கொள்ளலாம்.

பாலையாவது தயிரையாவது மத்திட்டுக் கடைந்தால், பாலேட்டின் கொழுப்பிலிருந்து வெண்ணெய் கிடைக்கும். வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகும்.

துர்நாற்றம் உள்ள இடத்திலும், நோயாளி உள்ள அறையிலும், பாலை வைக்கக் கூடாது: அதனால் பாலில் விஷவாயு கலந்துவிடும். அந்தப் பாலைக் குடித்தால் கெடுதி உண்டாகும். தும்பு தூசு படியாதபடி பாலை மூடிவைக்க வேண்டும். பாலை வார்த்துவைக்கிற பாத்ரம் மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும்.

பழமொழி—பால் சுண்டினாலும் சுவை சுண்டுமா?

21. பெயர்ச்சொல்

உபாத்யாயர். கையில் நீளமாக வைத்திருக்கிறாயே, அந்தப் பொருள் வேண்டுமானால் கடைக்குப் போய் என்ன வேண்டும் என்று கேட்பாய்?

பிள்ளை. பலபம்.

உபா. பலபத்தால் எந்தப் பொருளின் மேல் எழுதுகிறாய்?

பிள்ளை. ஸ்லேட் (கற்பலகை).

உபா. ஸ்லேட்டை எந்தப் பொருளின்மேல் வைக்கிறாய்?

பிள்ளை. மேஜை.

உபா. பலபம், ஸ்லேட், மேஜை, இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளின் பெயர். பிள்ளைகள் வந்து படிக்கிற இந்த இடத்தின் பெயர் என்ன?

பிள்ளை. பாடசாலை.

உபா. நீயும் உன் தாய் தகப்பன் முதலியோரும் வஸிக்கிற இடத்துக்குப் பெயர் என்ன?

பிள்ளை. வீடு.

உபா. நம்முடைய வீடுகள், தெருக்கள், தோப்புகள், வயல்கள் அடங்கியிருக்கிற இடத்துக்குப் பெயர் என்ன?

பிள்ளை. ஊர்.

உபா. பாடசாலை, வீடு, ஊர் இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் இடத்தின் பெயர். ஸூர்யன் உதயமாகிற காலத்துக்கு என்ன பெயர்?

பிள்ளை. காலை.

உபா. ஸூர்யன் அஸ்தமிக்கிற காலத்துக்கு என்ன பெயர்?

பிள்ளை. மாலை.

உபா. மாலை முதல் காலைவரையில் உள்ள காலத்துக்கு என்ன பெயர்?

பிள்ளை. இரவு.

உபா. முப்பது நாள் சேர்ந்த காலத்துக்கு என்ன பெயர்?

பிள்ளை. மாஸம்.

உபா. காலை, மாலை, இரவு, மாஸம், இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தின் பெயர். கோலியின் நிறத்தை என்ன என்கிறாய்?

பிள்ளை. வெள்ளை.

உபா. கோலியின் உருவத்தை என்ன என்கிறாய்?

பிள்ளை. உருண்டை.

உபா பாயஸத்தின் ருசியாகிய குணத்தை என்னவென்று சொல்லுகிறாய்?

பிள்ளை. தித்திப்பு.

உபா. வெள்ளை, உருண்டை, தித்திப்பு, இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளின் குணத்தின் பெயர். நீ பள்ளிக்கூடத்தில் செய்கிற வேலையின் பெயர் என்ன?

பிள்ளை. படித்தல்.

உபா. சாயங்காலம் நீ மற்றப் பிள்ளைகளோடு செய்கிற வேலையின் பெயர் என்ன?

பிள்ளை. விளையாடுதல்.

உபா. பள்ளிக்கூடத்துக்கு வருவதற்கு முன் நீ செய்கிற வேலையின் பெயர் என்ன?

பிள்ளை. சாப்பிடுதல்.

உபா. படித்தல், விளையாடுதல், சாப்பிடுதல், இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலையின் (தொழிலின்) பெயர். கல் என்பது என்ன?

பிள்ளை. ஒரு பொருளின் பெயர்.

உபா. பட்டணம் என்பது என்ன?

பிள்ளை. ஓர் இடத்தின் பெயர்.

உபா. வருஷம் என்பது என்ன?

பிள்ளை. பன்னிரண்டு மாஸம் சேர்ந்த காலத்தின் பெயர்.

உபா. கசப்பு என்பது என்ன?

பிள்ளை. பாகற்காயைப் போன்ற பதார்த்தங்களின் ருசியாகிய குணத்தின் பெயர்.

உபா. சிவப்பு என்பது என்ன?

பிள்ளை. சில பொருள்களின் நிறமாகிய குணத்தின் பெயர்.

உபா. வெப்பம் என்பது என்ன?

பிள்ளை. ஸூர்யன், நெருப்பு முதலானவை சுடுதலான குணத்தின் (பண்பின்) பெயர்.

உபா. குளித்தல் என்றால் என்ன?

பிள்ளை. உடம்பைத் தண்ணீர் விட்டு சுத்தம் செய்கிற தொழிலின் (வேலையின்) பெயர்.

உபா. நாம் இத்தனை நேரமாக எதைப்பற்றிப் பேசிக்-கொண்டிருந்தோம்?

பிள்ளை. ஒரு பொருளையாவது, இடத்தையாவது, காலத்-தையாவது, குணத்தையாவது, தொழிலையாவது குறிக்கும் பெயர்களாகிய சொற்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்.

உபா. ஆகவே இந்தச் சொற்களெல்லாம் என்ன சொற்-கள்?

பிள்ளை. பெயர்ச் சொற்கள்.

22. கவனித்துப் பார்த்தல்

தட்சசிலம் என்கிற நகரத்தில் ஆத்ரேயர் என்றோர் ஆயுள் வேதியர் இருந்தார். அவரிடத்தில் அனேக மாணாக்கர்கள் ஆயுள்வேதம் கற்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஜீவ-கன் என்ற அரசகுமாரன் ஒருவன் அதிக புத்திகூர்மை உள்ளவன். அவனிடத்தில் அந்த ஆசிரியருக்கு அன்பு அதி-

கம் அதனால் மற்ற மாணாக்கர்களுக்கு அவன்மீது பொறாமை உண்டாயிற்று.

ஆசிரியர் ஒருமுறை சில மாணாக்கர்களை ஒரு வேலையாக வெளியில் அனுப்பினார். வேலையை முடித்துக்கொண்டு திரும்பி வரும்போது வழியில், மாணாக்கர்கள் ஒரு யானையின் அடிச்சுவடுகளைக் கண்டு, அவைகளை இன்னவென்று அறியக்கூடாமல் உற்றுப்பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

பின்னால் வந்த ஜீவகன், "என்ன பார்க்கிறீர்கள்? நானும் கொஞ்சம் பார்க்கிறேன்" என்று சொல்லி, சற்றுநேரம் சுற்றி-வளைத்து ஆராய்ந்து பார்த்தான். பார்த்த பிறகு, "ஓ நண்பர்-களே! இவை ஒரு பெண்யானையின் அடிச்சுவடுகள். அந்த யானைக்கு வலக்கண் குருடு. இன்றைக்குக் குட்டிபோடும். அதுவும் ஆண்குட்டி. அந்த யானையின்மேல் ஒரு பெண்பிள்ளை ஏறிக்கொண்டு போயிருக்கிறாள். அவளுக்கு வலக்கண் குருடு. அவளும் கர்ப்பிணி. இன்றைக்குப் பிள்ளை பெறுவாள்" என்று சொன்னான்.

மற்றவர்கள், "இந்த ஜீவகன் என்னடா சித்ரம் பேசுகிறான்! நாம் எல்லாரும் ஒன்றாகத்தானே வந்தோம், என்னவோ பெட்டையானையாம்! அது குட்டிபோடுமாம்! அதன்மேல் ஒரு பெண்பிள்ளையாம்! அவள் பிள்ளை பெறப்போகிறாளாம்! நம்மிடத்தில் அண்டம் அளக்கிறானே" என்று கைகொட்டிச் சிரித்துப் பரிஹாஸம் பண்ணினார்கள்.

ஊர் வந்துசேர்ந்ததும் மாணாக்கர்கள் நடந்த அதிசயத்தை ஆசிரியருக்குத் தெரிவித்தார்கள். அதன்மேல் ஆசிரியர் ஜீவகனைப் பரீட்சித்துப் பார்த்தார்.

ஆசிரியர். ஜீவகா! இவர்கள் சொல்வது மெய்தானா?

ஜீவகன். மெய்தான், ஸ்வாமி!

ஆசிரியர். அடிச்சுவடுகளால் ஆண்யானை அல்லது பெண்யானை என்று அறிவது எப்படி?

ஜீவகன். ஸ்வாமி! ஆண்யானையின் காலடி வட்டமாயி-ருக்கும். பெண்யானையின் காலடி ஏறக்குறைய நாற்கோண-மாய் இருக்கும்.

ஆசிரியர். அது வலக்கண் குருடு என்பதை எப்படி அறிந்தாய்?

ஜீவகன். அது இடப்பக்கத்தில் உள்ள புல் தழைகளை மட்டும் மேய்ந்திருக்கிறது.

ஆசிரியர். அந்த யானை கர்ப்பம் என்பதை எப்படி அறிந்தாய்?

ஜீவகன். அதன் காற்சுவடு ஆழமாய் அழுந்தியிருந்-தது.

ஆசிரியர். அது போடப்போகிறது ஆண்குட்டி என்பது எப்படித் தெரியவந்தது?

ஜீவகன். வலப்பக்கத்துக் காற்சுவடு நன்றாய்த் தரை-யில் அழுந்தியிருந்தது.

ஆசிரியர். யானையின்மீது ஒரு ஸ்த்ரீ ஏறிச் சென்றாள் என்பது எப்படி நிச்சயம்?

ஜீவகன். அவள் வழியில் இறங்கி நடந்திருக்கிற காற்-சுவடுகளைக் கண்டேன்.

ஆசிரியர். அவளுக்கு வலக்கண் குருடு என்பது எப்-படித் தெரியும்?

ஜீவகன். அவள் இடப்பக்கத்தில் உள்ள புஷ்பங்-களை மட்டும் கொய்திருக்கிறாள்.

ஆசிரியர். அவள் கர்ப்பிணி என்பதற்கு ஆதாரம் என்ன?

ஜீவகன். அவளுடைய குதிகால் தரையில் செம்மை-யாய்ப் பதிந்திருக்கிறது.

இவ்விதமாக ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு விடை சொல்லி, "ஐயரே! இதுவெல்லாம் உண்மை. இவைகளை

அடியேன் அநுமான ப்ரமாணத்தால் அறிந்தேன். உண்மையை அறியவேண்டுமானால், இவர்களில் ஒருவனை ஸத்ரத்துக்கு அனுப்புங்கள்" என்று சொன்னான்.

அப்படியே ஒருவனை ஸத்ரத்துக்கு அனுப்பி, நேரில் பரீட்சித்துப் பார்க்கையில், எல்லாம் அவன் சொன்னது போலவே நடந்திருந்தன. அது முதல் மற்ற மாணாக்கர்கள் அவன்மீது கொண்டிருந்த பொறாமையை ஒழித்து ஒருமைப்பட்டிருந்தார்கள்.

23. பிறர் பொருளில் இச்சை

முதல் பாகம்

அரபி தேசத்து வர்த்தகன் ஒருவன் ஒருகால் தேசாந்தரம் போனான். போகும்போது தனது அரிய தட்டு முட்டுகளை, தான் நெடுநாளாய் ஸத்யவான் என்று எண்ணியிருந்த ஒரு கோமுட்டி நண்பனிடத்தில் வைத்துவிட்டுப் போனான்.

சில மாத காலம் கழித்து, ஊருக்கு வந்து சேர்ந்த பிறகு, ஒருநாள் கோமுட்டி வீட்டுக்குப் போய், தன்னுடைய ஸாமான்களைத் தரும்படி கேட்டான்.

கேட்டவன் திகைக்கும்படி, கோமுட்டி, "உன்னைக் கண்டது யார்? உன் ஸாமானைக் கண்டது யார்?" என்று ஒரே ஸாதனையாய் ஸாதித்து, "நான் ஒன்றும் அறியாமல் இருக்க, 'என் ஸாமான்களைக் கொடு' என்று வந்து கேட்கிறாயே, உனக்கு என்ன தைர்யம்! என்ன துணிவு!" என்று கோபித்துக்கொண்டான்.

அரபி வர்த்தகன் மிகவும் துக்கமடைந்து, ஒரு வார்த்தை சொல்லவும் நாவெழாமல், நேராய் ந்யாயாதிபதியிடத்தில் போய், இந்த வழக்கை முறையிட்டுக்கொண்டான்.

ந்யாயாதிபதி, "ஸாட்சியும் இல்லை. சீட்டு நாட்டு ஒன்றும் இல்லை. பாவம்! நம்பிக்கை வைத்து மோசம்போனாய்.

ஆனாலும் நிராசை கொள்ளவேண்டாம். நாளை இந்நேரத்துக்கு வா. வழி சொல்லுகிறேன்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

ந்யாயாதிபதி அன்று இரவு தம் வீட்டில் விருந்துண்ண வரும்படி கோமுட்டிக்குச் சொல்லியனுப்பினர். கோமுட்டி வந்த உடனே அவனோடு ஸந்தோஷமாய்ச் சற்று நேரம் வார்த்தைசொல்லிக்கொண்டிருந்து, வார்த்தைமேல் வார்த்தையாய், "நீங்கள் பெரிய கல்விமான் என்றும் கண்யமுள்ள கனவான் என்றும் கேள்விப்பட்டேன்" என்று சொன்னர்.

இவ்விதமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், "ஐயா, செட்டியாரே! நான் ஒரு வேலையாகக் கொஞ்ச காலம் வெளியூருக்குப் போகவேண்டும். போனல் வருவதற்கு நாலாறு மாதம் செல்லும். என்னிடத்தில் உள்ள ஸாமான்கள் மிகவும் அருமையானவை. வேலைக்காரர்களை நம்பி வைத்துவிட்டுப் போவது பிசகு. அவைகளை ஜாக்ரதையாய் வைத்திருந்து கொடுக்கத்தக்க நண்பர் ஒருவரும் இல்லை. என்ன செய்வேன்! தாங்கள் தயவுசெய்வதானல், நாளை இரவில் என் ஸாமான்கள் எல்லாவற்றையும் பெட்டிகளில் வைத்து பத்ரமாகப் பூட்டித் தங்கள் வீட்டுக்கு அனுப்புகிறேன்" என்று சொன்னர்.

ந்யாயாதிபதி தன்னிடம் அவ்வளவு நம்பிக்கை வைத்திருப்பதற்காக அதிக ஸந்தோஷம் அடைந்து, கோமுட்டி, கொஞ்சம் முகஸ்துதியாய், "ஒன்றும் அறியாத என்னைத் தாங்களே இவ்வளவு கனப்படுத்தும்போது, எனக்கு இதைவிட மேன்மை என்ன? தங்கள் இஷ்டப்படியே செய்யக் காத்திருக்கிறேன்" என்று சொன்னன். பிறகு அவன் ந்யாயாதிபதிக்குத் தன்னிடத்தில் அதிக நம்பிக்கை உண்டாகும்படி நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து, அப்புறம் வீட்டுக்குப் போனன்.

24. பிறர் பொருளில் இச்சை

இரண்டாம் பாகம்

மறுநாள் அரபிவர்த்தகன் தன்னை ந்யாயாதிபதி வரச்சொன்ன நேரத்துக்கு அவரிடம் போனான். அவர், "நீ இப்போது நேராகக் கோமுட்டியிடம் போ. உன் ஸாமான்களைக் கொடுக்கும்படி கண்டிப்பாய்க் கேள். இல்லை என்று சொன்னால், ந்யாய ஸ்தலத்தில் பிராது செய்வதாக பயமுறுத்து. அப்புறம் என்ன நடக்கிறதோ பார்ப்போம்" என்று சொல்லி அனுப்பினர்.

அப்படியே அந்த வர்த்தகன் போய், கோமுட்டியைத் தன் ஸாமான்களைக் கொடுக்கும்படி கேட்டான். கோமுட்டி முன்போலவே ஒரே பிடியாய்ப் பிடிக்க, வர்த்தகன், "இனி எனக்கு என்ன கதி? ந்யாயாதிபதியிடத்தில் போய் முறையிட்டுக்கொள்ளவேண்டும். நல்லது நான் போகிறேன்" என்று சொன்னான். அதைக் கேட்டவுடனே கோமுட்டி, "ந்யாயாதிபதிக்கு என்னிடத்தில் அளவற்ற நம்பிக்கை இருக்கிறதே. இவனுடைய அற்பப் பொருளுக்கு ஆசைப்பட்டால், அவர் அனுப்புவதாகச் சொன்ன அரிய பொருள்களை நிறுத்திக்கொள்வாரே. அப்புறம் அவைகள் நமக்குக் கிடைக்காமல் போகுமே" என்று எண்ணித் திகிலடைந்து, அந்நேரம் வரையில் பரிஹாஸம் பண்ணினதாய் நடிக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டான்.

"ஐயா! வர்த்தகரே! நான் உம்முடைய பொருளை எடுத்துக்கொண்டு மோசம் செய்வதாக நினைத்தீரோ? நான் நாணயஸ்தன் என்று எங்கும் புகழ்பெற்றவன்: உமக்கு உயிர்த்தோழன் அப்படிச் செய்வேனே? கொஞ்சநேரம் பயமுறுத்தி உம்மை அலைக்கழிக்கலாம் என்றிருந்தேன். இதோ உமது பொருள்கள்; இஷ்டம்போல் எடுத்துக்கொண்டுபோம்" என்று

சொல்லி, கோமுட்டி அவனுடைய ஸாமான்களையெல்லாம் ஸரியாக ஒப்பித்துவிட்டான்.

கோமுட்டியின் நடவடிக்கையை வர்த்தகன் மெய்யென்றே நம்பி, அவனிடத்தில் மிகவும் நன்றி பாராட்டி, தன் பொருள்களைக் கைக்கொண்டு ந்யாயாதிபதியிடம் சென்று, பொருள் கிடைத்த விஷயத்தை விண்ணப்பம்செய்தான். அவர், "இனி தராதரம் அறியாமல் எவனையும் நம்பி இப்படிப்பட்ட வேலை செய்யாதே" என்று எச்சரிக்கைசெய்து அனுப்பினர்.

பொழுது போனதும் கோமுட்டி, ந்யாயாதிபதியின் ஸாமான்கள் வரும்வருமென்று தெருத்திண்ணையில் காத்துக்கொண்டிருந்தான். அவை தன்னிடம் வராத காரணம் விளங்காமல், மறுநாள் ந்யாயாதிபதியிடம் போய், "நேற்றிரவு ஸமான்களை ஏன் அனுப்பவில்லை? பயணம் நின்றுபோய் விட்டதா என்ன?" என்று கேட்டான். ந்யாயாதிபதி, "உன்னைப்போல் மோசக்காரன் உலகத்தில் ஒருவனும் இல்லையென்று ஒரு வர்த்தகன் சொல்லக் கேள்விப்பட்டேன். இனி உன்மேல் இப்படிப்பட்ட பிராது வருமாயின் தக்க தண்டனை விதிப்பேன். இந்த முறை மன்னித்துவிட்டேன். என் முன் நில்லாதே, போ" என்று அவமானம்செய்து அனுப்பிவிட்டார்.

25. மரவேர்

மனிதருக்கும் விலங்குகளுக்கும் உயிர் உள்ளதுபோல் மரங்களுக்கும் செடிகளுக்கும் உயிர் உண்டு; உணவு இல்லாமல் எந்த ஜந்துவும் பிழைத்திருக்கமாட்டாது. மரத்துக்கும் செடிக்கும் உணவை உட்கொள்ளுவதற்காகச் சில உறுப்புகள் உண்டு. அவைகளில் வேர் முக்யமானது. இந்த வேர் எந்தெந்த விதத்தில் உபயோகம் என்பதை விசாரிப்போம்.

வேர் மரத்தைச் சாயாமல் நிலத்தில் உறுதியாய் ஊன்றி

நிற்கும்படி செய்கிறது மரத்தைச்சுற்றி அதன் கிளைகள் எவ்வளவு தூரம் பரவியிருக்குமோ, அவ்வளவு தூரம் வேர்களும் மண்ணின் கீழே பரவியிருக்கும்.

மரத்துக்குத் தானாக இடம்விட்டு இடம் மாறும் சக்தி இல்லை. ஆகையால், அதற்கு வேண்டிய உணவு அதன் அரு-

கில் இருக்கவேண்டும். மரத்துக்கு அவச்யமான உணவெல்லாம் காற்றிலும் மண்ணிலும் கிடைக்கும். காற்றிலிருக்கும் உணவை இலையும், நிலத்திலிருப்பதை வேரும் உட்கொள்ளும். செடிகளுக்கு வேண்டிய உணவில், பெரும்பாகம் நிலத்திலிருந்து கிடைக்கும்.

மேலே காட்டியிருக்கும் படத்தைப் பார்த்தால் வேர்களில் பலவிதம் உண்டென்பது தெரியவரும். முக்யமான வேருக்கு ஆணிவேர் என்று பெயர். அது அடியில் போகப் போகக் குறுகி நுனி கூரியதாக இருக்கும். அந்த ஆணிவேரிலிருந்து பக்கவேர்கள் கிளைக்கும். ஒவ்வொரு பக்கவேரிலிருந்தும் பல சிறு வேர்கள் கிளைக்கும் : இவைகளுக்குச் சல்லிவேர் என்று பெயர். சல்லிவேர் உணவும் ஈரமும் தேடிச் சென்று பலபக்கங்களிலும் பரவும். இந்தச் சல்லிவேரின் நுனிகள் மண் பொடிகளின் இடையில் தடவிக்கொண்டு செல்லும்போது



அவை தேய்ந்துவிடும். அவ்வாறு தேய்ந்துபோகாமலிருக்கும்பொருட்டு வேரின் நுனியில் ஒரு சிறிய குல்லாய் மூடிக்கொண்டிருக்கும்.

செடிக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கட்டிகட்டியாக இருந்தால், வேர்கள் அவைகளை உட்கொள்ள முடியாது. அந்த உணவுப்பொருள்கள் ஜலத்தில் கரைந்திருந்தால்தான் வேர் அவைகளை உறிஞ்சக்கூடும்.

இதனால் செடிகளின் உயிர்வாழ்க்கைக்கு ஜலம் மிகவும் அவச்யம் என்பது விளங்கும். ஸாதாரணமாய் மண்ணில்

நிரஸவஸ்துக்களின் சிறு பொடிகளும் தாதுப்பொருள்களின் துண்டுகளும் கலந்திருக்கும். இந்த உணவை வேர்கள் உட்கொள்ளுவதற்குமுன் இவை கரைந்து மண்ணோடு சேர்வதற்கு ஜலம் இருக்கவேண்டும்.

26. ஸகலரையும் ஸஹோதரராக பாவித்தல்

சந்த்ரகுலத்து அரசர்களில் ரந்திதேவர் என்று மஹா கீர்த்திமான் ஒருவர் இருந்தார். கொஞ்ச காலம் ராஜ்யபரிபாலனம் செய்து, அப்புறம் அதில் வெறுப்புற்று, ஜாதிபேதம் பாராமல் தம்முடைய பொருள்களை யெல்லாம், ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு, வனவாஸம் செய்யப் புறப்பட்டார்.

அப்போது, தமக்கும் தமது பெரிய குடும்பத்துக்கும் வேண்டிய கொஞ்ச ஆஹாரம் தவிர, அவரிடத்தில் வேறே யாதொன்றும் இல்லை. அதுவும் அல்லாமல், வனவாஸத்துக்குப் புறப்படுவதற்கு முன்னே பல நாள் ஒன்றும் சாப்பிடாமலிருந்தார். அப்போது, ஒரு ப்ராம்மணன் பசியோடு வந்து ஆஹாரம் கொடுக்கும்படி அவரைக் கேட்டான். தமது கஷ்டத்தைக் கொஞ்சமும் கவனியாமல் அவர் பாதி ஆஹாரத்தை ப்ராம்மணனுக்குக் கொடுத்துவிட்டார்.

ப்ராம்மணன் போன உடனே ஒரு சூத்ரன் பசியோடு வந்து ஆஹாரம் கேட்டான். அவனைப் பார்த்து இரக்கங்கொண்டு கையில் இருந்த பாதி ஆஹாரத்தில் அவனுக்குக் கொஞ்சம் கொடுத்து அனுப்பினார்.

அப்பால், ஒரு நாய் எதிரில் வந்து வாலை ஆட்டி ஆஹாரம் வேண்டும் என்ற குறிப்பாக ஊளையிட்டது. மீதியாக இருந்ததை அதற்குப் போட்டுவிட்டு, கையிலிருந்த கொஞ்சம் பாலைக் குடிக்கப்போனார்.

அந்த ஸமயத்தில் பஞ்சமன் ஒருவன் எதிரில் வந்து, "ஐயா, அதிக தாஹமாக இருக்கிறது. தயவு செய்து தாஹத்-

துக்கு ஏதாவது கொடுக்கவேண்டும்" என்று வேண்டினான். உடனே பாலை அவனுக்குக் கொடுத்துவிட்டார். இப்படிப்பட்ட சோதனைகளால் அவர் கொஞ்சமும் மனம் வருந்தாமல், தம்மைக் காப்பாற்றும்படி கடவுளைத் துதித்தார்.

உலகத்திலுள்ளவர்கள் எந்த ஜாதியாய் இருந்தாலும், அவர்களைத் தங்கள் ஸஹோதரர்போல் பாவித்து, கஷ்ட காலத்திலும் அபாய காலத்திலும் அவர்களுக்குத் தங்களால் இயன்றமட்டும் உபகாரம் செய்வது உத்தம புருஷர்களுடைய ஸ்வபாவம்.

27. மரவரை

மரவரை என்பது என்ன? மரத்தில் சிறிதுபாகம் நிலத்தின் கீழேயும் பெரும்பாகம் நிலத்துக்கு மேலேயும் இருக்கும். வேரிலிருந்து கிளம்பி நிலத்துக்கு வெளியே இருக்கும் பாகத்துக்கு மரவரை என்று பெயர். இதற்குத் தண்டு என்றும் அடிமரம் என்றும் பெயர். இது மரத்தின் கிளை, இலை, பூ, காய் முதலியவைகளைத் தாங்கிக்கொண்டிருக்கும்.

சில மரங்களுக்கு மரவரை உருட்சியாயும், சிலவற்றிற்குக் கோணமாயும், இன்னும் சிலவற்றிற்குத் தட்டையாயும் இருக்கும். தவிர, கீரைத்தண்டைப்போன்ற சில மரவரைகள் பச்சை நிறமாயும் மெதுவாயும் இருக்கும்; இவை எளிதில் ஒடிந்துபோகும். புளியமரத்தைப் போன்றவைகளின் மரவரைகள் உறுதியாயும் கொஞ்சம் கருநிறமாயும் இருக்கும். சில மரங்களில் கொஞ்சபாகம் உறுதியாயும் கொஞ்சபாகம் ம்ருதுவாயும் இருக்கும்.

ஆலமரத்தின் மேல் பட்டையை உரித்தால், அதன் கீழே பிசுபிசுப்புள்ள ஒருவித வஸ்து இருக்கும். இதுதான் ஸாரம் என்பது. இது நிலத்திலிருந்து கிடைக்கும் உணவு. இந்த உணவை மரங்கள் வேர்களின் மூலமாய் உட்கொள்ளுகின்றன.

இந்த ஸாரம் மரவரையின் வழியாய்த்தான் மரத்தின் மேல்-பாகங்களுக்குப் பரவவேண்டும்.

மரவரையினுல் மற்றொரு உபயோகம் உண்டு. இது மரம் முழுவதையும் தாங்கிக்கொண்டிருக்கும். ஆகையால், கிளைகளைவிட மரவரை உறுதியாயிருக்கும். அவரை, புடல் முதலியவைகளின் மரவரை ஏதாவது ஒரு வஸ்துவில் தொத்திக்கொண்டு மேலே படரும்.



புளியமரத்தையும் மாமரத்தையும் போன்ற பெரிய மரங்களின் மரவரைகளில், சோற்றி, வயிரம், பட்டை ஆகிய மூன்று அம்சங்கள் சேர்ந்திருக்கும். இவ்வினத்தில் சேர்ந்த மரம் ஒன்றைக் குறுக்காக அறுத்துப் பார்த்தால், வளையம் போன்ற அநேக கோடுகள் இருக்கும். ஒவ்வொரு வருஷமும் ஒரு புதிய வளையம் உண்டாகும். இந்த வளையங்களை எண்ணினுல், செடிக்கு ஏறக்குறைய இத்தனை வயது ஆயிற்று என்பது தெரியவரும். சோற்றிக்குள் அழுத்தமான பாகத்-

துக்கு வயிரம் என்று பெயர். இது மரத்தின் நட்டநடுவில் இருக்கும். மரவரையின் மேல் பாகத்துக்குப் பட்டை என்று பெயர்.



மரத்தைக் குறுக்கு வாட்டத்தில் அறுத்தால் அது தோன்றும்விதம். a—பட்டை b—வளையங்கள்; c—வயிரம்

மரம்பட்டுப்போகாமல் இருக்க வேண்டுமானால், ஸாரம் கோடை காலத்திலும் மழைகாலத்திலும் எக்காலத்திலும் தாராளமாய் ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். இதற்கு உஷ்ணம் எப்பொழுதும் ஒரே நிதானமாய் இருக்கவேண்டும். இவ்வாறு மரத்தின் உஷ்ணத்தை ஒரே நிதானத்தில் வைத்திருப்பது மேற்பட்டையின் வேலை.

28. ஒரு பெண்பிள்ளையின் தைரியம்

ஒரு தனவான் வெகுகாலம் நோயோடு படுத்த படுக்கையாய் இருந்தார். அது தெரிந்து சில கள்வர்கள், அவருடைய சொத்துக்களைத் திருடிக்கொண்டுபோக எண்ணங்கொண்டு, ஒரு நாள் நடுராத்ரியில் கூட்டமாய் வந்தார்கள்.

இரவில் இரண்டுமூன்று வேலைக்காரர்கள் மட்டுமே தெருத்திண்ணையில் படுத்துக்கொள்வது வழக்கம். திருடர்கள் இவர்களுடைய வாயில் துணியை அடைத்து, கைகால்களைக் கட்டிவிட்டு, பிறகு தெருக்கதவைக் கோடாலி முதலிய ஆயுதங்களால் பிளந்துகொண்டிருந்தார்கள்.

அப்போது, அந்தத் தனவானுடைய மனைவி, தன் புருஷன் படுத்திருந்த இடத்தை ஒருவருக்கும் தெரியாதபடி

மறைத்துவிட்டு வெளியே வந்தாள். இதற்குள் திருடர்கள் தெருக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்தார்கள். திருடர்களைக் கண்டவுடனே தனவான் மனைவி அவர்களிடத்தில், " என்னுடைய சொத்துக்களெல்லாம் சேமித்துவைத்திருக்கிற இடத்தைக் காட்டிவிடுகிறேன். என்னை ஒன்றும் செய்யாமல் இருப்பீர்களா?" என்றாள். திருடர்கள், " அப்படியே ஆகட்டும்: சொத்து எங்கே இருக்கிறது? காட்டு காட்டு" என்று கூவினார்கள்.



அவர்களை அழைத்துக்கொண்டு போய், இரண்டு மூன்று கட்டுக்கு அப்புறம் ஒரு பெரிய அறைக்குள் அவள் நுழைந்தாள். அங்கே விரித்திருந்த ரத்நகம்பளத்தை உடனே சுருட்டியெடுத்து, அடியில் தரையோடு தரையாய்ப் பூட்டியிருந்த ஓர் இரும்புக்கதவைக் காட்டி, அதைத் திறக்கும்-

படி சொன்னாள். கதவைத் திறந்தபிறகு, படியின் வழியாய் அவர்களை இறங்கச் சொல்லி, தானும் பின்னால் இறங்கினாள்.

அந்த ஸ்திரீ, அந்த நிலவறையிலே பூட்டிவைத்திருந்த அநேக இரும்புப் பெட்டிகளைக் காட்டி, தங்களுடைய சொத்து முழுவதும் அவைகளில் இருப்பதாகத் தெரிவித்தாள். திருடர்கள், "எதோ, திறவுகோல் எங்கே?" என்று கேட்டனர். அவள், "இதோ, ஒரு நொடியில் கொண்டுவருகிறேன்" என்று சொல்லி, பரபரப்பாகப் படியேறி வெளியில் வந்து, இரும்புக்கதவைக் காலாலே எட்டி உதைத்தாள். கதவு படீரென்று விழுந்து மூடிக்கொண்டது. கண்ணிமைப்பொழுதிலே கதவைப் பூட்டிவிட்டாள்.

அப்புறம் அவள், தன் வேலையாள்களை அவிழ்த்துவிட்டு, அருகில் குடியிருந்த குடியானவர்களை அழைத்துவரும்படி சொன்னாள். குடியானவர்கள் இருநூறுபேர் வந்து திருடர்களைப் பிடித்துக் கட்டி உதைத்து ஊர்க்காவலாளிகளிடத்தில் ஒப்பித்தார்கள்.

அதிகாரிகள் திருடர்களுக்குக் கடுந்தண்டனை விதித்து, அந்த ஸ்திரீயின் தைரியத்தை மிகவும் மெச்சிக் கொண்டாடினார்கள்.

29. மரங்களின் இலைகள்

ஒரு மரம் நிறையத் தழைத்துப் பச்சைப்பசேரென்று இருந்தால் அது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருக்கும்!

இலைகள் ஸாதாரணமாய்த் தட்டையா யிருக்கும். ஒவ்வோர் இலைக்கும் ஒவ்வொரு காம்பு உண்டு. ஒரு மரத்தின் இலையைப்போல் மற்றொரு மரத்தின் இலை இராது. ஆயினும் ஒரு மரத்திலுள்ள எல்லா இலைகளும் ஒரே விதமாக இருக்கமாட்டா.

அடுத்த பக்கத்தில் இருக்கும் படத்தைப் பாருங்கள்.

அதில் உள்ள இலைகளுள் வடிவத்தில் ஒன்றுக்கொன்று எவ்வ-ளவு வித்யாஸம் இருக்கிறது, பாருங்கள். ஆயினும் இலைகள் வெகுசாய் முட்டைவடிவமாக இருக்கும்; அன்றியும் இரண்டு நுனிகளும் கூர்மையாக இருக்கும்

அவ்வாறே அளவிலும் ஓர் இலையைப்போல் மற்றோர் இலை இராது. புளியிலை, தாமரையிலை, வாழையிலை, இவை-களுக்குள் உள்ள வேறுபாட்டைப் பாருங்கள்.

இலைகளில் இரண்டு விதம் உண்டு. சில செடிகளில் ஒவ்-வோர் இலையும் தனித்தனி இலையாக இருக்கும். ரோஜா,



தென்னை இம்மாதிரியான செடிகளில் அநேக சின்னஞ்சிறு இலைகள் சேர்ந்து ஓர் இலையாக இருக்கும்.

அநேக இலைகளுக்கு ஓரம் ஒழுங்காக இராது: பிளப்பு-டன் இருக்கும்; அல்லது வாள்போல் பல்பல்லாக இருக்கும்.

எதாவது ஓர் இலையை எடுத்து அதன் பின்புறத்தைக் கவனித்துப்பாருங்கள். நடுவில் ஒரு பெரிய நரம்பு இருக்-கும். அதிலிருந்து அநேக சிறு நரம்புகள் சன்னல் பின்னலாய்க் கிளைத்தோடும். இந்த நரம்புகளெல்லாம் குழாய்கள் தவிர வேறல்ல.

ஒவ்வோர் இலையின்மேலும் ஒருவிதமான தோல் மூடிக்-கொண்டிருக்கும். இதில் தண்ணீர் பட்டால் தெறித்துப்போய்-விடும். இலையின் மேல்புறத்தில் அநேக சின்னஞ்சிறிய துளைகள் உண்டு. வெய்யில் பட்டவுடனே இந்தத் துளைகள் பெரியவையாகிக் காற்றை உட்கொள்ளும். காற்றில் இலைக்கு வேண்டிய ஸத்து இருக்கிறது. இது தண்ணீருடன் கலந்து மரத்துக்கு அவசியமான ஓர் உணவாகிறது.

வெய்யிலைப் பெறுவதற்காகவே இலைகளின் மேல்பாகம் ஆகாயத்தை நோக்கிக்கொண்டிருக்கும்.

30. வினைச்சொல்

உபாத்யாயர். அப்பா! நீ என்ன செய்கிறாய்?

பிள்ளை. நான் பாடம் படிக்கிறேன்.

உபா. உன் தம்பி என்ன செய்கிறான்?

பிள்ளை. விளையாடுகிறான்.

உபா. இத்தனை நேரம் நான் என்ன செய்தேன்?

பிள்ளை. பிள்ளைகளுக்குக் கணக்குக் கற்பித்தீர்.

உபா. படிக்கிறது, விளையாடுகிறது, கற்பிக்கிறது என்-பன எதைக் குறிக்கும் சொற்கள்?

பிள்ளை. ஒவ்வொரு வேலையைக் குறிக்கும் சொற்கள்.

உபா. வேலை என்பதைத் தொழில் என்றும் வினை என்றும் சொல்வது உண்டு.

பிள்ளை. மேல் வகுப்பில் படிக்கிற பிள்ளைகள் அடிக்கடி வினைச்சொல் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். வேலையைக் குறிக்கிற சொற்களெல்லாம் வினைச் சொற்கள் என்று நினைக்கிறேன்.

உபா. ஆமாம். இப்பொழுது நான் சொல்லுகிற சொற்களோடு ஒவ்வொரு வினைச்சொல்லைச் சேர்த்துச் சொல்லு. "வாள்காரன் மரத்தை——"

பிள்ளை. "அறுக்கிறான்."

உபா. "பூனை எலி——"

பிள்ளை. "பிடிக்கும்."

உபா. "சில புஷ்பங்கள் மாலையில்——"

பிள்ளை. "புஷ்பிக்கும்."

உபா. "புதிய வண்ணான் பொந்து கட்டி——"

பிள்ளை. "வெளுப்பான்."

உபா. இன்றைக்கு எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்?

பிள்ளை. வேலையைக் குறிக்கும் சொற்களைப் பற்றி.

உபா. அவைகளை என்னவென்று சொல்லுகிறோம்?

பிள்ளை. வினைச்சொற்கள்.

உபா. ஆகவே வினைச்சொல் என்பது என்ன?

பிள்ளை. பொருளின் தொழிலைக் காட்டுகிற சொல்.

31. புஷ்பங்கள்

வஸந்த காலத்தில் ஒருநாள் காலையில் கோபாலனும் அவன் தம்பி ரகுநாதனும் குளத்தில் நீஞ்சப் போனார்கள். போகிற வழியில் ஒரு புஷ்பத் தோட்டம் இருந்தது. அங்கே அவர்கள் பின்வருமாறு பேசிக்கொண்டார்கள் :—

கோபாலன். ரகு! இதோ பார், இந்தப் புஷ்பம் எவ்வளவு அழகாய் இருக்கிறது!

ரகுநாதன். ஆமாம். நிரம்ப நன்ருக இருக்கிறது. எப்படி கமகமவென்று வாஸனை வீசுகிறது!

கோ. சில புஷ்பங்கள் இவ்வளவு ஒளியும் அழகும் உள்ள வர்ணங்களோடு இருப்பதன்றி இப்படிப்பட்ட நல்ல வாஸனையும் வீசுகின்றனவே: இதற்குக் காரணம் என்னவென்று உனக்குத் தெரியுமா?

ரகு. தெரியாதே.

கோ. புஷ்பங்களில் உள்ள தேனைத் தேனீக்களும் மற்றப் பூச்சிகளும் கொண்டுபோவது வழக்கம். இவைகள் புஷ்பங்கள் உள்ள இடத்தைப் புஷ்பத்தின் வர்ணத்தினுலும் வாஸனையினுலும் தான் தெரிந்துகொள்ளுகின்றன.

ரகு. அப்படியானுல், புஷ்பங்களுக்கு வாஸனை இல்லாமலே இருந்தால் நல்லதாகுமே. அப்பொழுது தேனீக்கள் அவைகளைக் கவனியாமல் போய்விடும்.

கோ. அப்படியல்ல. புஷ்பத்திலிருக்கும் தேனைக் கொண்டுபோவது தேனீக்கு எவ்வளவு அவசியமோ, தேனீ புஷ்பத்தை நாடி வருவது செடிக்கும் அவ்வளவு அவசியமே.

ரகு. அது எப்படி? எனக்கு விளங்கவில்லை.

கோ. நல்லது, இந்தப் புஷ்பத்தைப் பார். நல்ல வர்ணத்தோடுகூடிய இந்த இதழ்களுக்குள்ளே அநேக சிறிய தாள்கள் இருக்கின்றன பார். அவற்றின் தலைகளின்மேலே தூசு படிந்திருக்கிறது. அதற்கு மகரந்தம் என்று பெயர். இந்த மகரந்தம் புஷ்பத்தில் உள்ள கருத்தரிக்கிற உறுப்புடன் சேர்ந்தால்தான் காய் உண்டாகும். காய் காய்த்துப் பழுக்காவிட்டால் விதை ஏது? விதை இல்லாவிட்டால், புதிய செடி எப்படி உண்டாகும்?

ரகு. ஸரி. இப்பொழுது தெரிகிறது. மகரந்தம் கருத்தரிக்கிற உறுப்பை அடையாவிட்டால் செடிகள் விதை இல்லாமல் பூண்டற்றுப்போய்விடும். ஆயினும் மகரந்தம் அவ்வுறுப்பை அடையச்செய்வதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா ?

கோ. சொல்லுகிறேன். காற்றடிக்கும்போது, மகரந்தம் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்குப் போய்ச் சேரும். இதனால் மகரந்தத்தில் மிகக் கொஞ்சமே வேறு புஷ்பத்தில்

போய்ச் சேரும்; மற்றதெல்லாம் வீணாய்ப் போய்விடும். இப்படிப்பட்ட புஷ்பங்களுக்கு வர்ணமும் இராது, மணமும் இராது. அவைகளில் தேனும் இராது.

ரகு. தேனீ தன் வேலையை எப்படிச் செய்கிறது ?

கோ. புஷ்பத்தின் வாஸனையாவது அழகான வர்ணமாவது தேனீயின் மனதைக் கவரும். அதன்மேல் அவைகளில் தேன் இருக்கிறதா என்று பார்க்கத் தேனீ புஷ்பத்தினிடத்தில் போகும். புஷ்பத்தின்மேல் உட்கார்ந்து, அதில்

விசேஷமாகத் தேன் இருப்பதாக அறிந்தால், தேனீ ஸந்தோஷம் அடையும். தேனைச் சேகரித்துக்கொண்டிருக்கையில், புஷ்பத்தின் ஆண் உறுப்பிலுள்ள மகரந்தம் அதன் பின்னங்கால்கள் முழுவதும் ஒட்டிக்கொள்ளும். தேனீ, அந்தப் புஷ்பத்தை விட்டு, அடுத்த புஷ்பத்தில் தேன் குடிக்கப்போகும்போது, அதன் காலில் ஒட்டிக்கொண்டிருக்கும் மகரந்தத்தில் கொஞ்சம், அந்தப் புஷ்பத்தின் பெண் உறுப்பில் விழும்.

ரகு. ஸரி. தன்னால் இந்த வேலை நடக்கிறதென்பது தேனீக்குத் தெரியுமா?

கோ. தெரியாது. அது, தன் பாட்டைப் பார்த்துக்கொண்டு புஷ்பத்திலிருக்கும் தேனைக் குடித்துக்கொண்டிருக்கும்.

ரகு. இது மிகவும் விநோதமாயிருக்கிறது. ஆனாலும் தேனீக்களுக்கு வெவ்வேறு வர்ணங்களின் பேதம் தெரிந்திருக்கவேண்டுமே.

கோ. ஆமாம். அது அவைகளுக்கு நன்றாகத் தெரியும்.

32. நன்றியறிவுள்ள நாய்

முதல் பாகம்

சில காலத்துக்கு முன் ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். செலவில்லாமையால் அவனிடத்தில் அதிக பணம் சேர்ந்திருந்தது. அதைத் தொலைதூரத்தில் ஒரு பட்டணத்தில் உள்ள பாங்கியில் கட்டவேண்டுமென்று ஒருநாள் காலையில் புறப்பட்டான்

அக்காலத்தில் ரெயில்வண்டி கிடையாது. அவன் விரைவில் போய் வருவது அவசியமாக இருந்தது. அதனால் பணத்தை இரண்டு மூன்று பைகளில் போட்டு, குதிரைச் சேணத்தில் வைத்துக் கட்டிக்கொண்டு, குதிரையேறிப் போனான். அவனுடைய நாயும் கூடவே தொடர்ந்தது.

நாய், வழியெல்லாம் விளையாடிக்கொண்டு குதிரையோடு கூடவே, கொஞ்சம் முன்னும் பின்னுமாய்ப் போயிற்று. வழியெல்லாம் புழுதியாயும், போகப் போக வெயில் அதிகமாயும் இருந்தமையால், நாய்க்கு இளைப்பாகி ஓட முடியாமல் கால்கள் நோவெடுத்தன.

போகிற வழியில் நல்ல நிழலுள்ள குளிர்ச்சியான தோப்பு ஒன்று இருந்தது. குடியானவன் அங்கே சற்று

இளைப்பாறலாம் என்று நினைத்து, குதிரையை விட்டு இறங்கி, பணப்பைகளை பத்ரமாகக் கீழே வைத்துவிட்டு, குதிரையை ஒரு மரத்தில் கட்டினான். பைகளை பத்ரமாய்ப் பார்த்துக்கொள்ளும்படி நாய்க்குத் திட்டம் செய்துவிட்டு, நெடுஞ்சட்டையை எடுத்துப் போர்த்துக்கொண்டு பைகளின்மேல் தலையை வைத்துப் படுத்தான்.

படுத்த கொஞ்ச நேரத்தில் மெய்ம்மறந்து தூங்கிவிட்டான். நாயும் அவனுடைய தலையின் கிட்டே பைகளின்மேல்

தலையை வைத்துக்கொண்டு படுத்தது. செம்மையாய்த் தூங்-காமல், கண்ணை மூடுவதும் திறப்பதும் யாராகிலும் வருகிற அரவம் கேட்டால் காதை நெறித்துக்கொண்டு எழுவதுமாய், இளைப்பாறியிருந்தது.

குடியானவன், இளைப்படைந்திருந்ததால், நெடுநேரம் தூங்கிவிட்டான். பொழுதுபோவதைக் கண்டு, நாய் மெதுவாக அவன் கையை நக்கியது. அவன் திடுக்கென்று விழித்தெ-ழுந்து, நாயைத் தட்டிக்கொடுத்துவிட்டு, அத்தனை நேரம் தூங்கிவிட்டதனால், கண் செம்மையாய்த் தெளியாமல், குதி-ரையை அவிழ்த்து, போர்த்திருந்த நெடுஞ்சட்டையைக் குதி-ரைமேல் போட்டு, குதித்தேறி குதிரையைப் பரபரப்பாக நடத்தினான்.

அவன் கூப்பிட்ட குரலுக்கு, உடனே நாய்பின்தொடர்ந்து போகவில்லை: குதிரையின் பின்னால் ஓடி, குதிரையின் குதிகா-லைக் கடிப்பதும், மறுபடியும் கெட்டியாய்க் குலைத்துக்கொண்டே படுத்திருந்த இடத்தை நோக்கிப் போவதுமாக இருந்தது. அது அப்புறம் வந்துசேரும் என்று அவன் தன்பாட்டில் போய்க்கொண்டிருந்தான்.

33. நன்றியறிவுள்ள நாய்

இரண்டாம் பாகம்

அவன் போன வழி கொஞ்ச தூரத்துக்கு அப்பால் வளைந்திருந்தது. அதுவரையில் அவன் போவதை துக்கத்-துடனே பார்த்துக்கொண்டிருந்தது. அவன் தலை மறைந்த-தும், நாய் குலை குலையென்று குலைத்துக்கொண்டு மறுபடியும் அவன் பின்னால் குதித்தோடியது. அது போய்ச் சேருகிற தருணத்தில், அவன் ஓர் ஓடையில் குதிரைக்குத் தண்ணீர் காட்டிக்கொண் டிருந்தான். அங்கே போய்க் குலைத்தது.

அவன் அதைக் கூப்பிட்டான். அது அவனிடம் போகாமல் குலைத்துக்கொண்டு வந்த வழியாய்த் திரும்பியது.

நாய் இவ்விதமாகச் செய்வதற்குக் காரணம் அவனுக்குப் புலப்படவில்லை ஒருவேளை அதற்கு வெறி பிடித்ததோ என்று அஞ்சினான். வெறிநாய்களுக்குத் தண்ணீரைக் கண்டால் பயம். அதனாலே அது ஓடையின் கிட்டே வாராமல் போகிறதோ என்று எண்ணினான். இப்படி அவன்



யோசித்துக்கொண் டிருக்கையில், அது மறுபடியும் வந்து குதிரையின் காலண்டையில் குதித்து, எஜமானுடைய பாதரட்சையைப் பெருவிரலண்டையில் கடித்தது. மறுபடியும் உரக்கக் குலைத்து வந்த வழியாக ஓடிற்று.

இதையெல்லாம் பார்த்து நாய்க்கு வெறி பிடித்திருப்பது உண்மையென்று தீர்மானித்து, குடியானவன் அதைத்

தன் கைத்துப்பாக்கியால் சுட்டான். அதன்மேல் அதிக ஆசைகொண்டிருந்ததால், அதைத் திரும்பிப் பார்க்க மனம் பொருமல், குதிரையை வேகமாக ஓட்டிக்கொண்டு போனான்.

“என் பணம் போனாலும் பெரிதல்ல ; ஐயோ ! நாய் போய்விட்டதே” என்று துக்கித்துக்கொண் டிருக்கையில், பணத்தின் நினைவு வந்து, சேணத்தைத் தடவிப்பார்த்தான். அங்கே பணப்பைகள் இல்லை. “பணப்பைகள் வழியில் நழுவி விழுந்தனவோ, தோப்பில் இளைப்பாறியிருந்த இடத்தில் வைத்துவிட்டோமோ” என்று நினைத்துப் பார்த்தான். தோப்பிலிருந்து புறப்படுகிற அவஸரத்தில் பைகளை எடுத்துச் சேணத்தில் வைத்துக் கொள்ளவில்லை என்று நன்ருக நினைவு வந்தது.

குதிரையைத் திருப்பி வெகு வேகமாய் விட்டுக்கொண்டு போனான். ஓடையண்டை வந்தபோது நாயின் நினைவு வந்தது. நாய் அங்கே இல்லை. ஓடையைக் கடந்துபோகும்போது வழியெல்லாம் ரத்தம் சிந்தியிருந்ததைப் பார்த்தான். அவனுக்குக் கண்ணீர் பெருகத் தொடங்கியது. நாய் ஒருநாளும் இல்லாமல் அன்று அவ்வாறு செய்ததற்குக் காரணம் அப்போதுதான் அவனுக்குத் தெளிவாயிற்று. குடியானவன் பணப்பைகளை மறந்து வைத்துவிட்டது அதற்குத் தெரியும். அந்த விஷயத்தை அவனுக்கு எவ்விதத்திலாயினும் குறிப்பால் அறிவிக்கவேண்டுமென்றே அது அவ்வாறு செய்துபார்த்தது.

துக்கத்தோடு போய்ப் பார்க்கையில், பணப்பைகள் வைத்தது வைத்தபடியே இருப்பதையும், பக்கத்தில் நாய் படுத்திருப்பதையும் பார்த்தான். நாய் சாகவில்லை; குற்றுயிரோடு இருந்தது. அப்புறம் அவன் செய்த சிகித்ஸையால் புண் ஆறி, அந்த நாய் வெகு காலம் ஜீவித்திருந்தது.

34. க்ருஷி

க்ருஷி என்பது பூமியைத் திருத்திப் பருவ காலத்தில் பயிர்செய்தல். இதற்கு வேளாண்மை என்றும் பெயர்.

க்ருஷியில் முதல் முதலில் செய்யவேண்டிய வேலைஎன்ன-வென்றால், கலப்பைகொண்டு நிலத்தை உழுதல். கட்டாந்தரை-யான நிலத்தைப் புழுதியாக்கும்பொருட்டு எருழுவார்கள். எருழுதலால் மண்ணுங்கட்டிகள் கீழது மேலதாகப் பெயர்ந்து



எருழுதல்.

பொடியாகி வெயிலில் உலர்ந்து காற்றுடும். இவ்விதம் பொடி-யாகிற புழுதி நன்றாய் உலர்வது நிலத்துக்கு எருப்போடுவ-தற்கு ஸமானம். ஒரு பலம் புழுதி கால் பலமாக உலர்ந்-தால் அந்த நிலத்துக்குப் பிடி எருவும் அவசியமில்லை என்-பார்கள்.

நமது தேசத்தில் உபயோகிக்கும் கலப்பை மேலான தல்ல. அதில் கைப்பிடியாகிய மேழி, கொழு அடித்திருக்-

கும் உழுபடை, ஏர்க்கால் ஆகிய இம்மூன்று மாத்ரம் இருக்கும். மாட்டின் கழுத்தில் வைக்கும் நுகத்தடியின் மத்தியில் ஏர்க்காலைத் தொடுப்பார்கள். கொழு ஒன்றுதான் இரும்பு; மற்ற எல்லாம் மரம். கொழு நுனி கூர்மையாய் ஏறக்குறைய ஒன்றரை அடி நீளம் இருக்கும். அது மண்ணாங்கட்டியை நன்றாய்த் தலைகீழாகப் புரட்டிக் கொடாது. அகலமும் கனமும் போதாமையால், அது நிலத்தை நன்றாகக் கிளறாது. ஆகவே இந்தக் கலப்பைகொண்டு உழுதால், ஒரு சால் உழு-



சேடை உழுதல்

வது போதாது. மேன்மேலும் குறுக்கு நெடுக்காய்ப் பலசால் உழவேண்டும்.

சீமைக் கலப்பைகள், இப்படியன்றி, மிகவும் பெரியவைகளாய் இருக்கும். அவை ஒரே சாலில் மண்ணை இரண்டடி ஆழத்துக்கு அதிகமாகப் பேர்க்கும். ஆனால் அவைகளின் விலை அதிகம். அவைகளை இழுப்பதற்குப் பெரிய உரமான மாடுகள் வேண்டும்.

நிலங்களை உழுவது மாத்ரம் போதாது. பயிர் செழிப்-

பாய் வளர்ந்து நல்ல பலனைத் தருவதானல், நிலங்களுக்கு எருவிடவேண்டும். பயிர்நிலங்களுக்கு முக்யமான எருக்களாவன :—ஆட்டுப்பிழுக்கை, மாட்டுச்சாணம், குளத்தின் வண்டல், சருகுகள், சாம்பல், பச்சைத்தழை முதலியன.

நிலத்தைச் செம்மையாய்ப் பண்படுத்தி, கொஞ்சம் மழை பெய்த பிறகு, விதை விதைப்பார்கள். வானவாரி நிலங்களில் புழுதியில் விதைப்பார்கள். பாய்ச்சல் உள்ள இடங்களில் முளை கட்டி விதைப்பதும் நாற்று விட்டு நடுவதும் உண்டு. பயிர் முளைக்கும்போது புல் பூண்டு முதலிய-



களை பிடுங்குதல்

வைகளும் கூடவே முளைக்கும். அவைகளை அப்போதப்போது பிடுங்கிவிடவேண்டும். அப்படிச் செய்வதற்குக் களைபிடுங்குதல் என்று பெயர்.

காலம் தப்பாமல் நீர் பாய்ச்சவேண்டும். மழை செம்மையாய்ப் பெய்யாத இடங்களில் துரவு குளம் முதலியவைகளிலிருந்து தண்ணீர் இறைப்பார்கள். ஆடுமாடுகள் மேயாமலும், கதிர்விட்டு முதிர்கிற காலத்தில் தான்யம் திருட்டுப் போகாமலும் இருக்கும்பொருட்டுக் காவல் காக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பண்படுத்திய நிலத்தில், விதை விதைத்து, களை பிடுங்கி, நீர் பாய்ச்சி விளையும் செடிகளுக்குப் பயிர் என்று பெயர். இவை நன்ருக வளர்ந்து கதிர்விட்டு தான்யம் பழுத்துவிட்டால், பயிரை அறுவடை செய்வார்கள்

கதிரிலிருந்து தான்ய மணிகளை வேருகப் பிரித்தெடுப்பதற்கு அரியடிப்பதும் சூடுமிதிப்பதும் உண்டு. அரிந்த அரிக்கட்டுகளை ஆள்கள் கொஞ்சம் கொஞ்சமாய்க் கையில்



பிணையடித்தல்.

பிடித்து, கெட்டியான தரையில் மோதி அடிப்பார்கள். இவ்வாறு செய்தால் தான்யம் உதிர்ந்துவிடும்; தாள்களை ஒரு பக்கமாக எறிந்துவிடுவார்கள். அரிக்கட்டுகளைப் பரப்பி மாடுகளைப் பிணைத்து மிதிக்கச் செய்வதும் உண்டு. மாடுகள் சுற்றிச் சுற்றி மிதிக்கையில், தாள் வேறு தான்யமணிகள் வேருகப் பிரிந்துவிடும். அப்புறம் தாள்களை உதறி எடுத்துவிட்டு, தான்யத்தைக் குவித்தெடுப்பார்கள். தடியால் அடித்தும் தான்யத்தை வேருக்குவது உண்டு.

அப்புறம் தான்யத்தை உலர்த்தி, தொம்பைக்கூடுகளிலும் நிலவறைகளிலும் களஞ்சியங்களிலும் சேமித்துவைப்பார்கள்.

பழமொழிகள்.—1. நெற்பயிர் விளை.

2. சீரைத் தேடின் ஏரைத் தேடு.

35. மாணுக்கருக்கு உரிய கடமைகள்

சிறுவருக்கு உரிய முதன்மையான கடமை கீழ்ப்படிதல். கீழ்ப்படிதலாவது, தாய் தகப்பன் முதலானவர் சொன்ன கார்யத்தைத் தடையில்லாமல் ஸந்தோஷமாய் உடனே செய்தல். ஒரு கார்யத்தைச் செய்யும்படி அவர்கள் சொன்னுல், அதற்குக் காரணம் இன்னதென்று தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் அவர்கள் சொன்ன வண்ணம் செய்யவேண்டும். அவர்கள் நமது நன்மையை நாடியே சொல்லியிருப்பார்கள் என்று நம்பி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

குழந்தைகளை அதனதன் இஷ்டப்படி விட்டுவிடுகிற வீட்டில் ஒரு கார்யமும் ஒழுங்காய் நடவாது. ஆகையால், எல்லாக் கார்யங்களும் ஒழுங்காக நடக்கும்படி பெற்ருேர்கள் சில நிபந்தனைகளை ஏற்படுத்தியிருப்பார்கள். சிறுவர்கள் அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டும். அப்படி நடந்துவந்தால் எல்லாருக்கும் நன்மை உண்டு.

சாப்பிடவேண்டிய வேளையில் சாப்பிடுவது, படிக்க வேண்டிய காலத்தில் படிப்பது, விளையாடுகிற ஸமயத்தில் விளையாடுவது, தூங்கவேண்டியபோது தூங்குவது, அவரவருக்கு உரிய வேலையை அதற்கு உரிய காலத்தில் அவரவர் பாட்டில் செய்வது, இந்தவிதமாய்த் தகுந்த நிபந்தனைகளை அனுஸரித்துவருகிற வீட்டில் ஒரு குறையும் இராது.

இளமையில் கல்விப்பயிற்சி செய்வது சிறுவர்களுக்கு உரிய கடமைகளில் முக்யமானது. "எண்ணும் எழுத்தும்

கண்ணெனத் தகும்." "கல்லாதவரே கண் இல்லாதவர்." பல பண்டிதர்கள் அநேக வருஷ காலம் ஆராய்ச்சிசெய்து கண்டறிந்த பல விஷயங்களை, சிறுவர்கள் எளிதில் அறியும்பொருட்டுப் பாடபுஸ்தகங்களில் சேர்த்தெழுதியிருக்கிறார்கள். பிள்ளைகள் இவைகளை இளமையிலே கற்கவேண்டும். இளமையிலேயே இப்படிக் கற்றால், அவர்கள் வயது ஏற ஏறப் பின்னும் ஸாரமான அநேக விஷயங்களைக் கற்றுத் தாங்களும் நன்மை அடைந்து பிறருக்கும் நன்மை செய்யலாம்.

பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பது கஷ்டமான காரியம். பிள்ளைகளின் அருகில் உட்கார்ந்துகொண்டு, தாங்கள் கற்ற கல்வியைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் திருப்பித் திருப்பிப் பலதரம் சொல்லி, காலை முதல் மாலை வரையில் பிள்ளைகளோடு போராடுவதனால் உபாத்யாயர்களுக்கு எவ்வளவு பொறுமை வேண்டும்! அப்படிப்பட்ட உபாத்யாயருக்குப் பிள்ளைகள் என்ன கைம்மாறு செய்தால் தீரும்! ஆகையால், பிள்ளைகள் உபாத்யாயரிடத்தில் அடக்கமும் பக்தியும் உடையவர்களாகி, எவ்விதமாக நடந்தால் உபாத்யாயருக்கு ஸந்தோஷம் உண்டாகுமோ அவ்விதமாக நடந்து கல்வியில் தேர்ச்சி அடையவேண்டும்.

படிக்கிற பாடங்களில் உள்ள விஷயங்களை நன்றாய் அறிந்துகொள்ளாமல் சும்மா வாய்ப்பாடமாகப் படிப்பதில் பலன் இல்லை. படிப்பது கொஞ்சமாயினும், படித்தமட்டில் திருத்தமாக விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். தம்மைப்பார்க்கிலும் குறைவாகப் படித்தவர்களைப் பார்த்து நாம் இவ்வளவு கற்றிருக்கிறோமே என்று கர்வம் கொள்ளக்கூடாது. தம்மைவிட அதிகமாகப் படித்தவர்களைப் பார்த்து, நாமும் அவ்வளவு கற்கவேண்டும் என்று மேல்மேலும் ஊக்கம் கொள்ளவேண்டும்.

36. ஊகம் இல்லாத சிறுவன்

முதல் பாகம்

வேனிற்கால விடுமுறை கழிந்து பாடசாலை திறந்த உடனே, ஞானசிகாமணிப்பிள்ளை என்னும் உபாத்யாயருக்கு ஒரு கடிதம் எடுத்துக்கொண்டு ஒரு புதுப்பிள்ளை வந்தான். உபாத்யாயர் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். அதில்,

"ஐயா,— இந்தக் கடிதம் கொண்டுவருகிறவன் என்னுடைய குமாரன் ரத்னம் என்பவன். இப்பொழுது அவனுக்கு வயது பதினொன்று. ஏழு வயதில் இவனை இங்கே ஒரு பாடசாலையில் விட்டேன். கொஞ்சகாலம் கழித்து, அவனுக்கு இங்க்லிஷ் பாஷை வராதென்று அந்தப் பாடசாலை உபாத்யாயர் தெரிவித்தார். அப்புறம் கையெழுத்தாவது படியட்டும் என்று பார்த்தேன். அவனுக்குக் கை படியவில்லை. கணக்காகிலும் கற்றுக்கொள்வான் என்று பார்த்தேன். அதற்கும் ஊகம் இல்லை. தமிழ்மட்டும் உபாயமாக வாசிப்பான்.

"இதுவரையில் ஓர் உபாத்யாயரிடத்திலும் இவன் வ்ருத்திக்கு வரவில்லை. இவனுக்கு ஏதாவது ஊகம் உண்டா இல்லையா என்பது இன்னும் புலப்படவில்லை. உபாத்திமைத் தொழிலில் அதிக திறமையும் பிள்ளைகளுடைய அபிவ்ருத்தியில் அதிக ஊக்கமும் உங்களுக்கு உண்டென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

"என் குமாரனை உங்கள் வசம் ஒப்பிக்கிறேன். உங்களுக்கு உபாத்திமைத் தொழிலில் அதிக அனுபவம் இருப்பதால், இவனுக்கு எந்த விஷயத்தில் ஊகம் உண்டு என்பதைக் கண்டுபிடித்து, அதற்கு ஏற்றவாறு போதிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். கொஞ்சகாலத்தில் இதைப்பற்றி உங்கள் கருத்தை அறிவிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

பணிவுள்ள ஊழியன்,

மாசிலாமணி."

என்று எழுதியிருந்தது.

கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் ஞானசிகாமணிப் பிள்ளை, "இது என்ன அதிசயம்! இந்தச் சிறுவன் எப்படியும் மனிதப் பிறப்புத்தானே. எப்படி இருக்கிறான், பார்ப்போம்" என்று நினைத்துச் சிறுவனை அழைத்தார். பிரம்பால் அடிபடப் போகிறவன்போல் அவன் பயந்து தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு போனான்.



உபாத்யாயர். அப்பா! இப்படி வா. என் பக்கத்தில் நில். பயப்படாதே. ஒருவரும் உன்னை ஒன்றும் செய்யமாட்டார்கள். உனக்கு வயது என்ன?

சிறுவன். போன சித்திரை மாஸம் பதினொன்று நிரம்பிவிட்டது.

உபா. பெரிய பிள்ளையாக வளர்ந்துவிட்டாய். உனக்கு விளையாட்டில் விருப்பம்தானே?

சிறு. ஆம்.

உபா. எழுதத் தெரியுமா?

சிறு. கொஞ்சம் தெரியும். ஆனால் எனக்கு நன்றாய் எழுத வராது.

உபா. ஏன் வராது? மற்றப் பிள்ளைகள் மாத்ரம் எப்படி எழுதுகிறார்கள்? உன்னைப் பார்க்கிலும் அவர்களுக்கு விரல்கள் அதிகமா? கையில் ஒரு குறைவும் இல்லையே. மற்றப் பிள்ளைகளைப்போல் எழுதலாமே. அது இருக்கட்டும். படிக்கத் தெரியுமே?

சிறு. தெரியும்.

உபா. அதோ அந்தக் கதவில் எழுதியிருப்பதைப் படி, பார்க்கலாம்.

சிறு. (சற்று மயங்கி நின்று),

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்"

உபா. நல்லது, படிக்க எவ்விதமாய்க் கற்றுக்கொண்டாய்? கஷ்டப்பட்டுத்தானே கற்றுக்கொண்டாய்?

சிறு. ஆமாம்.

உபா. இன்னும் கொஞ்சம் கஷ்டப்பட்டால் இன்னும் செம்மையாய்ப் படிப்பாய். அது கிடக்கட்டும். ஏதாகிலும் கணக்குப் போடத்தெரியுமா?

சிறு. கூட்டல் மாத்திரம் தெரியும். அதற்குமேல் தெரியாது.

உபா. ஏன்?

சிறு. அதற்குமேல் போட என்னால் முடியவில்லை.

உபா. ஓரணாவுக்கு எத்தனை கோலி வாங்கலாம்?

சிறு. புதிதானால் பன்னிரண்டு வாங்கலாம்.

உபா. அரையணாவுக்கு எத்தனை வாங்கலாம்?

சிறு. ஆறு.

உபா. இரண்டணாவுக்கோ ?

சிறு. இருபத்துநான்கு ?

உபா. ஒரு நாளைக்கு ஓரணா விழுக்காடு சேர்த்தால் ஒரு வாரத்தில் எவ்வளவு சேர்மானம் ஆகும்.

சிறு. ஏழணா.

உபா. அதில் இரண்டணா செலவாகிவிட்டால் கையில் எவ்வளவு இருக்கும் ?

சிறு. (சற்று நிதானித்து) ஐந்தணா.

உபா. ஸரி. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய நான்கிலும் உனக்குப் பழக்கம் இருக்கிறது. நல்லது, அப்பா! உன் திறமையைத் தெரிந்துகொண்டேன். நான் கற்பிப்பதைக் கற்றே தீரவேண்டும். 'இது என்னால் கற்க முடியாது' என்கிற ஸங்கதியே கூடாது. போய் மற்றப் பிள்ளைகளோடு உட்கார்.

37. ஊகம் இல்லாத சிறுவன்

இரண்டாம் பாகம்

அந்த மட்டில் பரீட்சை ஒழிந்ததே என்று ரத்நத்துக்கு ஸந்தோஷம் உண்டாயிற்று. தன்னால் ஒன்றும் படிக்க முடியாதென்று எண்ணியிருந்தான். தனக்கு அப்படி விவேகம் இல்லாமல் போகவில்லை: தன்னால் படிக்க முடியும் என்று அவனுக்கு இப்பொழுது கொஞ்சம் தைர்யம் உண்டாயிற்று.

மறுநாள் பாடங்கள் ஆரம்பமாயின. அவனைப்பார்க்கிலும் சிறியவன் ஒருவனை விட்டு உபாத்யாயர் இங்க்லிஷ் எழுத்து எழுதக் கற்பிக்கும்படி செய்தார். தமிழில் சொல்வதை எழுதும்படி இன்னொரு பிள்ளையை விட்டுப் பழக்கிவந்தார். இங்க்லிஷில் அவனுக்குத் தெரிந்த சில எளிய பாடங்களை

முன்னே ஆரம்பித்து, அப்புறம் கொஞ்சம்கொஞ்சமாய் மேலே கற்பித்துவந்தார். இந்தவிதமாகக் கொஞ்ச காலத்தில் இங்க்லிஷில் எழுத்துக்களைச் சேர்த்து எழுதவும், தமிழ் இலக்கணத்தில் பெயர் வினை முதலிய வேறுபாடுகளை அறியவும், பெருக்கல்வரையில் எளிய கணக்குகள் போடவும் அவனுக்குத் தெரிந்தது. அதன்மேல் உபாத்யாயர், மாசிலாமணி முதலியாருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார்.

"ஐயா,—உங்கள் கடிதம் பெற்று ஏறக்குறைய இரண்டு மாத காலம் ஆகிறது. உடனே பதில் கிடைக்குமென்று நீங்கள் எதிர்பார்த்திருக்கலாம். எந்த விஷயத்திலும் நான் பதறிப் பேசிவிடுகிறது இல்லை. 'நுண்ணிய கருமமும் எண்ணித்துணி' என்கிறபடி நிதானமாய் ஆரத்தீர ஆலோசித்துப் பார்த்தே ஒரு விஷயத்தில் நம்முடைய கருத்தை வெளியிடவேண்டும் அல்லவா?

"உங்கள் குமாரனுக்கு எவ்விதமான ஊகம் உண்டென்பது இன்னும் புலப்படவில்லை என்று உங்கள் கடிதத்தில் எழுதியிருந்தீர்கள். ஊகம் என்றால் கஷ்டப்படாமலும் ஒருவரிடம் கற்காமலும் ஒரு வித்தையில் திறமை வாய்ந்திருப்பது என்று சிலர் அர்த்தம் கொள்கிறார்கள். அவ்விதமாகவே நீங்களும் கொள்ளுகிற பட்சத்தில், இதுவரையில் நான் பார்த்த பிள்ளைகளில் மூன்று நான்குபேர் மாத்ரமே அப்படிப்பட்ட லக்ஷணம் வாய்ந்தவர்கள்: உங்கள் குமாரன் அந்தக் கணக்கில் சேர்ந்தவனல்லன். நன்றாய்க் கற்பித்தால் பெரும்பான்மையோர் செய்யக்கூடிய காரியங்களில் சிலவற்றைச் செய்யும் சக்தியென்றே ஊகத்துக்குச் சிலர் அர்த்தம் கொள்வது உண்டு. அவ்வாறு நீங்கள் கொண்டால், அது உங்கள் குமாரனிடத்தில் கொஞ்சங்கூடக் குறைவென்று எனக்குத் தோன்றவில்லை.

"அவனை எந்த வேலையில் விடவேண்டுமென்று

உங்களுக்கு இஷ்டம் இருக்கிறதோ அதற்கேற்ற திறமை கொஞ்சகாலத்தில் அவனுக்கு உண்டாகும் என்பதில் யாதொரு ஸந்தேஹமும் இல்லை. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பது நான் அனுஸரிக்கிற விதி. உங்கள் குமா-ரன் தானாக எந்தக் கார்யத்தைக் கைக்கொள்ளுகிறானோ பார்ப்போம் என்று காலத்தை வீணாகக் கழித்துவிட்டீர்கள் அவன் என்னிடத்தில் இருக்கிறவரையில் வீண்காலம் போக்-காமல் ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்.

தங்கள் அன்புள்ள
ஞானசிகாமணி."

இந்தக் கடிதத்தைக் கண்டதும் மாசிலாமணி முதலியா-ருக்கு ஞானசிகாமணிப் பிள்ளையிடத்தில் தம் குமாரன் ஏதாவது கொஞ்சம் வழிக்கு வருவான் என்கிற நம்பிக்கை உண்டாயிற்று. அதனால் அவர் தம் குமாரனை அந்த உபாத்யாயரிடத்திலே சில வருஷ காலம் விட்டுவைத்தார் காலக்ரமத்தில் ரத்னம் கொஞ்சங் கொஞ்சமாக வ்ருத்தி யடைந்துவருவதைக் கண்டு அவருக்கு அதிக ஸந்தோஷம் உண்டாயிற்று. வயது வந்தபோது அவர் ரத்னத்தை அவன திறமைக்கேற்ற ஒரு வேலையில் அமர்த்தினார். அவன் அதில நல்ல பேர் பெற்று, கண்யமாய், பல பேருக்கு உபகாரியாக இருந்தான்.

38. ஜில்லா உத்யோகஸ்தர்கள்

முதல் பாகம்

இடம். ஆற்றங்கரை.] [காலம்: மாலை

[ராஜு செட்டி என்னும் வர்த்தகர் உட்கார்ந்துகொண்டிருக்-கிறார். வக்கீல் ஸுந்தரையரும் அவர் குமாரன் க்ருஷ்ணனும் அந்த மார்க்கமாய்ப் போகிறார்கள்.]

ராஜு. ஐயரவர்களே! நமஸ்காரம்! உட்காருங்கள்.

தங்கள் தர்சனம் கிடைத்து வெகுநாள் ஆயிற்று. தங்க-ளிடத்தில் முக்யமான சில விஷயங்களைக்குறித்துப் பேச-வேண்டும் என்று சென்ற வாரம் இரண்டொரு முறை தேடி வந்தேன். நீங்கள் ஊரில் இல்லையென்று கேள்விப்பட்டேன்.

ஸுந். ஆம். நேற்றுக்காலையில்தான் வந்தேன். என்ன விசேஷம்?

ராஜு. சென்ற வருஷம், ஆற்றுவெள்ளத்தில் பறைச்-சேரி முழுவதும் முழுகிப்போய், கழனிகளும் பாழாய்விட்-டன. அணைக்கட்டை மராமத்துசெய்யும்படி கலெக்டருக்குக் கொடுத்திருந்த மனு என்னவாயிற்றென்று தங்களுக்குத் தெரியுமோ? இப்போது வெள்ளம் வருகிற காலம் ஆயிற்றே. அந்த விஷயத்தைக் குறித்து விரைவில் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமே.

ஸுந். கலெக்டர் நம்முடைய மனுவை என்ஜினிய-ருக்கு அனுப்பியிருக்கிறார். அணைக்கட்டு மராமத்தும், வடக்கு ரோட்டில் கட்டவேண்டிய வாராவதியும் இன்னும் பத்து தினங்களுக்குள்ளாக ஆரம்பிப்பார்கள்.

ராஜு. நமது முனிஸிபல் பாடசாலையை ஹை ஸ்கூல் ஆக்கவேண்டுமென்று இரண்டு மூன்று வருஷகாலமாக முனிஸிபல் கௌன்ஸிலில் வார்த்தை நடந்துவருகிறது. இந்த வருஷமாவது அது நிறைவேறுமா?

ஸுந். நிறைவேறுமென்று எனக்குத் தோன்றவில்லை. அதற்கு நிரம்பப் பணம் வேண்டும். தண்ணீர்க் குழாய் போடுவதிலும் ஜலதாரை கட்டுவதிலும் முனிஸிபாலிடியார் அதிக பணம் செலவு செய்துவருகிறார்களே; ஹை ஸ்கூலுக்-குப் பணம் எங்கே கிடைக்கப்போகிறது?

ராஜு. முனிஸிபாலிடியார் புதிதாய்த் தண்ணீர் வரி போடப் போகிறார்களாமே. அந்தப் பணத்துக்கு என்ன செலவு?

ஸு. இப்போது நடக்கிற வேலைகளுக்காக வாங்கின கடனைத் தீர்க்கவேண்டாமா?

ராஜு. ஹைஸ்கூல் ஸம்பந்தமாக கவர்ன்மெண்டார் ஒன்றும் உதவி செய்யமாட்டார்களா?

ஸு. கவர்ன்மெண்டார் வித்யா விஷயமாய்ப் பணம் ஸஹாயம் செய்வது உண்மையே. ஆயினும் இப்போது ஸெகெண்டரி ஸ்கூல்களைவிட எலிமெண்டரி ஸ்கூல்களுக்குத்தான் அதிக ஸஹாயம் செய்கிறார்கள். அன்றியும், நமது ஹை ஸ்கூலுக்கு வேண்டிய பணம் முழுவதையும் அவர்கள் எவ்வாறு கொடுக்க முடியும்?

ராஜு. கலெக்டர் ஜமாபந்திக்கு வரும்போது நேரில் மனு செய்துகொண்டால் ஏதாவது நன்மை உண்டாகுமா?

க்ருஷ்ணன். அப்பா! ஜமாபந்தி என்றால் என்ன?

ஸு. வீட்டுக்குப் போகும்போது சொல்லுகிறேன். செட்டியாரே! கலெக்டரைக் கேட்பதற்குமுன்னே இந்த ஸர்க்கில் இன்ஸ்பெக்டரைப் பார்த்துப் பேசி அவர் கருத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவரைக் கேளாமல் முனிஸிபாலிடியாராவது டிரெக்டராவது ஒன்றும்செய்யமாட்டார்கள். ஆனால் அவரை எப்போதுபார்ப்பது என்பதுதான்தெரியவில்லை.

ராஜு. கடைவீதியில்தானே இருக்கிறார். அவரைப் பார்ப்பது என்ன கஷ்டம்?

ஸு. அவர் அல்ல. அவர் ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர். எலிமெண்டரி ஸ்கூல்கள் மாத்ரம் அவர் அதிகாரத்துக்கு உட்பட்டவை.

ராஜு. ஆனால் இன்ஸ்பெக்டர்களில் அநேக தராதரம் உண்டுபோல் இருக்கிறது.

ஸு. ஆம். சென்னை ராஜ்யத்தின் வித்யா விஷயமெல்லாம் டிரெக்டர் என்னும் அதிகாரிக்கு உட்பட்டது. இங்குள்ள ஜில்லாக்களை அநேக ஸர்க்கில்களாகப் பிரித்து ஒவ்வொரு ஸர்-

க்கிலுக்கும் ஒவ்வொரு இன்ஸ்பெக்டரை நியமித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஸர்க்கிலும் இரண்டு ஜில்லாக்களுக்குக் குறை-யாமலும் நான்கு ஜில்லாக்களுக்கு அதிகப்படாமலும் இருக்-கும். தவிர, யூரோபியன் ஸ்கூல்களுக்கும் ட்ரெய்னிங் ஸ்கூல்க-ளுக்கும் தனியாக ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். ஏறக்குறைய ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இவர்கள் இன்ஸ்பெக்டர்களுக்கு உட்பட்டவர்-கள். அன்றியும் ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு மூன்று ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர்கள் இருக்கின்றனர். இவர்-களுக்கு உதவிசெய்ய ஸூபர்வைஸர்களும் இருக்கின்றனர்.

இது மாத்ரம் அன்று. பெண்பிள்ளை ஸ்கூல்களுக்-கென்று மூன்று இன்ஸ்பெக்ட்ரெஸ்களும் மூன்று அஸிஸ்-டன்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ்களும், சில ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ்களும் இருக்கிறார்கள்.

ராஜு. இத்தனை பேருக்கும் வேலை இருக்கிறதா?

ஸுந். எலிமென்டரி, ஸெகண்டரி என்று ஸ்கூல்களில் இரண்டு விதம் உண்டு. எலிமென்டரி ஸ்கூல்களில் எல்லாப் பாடங்களும் ஸ்வபாஷையிலும், ஸெகண்டரி ஸ்கூல்களில் இங்க்-லிஷிலும் கற்பிப்பார்கள். ஸூபர்வைஸரும் ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டரும் நான்காவது வகுப்புவரையில் இருக்கிற எலி-மென்டரி ஸ்கூல்களை விசாரணை செய்கின்றனர். அதற்குமேல் வகுப்புகள் இருக்கிற ஸ்கூல்களை அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்-டர்கள் விசாரணை செய்கிறார்கள். இன்ஸ்பெக்டர் ஸெகண்டரி ஸ்கூல்களை விசாரணை செய்வதுடன் மற்ற ஸ்கூல்களுக்கும் அப்போதப்போது போய் மேல்பார்வை பார்ப்பது உண்டு.

ராஜு. ஸரி. நேரம் ஆய்விட்டது. நான் தங்களை ஸாவகாசமாய் தர்சனம் செய்துகொள்ளுகிறேன்.

ஸுந் நிரம்ப ஸந்தோஷம். நான் வருகிறேன்.

(எல்லோரும் போகிறார்கள்.)

39. ஜில்லா உத்யோகஸ்தர்கள்

இரண்டாம் பாகம்

இடம்: வக்கீல் ஸுந்தரையர் வீடு.] [காலம்: காலை.

[ஸுந்தரையரும் அவருடைய குமாரன் க்ருஷ்ணனும் உட்கார்ந்துகொண்டிருக்கின்றனர்.]

க்ருஷ். நேற்று ஸாயங்காலம் ஆற்றிலிருந்து திரும்பி வரும்போது ஜமாபந்தியைக் குறித்துக் கேட்க மறந்துவிட்டேன். அது இன்னதென்று இப்போது சொல்லுகிறீர்களா?

ஸுந். கலெக்டர், தம் ஜில்லாவில் முக்யமான சில இடங்களில், வருஷத்துக்கு ஒரு முறையாவது போய், கச்சேரி செய்வது வழக்கம். இதற்கு ஜமாபந்தி என்று பெயர். அப்போது தாசில்தாரர்களும் க்ராம உத்யோகஸ்தர்களும வந்து தீர்வை வஸூல் கணக்குகளைப் பைசல் செய்வார்கள். அப்போது குடிகளும் தங்களுக்கு உள்ள குறைகளைக் கலெக்டரிடத்தில் நேரில் தெரிவித்துக்கொள்ளலாம்.

க்ருஷ். க்ராம உத்யோகஸ்தர்களுடைய வேலைகளைப்பற்றி நான் வாசித்திருக்கிறேன். ஜில்லாவில் உள்ள மற்ற உத்யோகஸ்தர்கள் இன்னார் என்பதும் அவருடைய வேலை இன்னது என்பதும் எனக்குத் தெரிவிக்கவேண்டும்.

ஸுந். சொல்லுகிறேன். கவனமாய்க் கேள். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு கலெக்டர் இருப்பார். இவருக்குப் பலவித வேலைகள் உண்டு. இவர், தம் ஜில்லாவில் கலகம் இல்லாமல் ந்யாய விசாரணை ஸரியாக நடக்கிறதா என்று பார்த்துக்கொள்ளவேண்டும்.

நிலத்தீர்வையையும் மற்றும் உள்ள பலவித வரிசலையும் வஸூல் செய்ய வேண்டும். குடிகளுடைய நன்மைக்கு வேண்டியவைகளைச் செய்வதல்லாமல் அவர்களுடைய நிலை-

மையைப்பற்றி கவர்ன்மெண்டாருக்கு அடிக்கடி தெரிவித்துக்கொண்டிருக்கவேண்டும்.

க்ருஷ். இவ்வளவு வேலையும் கலெக்டர் ஒருவராய் எப்படிச் செய்வார்?

ஸாங். இவருக்கு அநேகர் உதவி செய்கின்றனர். ஒவ்வொரு ஜில்லாவையும் சில டிவிஷன்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு டிவிஷனிலும் ஸப் கலேக்டர், ஹேட் அஸிஸ்டண்ட் கலேக்டர், டெப்யுடி கலேக்டர் என்பவர்களுள் யாராவது ஒருவர் அதிகாரம் செலுத்துவர். இவர்களுக்கு ந்யாய விசாரணை செய்வதற்கும் அதிகாரம் உண்டு.

க்ருஷ். கொஞ்ச நேரத்துக்கு முன் தாசில்தார் என்று சொன்னீர்களே: அவருடைய வேலை என்ன?

ஸாங். ஒவ்வொரு ஜில்லாவையும் அநேக தாலூகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு தாலூகாவும் ஒரு தாசில்தாருடைய அதிகாரத்துக்கு உட்பட்டது. ஒவ்வொரு தாலூகாவிலும் சில ரேவின்யூ இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் க்ராம சிப்பந்திகளை மேல் விசாரணை செய்வதில் தாசில்தாருக்கு உதவி செய்கின்றனர். தவிரவும், தாலூகாவில் கஜானாவைப் பாதுகாத்துக் கணக்குகளை ஸரியாகப் பதிவுசெய்து வருவதற்காக சிரஸ்ததார் என்று ஒரு உத்யோகஸ்தர் உண்டு.

செய்யுள்

1. கல்வியின் பெருமை.

கற்கை நன்றே, கற்கை நன்றே :
பிச்சை புகினும் கற்கை நன்றே.
கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே. (வெற்றிவேற்கை)

2. வித்யா கர்வம்.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்(று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்.—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம். புலவீர் !
எறும்புந்தன் கையால்எண் சாண். (ஔவையார்)

3. நல்லார்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே. நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே. அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று. (மூதுரை)

4. மெய் : பொய்

மெய்யதைச் சொல்வா ராகில்,
விளங்கிடும் மேலும் நன்மை :
வையகம் அதனைக் கொள்வார்,
மனிதரில் தேவர் ஆவார்
பொய்யதைச் சொல்வா ராகில்,
போஜனம் அற்பம் ஆகும் :
நொய்யவர் இவர்க ளென்று
நோக்கிடார் அறிவுள் ளோரே.

5. மூடன் முதலியோர்

கருதியநூல் கல்லாதான் மூடனாகும்.
கணக்கறிந்து பேசாதான் கசடனாகும்.

ஒரு தொழிலும் இல்லாதான் முகடியாகும்.
ஒன்றுக்கும் உதவாதான் சோம்பனாகும்.
பெரியோர்கள் முன்னின்று மரத்தைப் போலும்
பேசாமல் இருப்பவனே பேயனாகும்.
பரிவுசொலிப் பேசினவன் பசப்பனாகும்.
பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவியாமே.

6. செருப்பு

கல்லும் உறுத்தாது : காலில்முள் தையாது :
நல்லவெய்யி லின்சூடும் ஏறாது :—தொல்லைவரு
மாலை இருளில் வழிநடக்கக் கூசாது :
காலில் செருப்பிருந்தக் கால். (தனிப்பாடல்)

7. குடை

பகலோன் சுடுகிரணம் பாய்பறவை எச்சம்
மிகமேல் படாதகற்றும் : விண்ணின்—முகிலதனால்
பெய்யுமழை யைத்தடுக்கும் : பேரழகு மாம் : ஒருவர்
கையில் குடையிருந்தக் கால்.

8. உழவு

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய்—ஊரருகே
சென்று வரவெளிதாய்ச் செய்வாரும் சொல்கேட்கில்
என்றும் உழவே இனிது.

9. ஏர் நடத்தலின் சிறப்பு

கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனின்புகழ்சால் இயலிசைநா டகநடக்கும் :
சீர்நடக்கும் : திறநடக்கும் : திருவறத்தின் செயல்நடக்கும் :
பார்நடக்கும்: படைநடக்கும்: பசிநடக்க மாட்டாதே. (கம்பர்)

10. பயிர்வளர்தலின் சிறப்பு

சீர்வளரும் ; மறைவளரும் : திறல்வேந்தர் முடிவளரும் :
பேர்வளரும் : வணிகருக்குப் பெருநிதியம் மிகவளரும் :

ஏர்வளரும் : திருவளரும் : இசைவளரும் : கடல்சூழ்ந்த
பார்வளரும் : காராளர் பயிர்வளருந் திறத்தாலே.

11. படிக்காசுப் புலவர் தம்மைச் சிறையிலடைத்த அரசனைப் பார்த்துப் பாடியது

நாட்டிற் சிறந்த திருமலையா நல்ல நாகரிகா !
காட்டில் வனத்தில் திரிந்துழலாமல் கலைத்தமிழ்தேர்
பாட்டில் சிறந்த படிக்காச னென்றொரு பைங்கிளியைக்
கூட்டில் அடைத்து வைத்தாய் இரைதாவென்று கூப்பிடுதே.

12. படிக்காசுப் புலவர் பாடலின் சிறப்பு

மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும் : பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைம்மணக்கும்: சொன்னாலும் வாய்மணக்கும்: துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினுடை நளினந்தானே.

13. திருக்குறள்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததன்பின்-- போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்கேட்க வீற்றிருக்க லாம்.

14. பதிலுக்கு பதில்

என்றும் ஒரு பட்டணத்தில் செட்டி மார்கள்
இருவர் அவர் சினேகமாய் இருக்கும் நாளில்,
ஒன்று துலாம் ஆயிரமாம் இருப்புக் கம்பி
ஒருவணிகன் வசத்தொருவன் வைத்துப்போய் நாள்
சென்று வந்தான். வருமுன்னே, " இரும்பை யெல்லாம்
தின்றுவிட்ட தெலி" என்றே சொல்லக் கேட்டு.

"நன்றதற்கு வந்ததென்ன போகு" தென்று
நண்புகொண்டு முன்போல நண்ணினனே. 1

விருந்து சமைத்தார்கள் எண்ணெய் தேய்த்துக்கொண்டு
மிக்கவவன் பிள்ளைதனக் கெண்ணெய் தேய்த்துப்
பொருந்துகுளம் தனில்மூழ்க என்றே அந்தப்
புதல்வனையும் தான்கூட்டிப் போனன். அங்கே
திருந்தியதோர் இடத்தொளித்து வைத்து மூழ்கித்
திரும்பிவந்தான். "பிள்ளை எங்கே" என்றான். "பிள்ளை
பருந்தெடுத்துப் போய" தென்றான். சண்டையாகிப்
பட்டணத்து வழக்கர்முன்னே பகர்ந்தான் ஈன்றோன். 2

"பருந்து பிள்ளை தனையெடுத்துப் போமோ? என்ன
பரிகாசம்?" என்றுவழக் காளர் சொல்ல,
"இரும்பு துலாம் ஆயிரத்தைக் குறையாமல் தான்
எலிதின்றால் பிள்ளைபருந் தெடாதோ?" என்னக்
"கரும்பொன்ன னதைமுழுதும் கொடுத்தா யாகில்
கடுக அவன் உன்பிள்ளை கொடுப்பான்" என்றார்.
இரும்பு துலாம் ஆயிரமும் கொடுத்து விட்டே
இனிய பிள்ளை தனைமீட்டுக் கொண்டு போனன். 3

(பஞ்சதந்த்ரம்)

15. பொற்காப்புக் காசைப்பட்ட ப்ராம்மணன்

மூப்புடைப் புலிதா னென்று
மூழ்கியோர் எரியின் கீழ்க்
காப்புடன் தருப்பை தன்னைக்
கையில்வைத் திருக்கும் போது
நாப்புடை மறைவலாளன்
நண்ணியவ் வழியில் செல்லக்
கூப்பிடல் செய்தன் னோனைக்
குறித்தந்தப் புலிதான் சொல்லும்.

"அந்தணா இந்தக் காப்பை
அளிப்பன் நீ வா" வென் றோதச்

சிந்தையில் ஆசை கூர்ந்து
செப்புவான் "புலியாரே நீர்
வெந்துயர்க் கொலைமாந்தர்க்கு
விளைப்பது விட்டுத் தானம்
எந்தநல் வழியிற் செய்வீர்?
எனக்கதைக் கூறும்" என்றான். 2

புலியது கேட்டு "நானோ
பூசுரா! நகமும் பல்லும்
இலன்கிழம் ஆனேன். பாவம்
இழைப்பது விடுத்து, நாளும்
பொலிதரு தானம் செய்கை
பொருளெனக் கொண்டேன். அஞ்சேல்.
சலமதில் மூழ்கி வந்து
தருமிதைக் கைக்கொள்" என்ன, 3

நன்றென மறையோன் மூழ்க
நண்ணினன் ஏரி நீரில்.
அன்றவன் கால்கள் சேற்றில்
அழுந்திடத் திகைத்து நின்றான்.
சென்றது புலி "நான் உன்னைச்
சேற்றினின் றெடுப்பேன்" என்னக்
கொன்றது; ரத்தந் தன்னைக்
குடித்தது களித்த தன்றே. 4

16. துஷ்டபுத்தி கெட்ட கதை

துட்டபுத்தி என்பவன் தன் பிதாவும் தானும்
துர்ச்சிந்தை யால்கெட்ட கதையைச் சொல்வேன்:—
பட்டணமொன் றுண்டதிலே வணிகர் பெற்ற
பாலர் இருவோர். ஒருவன் தரும புத்தி.
துட்டபுத்தி மற்றொருவன், இவர்கள் கூடித்
தூரத்தில் பொருள்தேடப் போனார். லாபம்
கட்டமுடன் தருமபுத்தி ஆயிரப்பொன்
காணமற்றோன் நட்டத்தால் இடருற் றானே. 1

" ஆயிரம்பொன் கிடைத்திருந்தும் விசாரம் என்ன?
ஐந்நூறைந் நூறுகப் பகுத்துக்கொள்வோம்.
நீ இரங்க வேண்டாம்" என்றுரைத்து, வைத்த
நேசத்தால் தருமபுத்தி கூட்டிப் போக,
" ந்யாயமல்ல இதைஊரில் கொண்டு போதல்.
நாம் இந்த மரத்தின்கீழ்ப் புதைத்து வைத்துப்
போய்இதனை மற்றொருநாள் எடுத்துப் போதல்
புத்தி" என்றே துட்டபுத்தி போதித் தானே. 2

அன்னவன்சொற் படிகேட்டோர் மரத்தின் கீழே
ஆயிரம்பொன்னையும் புதைத்து வைத்துப் போனார்.
பின் இரவில் துட்டபுத்தி கொண்டு போனான்.
பிறகொருநாள் இருவருமாய்க் கூடிக்கொண்டு,
பொன்இருந்த இடம்பார்த்தார்: காணார். "துட்ட
புத்திநீ இதைஎடுத்துப் போகல் ஆமோ?"
என்ன, அவன் "நீ எடுத்துப் போனாய்" என்ன,
இருவரும்போய் வழக்கர் முன்னே ஏறினாரே. 3

ஒருவர்மே லேஒருவர் சாற்ற, அந்த
ஊர்வழக்கர் "சாட்சிபிறர் உண்டோ" என்ன,
" இருவருமே அறிந்ததல்லால் பிறர் அங் கில்லை"
என்றுதர்ம புத்திசொல்ல, "இதற்குச் சாட்சி
மரம்உரைக்கும்" என்று துட்டபுத்தி சொல்ல,
வழக்கர் எல்லாம் அதிசயமாய் "மரதைக் கேட்போம்.
இருள்விடிந்த பின்வாரும் நீங்கள்" என்றார்.
இல்லிடத்துக் கவரவரும் ஏகினாரே. 4

துட்டபுத்தி தன்னுடைய பிதாவை "அந்தத்
தொன்மரப்பொந் தொளித்திது நீசொல்வாய்" என்ன,
" நட்டம்வரும் நீ நினைத்த நினைவினாலே
நமக்கின்று. முன்னம் ஒரு நாகம் கொக்கின்
முட்டைதனைக் களவுகொள்ளக் கொக்கு நண்டின்
மொழிப்படியே, கீரிவளை தொடுத்துப் பாம்பின்
வட்டவளை மட்டாக மீனைப் போட,
வந்தொருகீ ரியும் பாம்பை வதைத்தது" என்ன, 5

தந்தைஉரைத் ததுங்கேளான் வலிமை யாலே
தான் இழுத்துப் போய் இருளில் தருவின் ஆழ்ந்த
பொந்தின்உள்ளே அங்கவனை வைத்து மீளப்,
பொழுதுவிடிந் ததன்பின்பு வழக்கர் கூடி,
வந்துநின்று கேட்க, அவன் "தர்மபுத்தி
வணிகன் எடுத்தான்" என்றே கூறலோடும்,
சிந்தைஅதி சயமாகி வழக்கர் "ஈது
செப்பினது புதுமை" என்றே செப்பினரே. 6

"இதுகபடம்" என்று தர்மபுத்தி எண்ணி
எறிமரப் பொந்தில்எரி தழலை மூட்ட,
அதில்இருந்த கிழவணிகன், பதைத்து வீழ்ந்தே,
"ஐயகோ துட்டபுத்தி கெடுத்தான்" என்ன,
மதியுடைய வழக்கரும்போய் அரசர்முன்னே
வகுத்தலுமே அவன் தன்னை வதைத்தார். தந்தை
குதிகொள் அனலால்வெதும்பி மாய்ந்தான். பொன்னும்
குறையாமல் தர்மபுத்தி கொண்டுபோனன்.

மாதிரிக் கேள்விகளும் அப்யாஸங்களும்

வசனம்

பாடம்.

1. (*a*) முட்டை பொரிந்ததுமுதல் தவளை பெரிதாய் வளர்கிற வரையில் உருமாறுகிற பல விதங்களையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கி எழுதுக.

(*b*) தவளையின் முட்டைகள்; தவளைக்குஞ்சு; பெரிய-தவளை. உங்களுக்கு இஷ்டமான இரண்டைப் பார்த்து ட்ராயிங் எழுதுக.

2. (*a*) தென்னமரம் பார்ப்பதற்கு எவ்வாறிருக்கும் என்பதைப் பத்து வரிக்கு அதிகப்படாமல் விளக்கி எழுதுக.
(*b*) தென்னமரத்தை ட்ராயிங் எழுதிக்காட்டுக.

3. (*a*) 5-வது பக்கத்திலுள்ள படத்திலிருக்கும் தென்னையின் பாகங்களைப்பற்றி உங்களுக்குத் தெரிந்த ஸங்கதிகளை எழுதுக. அவைகளில் ஒன்றை ட்ராயிங் எழுதிக்காட்டுக.

(*b*) தேங்காயோடு, தேங்காயெண்ணெய்: இவைகளின் உபயோகங்கள் என்ன?

4. (*a*) பருமனுனவரை என் மறைவாகப் படுத்துக்கொள்ளும்படி செய்தார்கள்? (*b*) ஸ்நேஹிதர்கள் பரிஹாஸம் செய்தார்களென்று பருமனுனவருக்கு எவ்வாறு தெரிந்தது?

1-5. (*a*) உபாயம், குமிழி, நபர், பரிமாணம், போதாதகாலம், பானம், போதை: இந்த வார்த்தைகளின் அர்த்தம் தெரிந்துகொண்டதற்கு அடையாளமாக ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்யத்தில் வைத்துச் சொல்லுங்கள்.

(*b*) கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்தெழுதுக:--1. பின்னங்காலில் உள்ள — தவளை நீஞ்சுவதற்கு—2. தேங்காய் மட்டையின்—நார் அடர்ந்தும்—மழமழப்பாகவும் இருக்கும். 3. வாயுவுக்கு நிறமும்——இல்லை: அதற்கு—உண்டு.

6. (a) தீவிலிருந்த மிலேச்சர்கள் வழையின்மீது பட்சமாயிருந்தது ஏன்? தனவானை ஏன் கொல்லப்பார்த்தார்கள்?

(b) நாசம், தொந்தரவு, நாகரிகம், தீவு, மாலுமி, மரித்தல்: இவைகளை ஒவ்வொரு வாக்யத்தில் வைத்து எழுதுக.

(c) க்ரமம், ஸந்தோஷம், இல்லே, உபகாரம்: எதிரிடையான சொற்கள் என்ன?

7. கோளம், ஸ்வயம் ப்ரகாசம், ஜோதி: அர்த்தம் என்ன?

8. ஜலத்தின் உபயோகங்களில் சிலவற்றைச் சொல்லுக.

9. நதி எங்ஙெந்த விதத்தில் உபயோகமாகிறது?

10. (a) மீனின் ரூபத்தைப்பற்றிய விசேஷங்களைச் சுருக்கமாக எழுதுக.

(b) மீனைப்போல் உருவப்படம் எழுதிக்காட்டுக.

6-10. (a) ஸ்தூலபதார்த்தம், ஊர்தல், ஊடுருவுதல், உற்பத்தி ஸ்தானம், கல்மஷம், ஸௌகர்யம்: ஒவ்வொரு வாக்யத்தில் வைத்தெழுதுக.

(b) கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்தெழுதுக —1. பூமி — சுற்றிவருகிறது. 2. பால், எண்ணெய் முதலியவைகளைப் போன்ற நெகிழ்ச்சியுள்ள பொருள்களெல்லாம்—.

11. (a) ஊமைக்கும் மற்றவர்களுக்கும் வித்யாஸம் என்ன?

(b) சொல்லாவது யாது? (c) பாஷை என்பது என்ன?

12. (a) சோளம், கேழ்வரகு, கோதுமை, கம்பு: இவைகளில் ஒவ்வொன்றைப்பற்றியும் உங்களுக்குத் தெரிந்த ஸங்கதிகளை எட்டு வரியில் எழுதுங்கள்.

(b) கோதுமைக் கதிரையாவது சோளக் கதிரையாவது ட்ராயிங் எழுதுக

13. ராமனுக்கும் கோபாலனுக்கும் நடந்த ஸம்பாஷணையைக் கதை ரூபமாகச் சுருக்கி எழுதுக.

ராமனுக்கும் கோபாலனுக்கும் நடந்த ஸம்பாஷணையை இரண்டு பிள்ளைகளைக் கொண்டு நாடகரூபமாக நடிக்கச் செய்யலாம்.

14. (a) ஆலமரம், புளியமரம், மாமரம், பலாமரம்: ஏதாவது

ஒன்றைப்பற்றி உங்களுக்குத் தெரிந்த ஸங்கதிகளை எட்டு வாக்யத்துக்குக் குறையாமல் விவரித்தெழுதுக.

(*b*) புளியங்காய், மாங்காய், பலாக்காய், மாவிலை, பலாவிலை: ஒவ்வொன்றையும் ட்ராயிங் எழுதிக்காட்டுக.

15. ந்யாயாதிபதி ஸொத்துக்குரியவன் இன்னான் என்பதை எவ்வாறு கண்டுபிடித்தார்?

11-15. (*a*) கம்பீரம், ஸ்வதந்த்ரம், க்ஷாமகாலம், பாங்குபரிசனை, வாக்குமூலம், வ்யவஹாரம்: ஒவ்வொரு வாக்யத்தில் அமைத்தெழுதுக.

(*b*) கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை வைத்தெழுதுக:—1. ஆலமரத்தின் கிளைகளிலிருந்து — முளைக்கும்: இவை—பூமியில்—மரக்கிளைகளுக்கு—. 2. புளியங்கிளைகளை—எரிக்கவும் அடிமரத்தை—செய்யவும் நமது தேசத்தில் உபயோகிக்கிறார்கள்.

16. வ்யாதி உண்டாகிற காரணங்களில் சிலவற்றைச் சொல்லுக.

17. 35-வது பக்கத்தில் உள்ள தபால் பெட்டியைப்போல் ட்ராயிங் எழுதுக.

18. அரையணச் செலவில் ஒரு கடிதம் அதி சீக்ரத்தில் நெடுந்தூரம் போய்ச் சேர்வது எப்படி ஸாத்யமாகிறது?

19 (*a*) சிலந்தி எவ்வாறு வலை கட்டுகிறது?

(*b*) சிலந்தியையும் சிலந்தி வலையையும் ட்ராயிங் எழுதிக்காட்டுக.

20. பால் எவ்வெவ்விதமாய் உபயோகமாகும்?

16-20. (*a*) உத்தமம், தத்தளித்தல், நிரஸவஸ்து, நோக்காடு, பிரையிடுதல், விஷவாயு: அர்த்தம் சொல்லுக.

(*b*) அறி, அரி: கறி, கரி: சுற்றி, சுத்தி: பிறை, பிரை: அர்த்தம் எழுதுக.

21. கோடிட்ட இடங்களில் பொருத்தமான பெயர்ச்சொல், ஒவ்வொன்று வைத்து எழுதுக:—1. நாங்கள் குடியிருக்கிற—இங்கிருந்து இரண்டு மைல் இருக்கும். 2. என்—கிழிந்துபோயிற்று. 3. நீ—பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை.

4. மல்லிகைப் பூவின் நிறம்—. 5. தோட்டத்துக்குப் போனால் பழங்கள்—தான் எங்களுக்கு வேலை. 6. எண்சாண் உடம்பில்—ப்ரதானம். 7—மிதித்துக் குஞ்சு முடமாகுமா? 8. கல்மேல்—கலையுமா.

22. யானையின் அடிச்சுவடுகளைப் பார்த்து ஜீவகன் தன் ஸ்நேஹிதர்களிடத்தில் என்ன சொன்னான்?

23. கோமுட்டியை விருந்துக் கழைத்தபோது ந்யாயாதிபதி அவனிடம் என்ன சொன்னார்?

24. ஸாமான்களைக் கொடுக்கும்படி இரண்டாமுறை கோமுட்டியைக் கேட்டபோது, கோமுட்டி வர்த்தகனிடத்தில் சொன்னதென்ன?

25. 53-வது பக்கத்திலுள்ள படத்திலிருக்கும் மூன்றுவித வேர்களையும் ட்ராயிங் எழுதிக்காட்டுக.

21-25. அனுமானப்ரமாணம், அடிச்சுவடு, அலைக்கழித்தல், ஆயுள்வேதம், எச்சரிக்கை, சித்ரம்பேசுதல், தாரதரம், தேசாந்தரம், நாற்கோணம், நிராசை: ஒவ்வொரு வாக்யத்தில் வைத்தெழுதி அர்த்தமும் எழுதுக.

26 பரிபாலனம், ஜாதிபேதம், பஞ்சமன், வனவாஸம்: அர்த்தம் சொல்லுக.

27. 56-வது பக்கத்திலுள்ள படத்திலிருக்கும் தண்டுகளை ட்ராயிங் எழுதுக.

28. இந்தக் கதையை 12 வாக்யத்தில் சுருக்கி எழுதுக.

29. 60-வது, 61-வது பக்கங்களில் உள்ள படங்களைப்போல் ட்ராயிங் எழுதுக.

30. கோடிட்ட இடங்களில் பொருத்தமான ஒவ்வொரு வினைச்சொல்லை அமைத்தெழுதுக:-1. அக்காள் சோறு-2. இடையன் பால்—. 3. பூனையைக் கண்டால் எலி—. 4. புல் வயலில் மாடு -. 5. மேகத்தைக் கண்ட மயில்—. 6. மீன் ஜலத்தில்—. 7. குலையாத நாய் சுதிகாலை—. 8. கனிந்த பழம் தானே—. 9. சூடுண்டபூனை அடுப்பங்கரை—10. தேனுள்ள இடத்தில் ஈ—.

31. தேனீயினால் செடிகளுக்கு என்ன உபயோகம்?

32-33. நன்றியறிவுள்ள நாயின் கதையைச் சுருக்கி எழுதுக.

34. 70-வது பக்கத்திலுள்ள படத்தையும் 71-வது பக்கத்திலுள்ள படத்தையும் உற்றுப்பார்க்கையில், அவைகள் ஒன்றுக்கொன்று எந்த விதத்தில் வித்யாஸப்படுகின்றன?

35. மாணாக்கருக்குரிய முக்யமான கடமைகள் என்னென்ன?

36. மாசிலாமணி முதலியார் ஞானசிகாமணிப் பிள்ளைக்கு என்ன எழுதியிருந்தார்?

37. மேற்படி கடிதத்துக்கு ஞானசிகாமணிப்பிள்ளை என்ன வென்று பதில் எழுதினார்?

38. பள்ளிக்கூடங்களில் எத்தனை விதம் உண்டு? வித்யா ரணை செய்யும் அதிகாரிகள் எவர்? அவர்களுடைய யின் விவரம் என்ன?

ராஜூசெட்டிக்கும் ஸுந்தரையருக்கும் நடந்த ஸம்பாஷ இரண்டு பிள்ளைகளைக்கொண்டு நாடகரூபமாக நடிக்கச் லாம்.

39. ஜமாபந்தி இன்னதென்பதை 5 வரியில் விளக்கமாக துக.

செய்யுள்

15. இந்தக் கதையை வசனமாக எழுதுக.

16. இந்தக் கதையை 20 வாக்யங்களில் அடக்கி எழுதுக

PRINTED AT THE S.P.C.K. PRESS, VEPERY, MADRAS—B. 1

லாங்மன்ஸ் தமிழ் காபி புஸ்தகங்கள்.

இவை கையெழுத்து கற்பிக்கும் முறையில் நிபுணர்களுடைய அபிப்ராயத்துக் கிணங்கத் தயார் ஆனவை. ஒவ்வொன்றும் இருபது பக்கம் அடங்கியது; உயர்ந்த தனமான காபி காகிதத்தில் அச்சிட்டிருக்கிறது. ஒவ்வொன்றின் விலை, 2 அணா.

முக்யமான லக்ஷணங்கள். 1. எழுத்துக்களின் வடிவம் ஸுலபமாயும் தெளிவாயும் இருக்கின்றன. 2. எழுத்துக்களின் ரூபத்தைத் தழுவி, முதலில் ஸுலபமான எழுத்துக்களும் போகப் போகக் கடினமானவைகளும் சேர்த்து, அப்யாஸங்களைத் தாண்டுகோல் பாய்ச்சலின்றி வரிசை க்ரமமாகத் தொடுத்திருப்பதால், பிள்ளைகள் வெறுப்பில்லாமல் விருப்பத்துடன் அப்யாஸிக்கலாம். 3. எழுத்துக்களின் ரூபத்தைத் திருத்தமாகப் பழக்கும் வண்ணம், பாலபுஸ்தகங்களிலுள்ள ஒவ்வொரு அப்யாஸத்திற்கும், எழுத்துச்சுவடுகளும், நடுக்கோடும், எழுத்தின் அளவைக் குறிக்கும் மற்றும் சிறிய கோடுகளும் சேர்த்திருக்கின்றன. 4. அப்யாஸங்கள், பொருள் எளிதில் விளங்கும்படியாகவும், அந்தந்த வகுப்பில் கற்கும் மற்ற பாடங்களைத் தழுவியும் இருக்கும்.

I. புஸ்தகம். 2-ம் வகுப்புக்கு. எழுத்துக்கள்; எளியசொற்கள்.
II. புஸ்தகம். 3-ம் வகுப்புக்கு. சொற்கள்; எளிய வாக்யங்கள்.
III. புஸ்தகம். 4-ம் வகுப்புக்கு. பூகோள சாஸ்த்ரம்.
IV. புஸ்தகம். 5-ம் வகுப்புக்கு. ,,
V. புஸ்தகம். 6-ம் வகுப்புக்கு. ,,

[மதராஸ், கொச்சி, புதுக்கோட்டை வித்யா விசாரணைக்கர்த்தர்கள் அங்கீகரித்தவை.]

லாங்மன்ஸ், க்ரீன் அண்ட் கம்பனியார் ப்ரசுரித்திருக்கும் தமிழ்ப் புஸ்தகங்கள்

* [சென்னை டிரெக்டர் அவ் பப்லிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் ஸர்க்கார் பாடசாலைகளில் உபயோகிக்கலாம் என்று அங்கீகரித்தது.]

† (சென்னை வித்யாவிசாரணைக்கர்த்தர்கள் அங்கீகரித்தது.)

---

† * லாங்மன்ஸ் தமிழ் வாசக புஸ்தகங்கள். இவை W. துரைஸாமி அய்யங்காரும், சென்னை பச்சையப்பன் காலேஜ் தி. செல்வக் கேசவராய முதலியாரும் எழுதியவை.

† * முதல் வகுப்பு.	2 அணு	† * மூன்றும் வகுப்பு.	3 அணு
† * இரண்டாம் ,,	$2\frac{1}{2}$,,	† * நான்காம் ,,	4 ,,

கே. ஏ. வீராகவாசார்யர், பி.ஏ., எழுதியவை.

† * பூமி வர்ணனை-முதல் புஸ்தகம் படங்களுள்ளது.	$7\frac{1}{2}$ அணு
† * பூகோள சாஸ்த்ரம் : சென்னை ராஜ்யம். படங்களுள்ளது	$4\frac{1}{2}$,,
† * இந்திய சரித்திரக் கதைகள். படங்களுள்ளது	5 ,,
† * இந்திய சரித்ரம். படங்களுள்ளது	12 ,,

தென்னிந்திய சரித்ரக்கதைகள் வி. ஹயவதனராவ், பி.ஏ., பி.எல்., எழுதியது. படங்களுள்ளது. ... 5 அணு

லாங்மன்ஸ் தமிழ் காபி புஸ்தகங்கள். நெ. I, II, III, IV, V. ஒவ்வொன்றும் 20 பக்கங்களுள்ளது ... ... 1 அணு

லாங்மன்ஸ் ப்ராக்டிகல் அரித்மெடிக்குகள்.

விசாகபட்டணம் ஏ. வி. என் காலேஜ் ப்ரின்ஸிபலாகிய பி டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், எம். ஏ., எழுதியவை.

† * முதல் புஸ்தகம். பிள்ளைகளுக்கு	2 அணு
† * முதல் புஸ்தகம். உபாத்யாயர்களுக்கு	8 ,,
இரண்டாம் புஸ்தகம். பிள்ளைகளுக்கு	8 ,,
இரண்டாம் புஸ்தகம். உபாத்யாயர்களுக்கு ...	1 ரூபா

---

† * லாங்மன்ஸ் நூதன பாலர் இலக்கணம். இது எஸ். ஸுந்தரேச பாரதியார் இயற்றியது ... ... 2 அணு

இந்திய கிண்டர்கார்ட்டன். வி. எல். இல்லிங்ஹாம் இங்கிலீஷில் எழுதிய புஸ்தகத்தின் மொழிபெயர்ப்பு. படங்களுள்ளது ... ... விலை 12 ,,

---

லாங்மன்ஸ், க்ரீன் அண்ட் கம்பனி,

167, மௌண்ட் ரோட், மதராஸ், பொம்பாய், கல்கத்தா